# காமாட்சி தவசு




தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 214

# காமாட்சி தவசு

பதிப்பாசிரியர்:

புலவர். **ச. திலகம்,** B.Litt.,
தமிழ்ப்பண்டிதர்(ஓய்வு)
சரசுவதி மகால் நூல்கம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும் ஆய்வு மையம்**

தஞ்சாவூர்.

2014] [விலை ரூ. 110

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | காமாட்சி தவசு |
| பதிப்பாசிரியர் | : | புலவர் ச. திலகம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 214 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2014 |
| தாள் | : | **TNPL** *18.6* கி. கி |
| நூல் அளவு | : | 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 92 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுகோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | புராணம் |
| விலை | : | ரூ. 110 |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டு தனிச் சிறப்புடன் விளங்குவது தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம். தமிழிலும் வடமொழியிலும் மற்றும் பல கலைகளிலும், சாஸ்திரங்களிலும் வல்லவரான பெரியோர்கள் பல நூல்களைப் பரிசோதித்துச் சேர்த்தும், பல புதிய நூல்களை எழுதியும் உள்ளனர் பல பெரியோர்கள் அரிய இலக்கண இலக்கிய சாஸ்திரச் சுவடிகளை அன்பளிப்பாக தந்துள்ளார்கள் அவ்வரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது இந்நூலகம். அவ்வரிசையில் **காமாட்சி தவசு** என்னும் இந்நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

இந்நூல் சக்தியின் அம்சமான காஞ்சீபுரம் காமாட்சி அம்மனைப் பற்றியதாகும். காமாட்சி அம்மன் ஏகாம்பரநாதனை மணம் செய்து கொள்ள காஞ்சியில் உள்ள கம்பை நதிக் கரையில் தவசு இருந்து மணம் செய்துகொண்ட வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறது. இந்நூல் பாமர மக்களும் படித்து அறிந்துகொள்ளும் வண்ணம் எளிய நடையில் சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நூலை மிக்க ஆர்வத்துடன் சிறப்பாகப் பதிப்பித்துத் தந்த சரசுவதி மகால் நூலக முன்னாள் தமிழ்ப்பண்டிதர் திருமதி ச. திலகம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர்முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக அழகான இலக்கிய நயத்துடன் விளங்கும் இந்நூல் சிறிதாயினும் படிப்போர்க்கு பேரின்பம் பயக்கும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
09-05-2014

**டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப.,
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

# முன்னுரை

'' கருணையே வடிவாங் காமாட்சி தேவி
கருதிடு மடியேன் மனத்து
மருவியே நீயும மாண்பொடு தங்கி
மாமய லகற்றுத லோடு
பெருகிடு வாழ்வும் இன்பமும் விளங்கப்
பிரியமோ டருள்செயல் வேண்டும்
அருமறை புகழுஞ் சிவமெனுங் கனலொடு
அமைந்தசிற் ஜோதியம் பிகையே. ''

உலகங் கடந்த முதல்வன், உலகில் உயர்ந்த பிறப்பெடுத்த மக்கள் தன்னை ஒருவாரு விளங்கக் கண்டு வழிபட்டு, மனக் கவலையும் துன்பமும் இன்றி இன்ப நல்வாழ்வு வாழ்தற் பொருட்டு திருவுருவங்களையும் உண்மையாம் பெரியநல் அடையாளங்களையும் கொண்டு எழுந்தருளியுள்ள அருள்நிலைத்தானங்களே திருக் கோயில்கள் ஆகும். மேலும் எந்நாட்டினரும் எத்துணை முன் னேற்றம் பெற்றவரும் அவற்றால் சிரம் தூக்கி நிற்போரும் சிரம் தாழ மனம் நெகிழ அங்கம் குறுகி நின்று ஒப்பதும், மிக்கதும் இல்லை என்று ஒத்துக்கொள்வதாய் அமைந்து, நம் பண்டைக் கலைத் திறனையும் சமய உணர்வையும் நம் தாயகத்தின் தெய்வீகத்தையும் உணரவைத்து உலகெங்குமுல்லோரிடையே நம் நாட்டிற்கும் கலா சாரம் — பண்பாட்டிற்கும் பெருமதிப்பைத் தேடித்தருவது நம் முன்னோர் நமக்குச் சமைத்துத் தந்த, நமக்குச் சொத்தாக விட்டுச் சென்ற விண்ணளாவிய கோபுரங்களும் வியத்தகு சிற்பங்களும் கொண்ட கட்டிடக்கலையின் கரையையே எட்டிவிட்ட எழில்மிக்க இத் திருக் கோயில்களை தாம் வாழும் ஊரின் இதயத்தானமாகவே கொண்டு போற்றி வத்துள்ளனர்.

## சக்தி வழிபாடு

திருவருளே சக்தி என்பர். அதன் வடிவமே ஞானம். '' சக்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானம் '' என்பது சித்தியர் வாக்கு முழுமுதற் கடவுளாய் விளங்கும் அம்மையப்ப ராகிய சிவபெருமானை விட்டுப் பிரியாது அவருடனுய் நிற்கும் அருள் சக்தி எனப்படும். அக்னிக்கு உஷ்ணம் போலவும், சூரியனுக்குக் கிரணம் போலவும், சிவனுடன் சக்தி இணைபிரியாமல் கூடவே

தோன்றியவள். சிவன் எப்படி ஆதியில்லாத பரம்பொருளோ அதேபோல சக்தியும் அனாதி இச்சக்தியைப் பெண் தெய்வமாக உபாசிப்பது சாக்தம் எனப்படும்.

அம்பாளுடைய உபாசனையானது மிக உயர்ந்தது. ஸ்ரீவித்யா மந்திரத்தின் உபதேசம் பெற்று, ஸ்ரீசக்ர விவரணங்களை நன்கு ஆராய்ந்து அறிந்து பூஜிப்பவர்களுக்குக் கிடைக்காத பேறு ஒன்றுமே கிடையாது. எவனுக்கு மறுபிறவி என்பது கிடையாதோ அவனுக்குத்தான் அந்த பாக்கியம் கிடைக்கும். பராசக்தி பலவித மான பிலரூபமாயும், யந்திர ரூபமாயும், பிம்பரூபமாயும், தனது இன்னும் பல ரூபமாயுமிருந்து தனது ஆதிக்கத்தைக் காட்டுகின்ற தலங்கள் பல இருப்பினும் பராசக்தி பிலயந்திர பிம்ப ரூபமாயிருக் கின்ற அற்புதக்காட்சியையும், விஷ்ணு சொரூபமாயிருக்கின்ற மோகனக் காட்சியையும் விளக்குவது காஞ்சிபுரம் என்னும் தல மாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சியைப்பற்றி பல நூல் களில் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

## காஞ்சிபுரம் என்றதற்குப் பெயர்க்காரணம் :

கச்சிப்பதியென்று தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது. காஞ்சனமென்பது பொன்னுக்குப் பெயரானதுபற்றி காஞ்சனபுரம் என்பது மருவிக் காஞ்சிபுரமென்று ஆயிற்று என்று கூறுவார் ஒரு சாரார். ஒரு காலத்தில் இது பைம்பொன் போன்று ஒளி மிளிர்வதா யிருந்த காரணத்தினால் அவ்விதம் அழைக்கப் பெற்றிருக்கலாம் என ஊகிக்கலாம். சங்க நூல்களில் பொன்னெயிற் காஞ்சி, பொன் னகர்க் காஞ்சி என்றும் கூறப்பட்டுள்ளது. பின்னும் சிலர் காஞ்சி மரங்கள் நிறைந்த காடாக ஒரு காலத்தில் இருந்தமையால் இது இப்பெயர் பெற்றிருக்கலாம் என்றும் புகல்கின்றனர். இதன் புராதனப் பெயர் காஞ்சிபுரம். ஆகையினால் அப்பெயரையே நிலை நாட்ட மக்கள் முயற்சிப்பது பொருத்தமானதாகும்

## காஞ்சி நகர்ச் சிறப்பு

'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்னும் முதுமொழிக் கேற்ப சீரும் சிறப்பும் பெற்று நிலமகட்குத் திலகம் போல் விளங்குவது இக்கச்சியம்பதியாகிய காஞ்சிபுரம் காசிக்கு இணையான புண்ணிய நகரம். இது தமிழ் நூல்களில் கச்சி மாநகர் என்றும், பாகவத புராணத்தில் சத்திய விரத க்ஷேத்திரம் என்றும் சொல்லப்படுகிறது.

காஞ்சிமாநகர் பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதத் தலங்களுள் முதன்மையான பிருதிவி தலமாகவும், முத்திதரும் ஏழு தலங்களாகிய அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை இவற்றின் முதன்மையாம் காஞ்சிநகர் என்ற பெயர் பெற்றதும், ''நகரேஷு காஞ்சி'' என்று காளிதாச மகாகவியால் போற்றப்பட்டதும் ஆகும். இந்நகருக்கு 1) காஞ்சிபுரி, 2) பிரளயசித்து, 3) சிவபுரம், 4) விண்டுமாபுரம், 5) திரிமூர்த்தி, 6) பிரமபுரம், 7) காமபீடம், 8) தபோவனம், 9) சகலசித்தி, 10) கன்னிகாப்பு, 11) துண்டீபுரம், 12) தண்டகபுரம் என்னுந் திருநாமங்கள் உண்டு. இதைத் திருக்கச்சி, சத்திய விரத க்ஷேத்திரம், திவ்விய க்ஷேத்திரம், த்வாத சாந்தீதமுக்தி க்ஷேத்திரம், காமகோடிபுரி, தைஜஸ க்ஷேத்திரம், சக்தி க்ஷேத்திரம் முதலிய பற்பல பெயர்களும் வழங்கப்படுகின்றன.

இதனை,

''இப்படி யாவரும் மெய்திய திறனால்
ஒப்பன போல உரைத்திட லொப்போ
அப்பதி யேயத னுக்கிணை யன்றிச்
செப்பரி தாற்பிற சீர்கெழு காஞ்சி.''

எனவும்,

வானேக்கி நிற்கு முகனென்னவு மன்னவன்செங்
கோனேக்கி நிற்குங் குடியென்னவுங் கோதிலும்
ஆனேர்க்கு பிளக ருலகோர்க்கு மவுனியோர்க்கும்
ஏனேர்க்கு நாடு

எனவும் நகராகி இருந்ததவ்வூர் எனவும் போற்றிப் போந்தார் கந்தபுராண ஆசிரியராகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், சமய குரவர் நால்வராலும் பாடப்பெற்றதுவும், சுந்தரர் இடதுகண் பார்வை பெற்ற சிறப்பு வாய்ந்ததும் கச்சியம்பதி திருக்குறளுக்கு பேருரை எழுதிய பரிமேலழகரும், கந்தபுராணம் பாடிய கச்சியப்பரும், 63 நாயனமாரகளுள் திருக்குறிப்புத் தொண்டரும், ஐயடிகள் காடவர் கோனும் திருவவதாரம் செய்த புண்ணிய நகரம் இதுவே. மேலும் வடகலே ஸ்தாபிதம் செய்த வேதாந்த தேசிகரும், பொய்கையாழ்வாரும் அவதரித்த புண்ணிய நிலம் இதுவாகும். கமலேயில் பிறக்க, காஞ்சியில் வசிக்க, காசியில் இறக்க முக்தி என்றும், கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சியில் பிறக்க வேண்டும் என்றும் கூறபபடுகின்றன.

**கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா ! நீகிடக்க வேண்டா — துணிவுடைய
செந்நாப் புலவனும் யான்செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.'' என்று**

திருமழிசையாழ்வார் சொற்படி வெளியேறிய பெருமாள் அவர் வேண்டுகோளின்படி மறுபடியும் திருவெஃகாவில் அமர்ந்ததும் இவ்விடத்திலேயே மணிமேகலை துறவு பூண்டு முக்திபெற நோன்புற்றதும், திரிசங்குவுக்கு விசுவாமித்திரர் சுவர்க்கம் நாட்டியதும் இப்பதியே.

தேவாதி தேவன் திருக்கச்சி நம்பிகள் மூலமாம் இராமாநுஜருக்கு ஆறு வார்த்தைகள் அருளிச் செய்த தலமும் இதுவே ஆகும். அரசடி, ஆலடி, மருதடி, மாவடி, புளியடி ஆகிய 5 வகை மன்றங்கள் இங்கே உள மேலும் இந்நகரைப் பற்றிய குறிப்பை வடமொழி இலக்கண ஆசிரியர் பதஞ்சலியின் நூலில் காணலாம் தமிழ்க் காவியமாகிய மணிமேகலையிலும், சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வரலாற்றிலும் இந்நகரின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது காஞ்சிபுரம் 18,000 கோயில்கள் கொண்டது என்பதாக ஆன்றோர் கூறுவர். மங்களாசாசனம் பெற்ற 108 வைணவத் திருப்பதிகளுள் 18-ம், முக்கியமான 1008 சிவத்தலங்களுள் 108-ம் காஞ்சி மண்டலத்தில் அமைந்துள்ளன: இருப்பினும் இந்நகரின் சிறப்புக் கோயில்களாக விளங்குவது ஏகாம்பர நாதர் கோயில், காமாட்சி கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் குமரக்கோட்டம் கோயில் ஆகியவையாகும்.

## காமாட்சியின் ஆலயமும், சிறப்பும் :

மேற்கூறிய எல்லா தேவாலயங்களுக்கும் கேந்திரமாக அமைந்துள்ளது காமாட்சி அம்மை கோயில் காமாட்சி என்பதற்குத் தன் திருநோக்கால் உயிர்களின் விருப்பங்களை நிறைவிப்பவள் என்ற பொருள் மும்மூர்த்திகளையும் கண்களாகக் கொண்டவள் என்றும் பொருள் செய்வர். க — பிரமன், அ — திருமால், ம — உருத்திரன், அட்சம் — கண்.

காஞ்சியினுள் எல்லாக் கோயில்களும் காமாட்சி கோயில் நோக்கியே அமைந்துள்ளன. உற்சவ காலங்களில் எல்லா சுவாமிகளும் காமாட்சியையே வலமாக வருகின்றனர் கச்சியப்பர் கந்த புராணத்தில் காமாட்சி தேவி ஆலயத்தை திசைமயக்கும் கோயில்

சந்திர சூரியர் வலம் வரும் கோயில் எனச் சிறப்பித்துப் பாத் டுள்ளார். எல்லா ஊர்களிலும் சிவாலயங்களில் அம்பிகைக்கு தனி மூலஸ்தான சன்னதியிருக்க காஞ்சியில் மட்டும் சிவாலயங்களில் ஸ்ரீ அம்பிகைக்கு மூலஸ்தான சன்னதி கிடையாது. மன்மதனுக்கு இராஜராஜேஸ்வரி அனுக்கிரஹம் செய்தவாறு அவ்வனுக் கிரகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டு சிவனுக்குப் போக சக்தி உருவங்காணுதிருக்க சிவாலயங்கள் தோறும் கௌரியை இல்லாமற் செய்தனர். எனவே தனிக்கோயில் கொண்டு இராஜேஸ்வரி இங்கு காமாட்சியாக விளங்குகிருள். இந்த காமாட்சி இக் கோயிலில் 5 ரூபங்களாகக் காட்சி தருகிருள். அவை பிலகாசம், மூலகாமாட்சி, தபசு காமாட்சி, ஸ்ரீ சக்கரம், ஸ்ரீ பங்காரு காமாட்சி என்பன. தற்போது ஸ்ரீ பகங்ாரு காமாட்சி தஞ்சையில் தனிக்கோயில் கொண்டு விளங்குகிருள்.

மேலும் சிவனுக்குப் பஞ்சபூதத் தலங்கள் அமைந்துள்ளன போல் அம்பிகைக்கும் 1. அயோத்தியில் பிருதிவி பீடமும், 2. வட மதுரையில் அப்பு பீடமும், 3. மாயா புரியில் தேயு பீடமும், 4. காசியில் வாயு பீடமும், 5. காஞ்சிமாநகராகிய இங்கு காமாட்சி அம்மைக்கு ஆகாச பீடமும் அமைந்திருக்கின்றது.

அம்மை ஈண்டு அறச்சாலே வகுத்து அதில் இறைவனின் இருநாழி நெல் கொண்டு, 1. ஆதுலர்க்குச் சாலே, 2. ஓதுவார்க் குணவு, 3. அறுசமயத்தார்க்குண்டி, 4. பசுவுக்கு வாயுறை, 5. சிறைச்சோறு, 6. ஐயம், 7. தின்பண்டம் நல்கல் 8. அறவைச் சோறு, 9. மகப்பேறு வித்தல், 10. மகவு வளர்த்தல், 11. மகப் பால் வளர்த்தல், 12. அறவைபிணஞ் சுடுதல், 13. அறவைத் தூரியம், 14. சுண்ணம், 15. நோய்க்குமருந்து, 16. வண்ணுர், 17. நாவிதர், 18. கண்ணுடி, 19. காதோலே, 20 கண்மருந்து, 21. தலேக்கெண்ணே, 22. பெண்போகம், 23. பிறர் துயர்காத்தல் 24. தண்ணீர்ப்பந்தல், 25. மடம், 26. தடம், 27. சோலே, 28. ஆவுரிஞ்சுதரி, 29. விலங்கிற்குணவு, 30. எறுவிடுத்தல், 31. விலேகொடுத்து உயிர் காத்தல், 32. கன்னிகாதானம், என்ற 32 அறங்களும் வளர்த்து, பரமேஸ்வரரைக் குறித்துத் தவம் செய்ய பரமேஸ்வரர் காட்சி அளித்து அம்மைக்கு இடப்பாகம் தந்தனர் என்பதும் ஐப்பசி மாதம் பூரம் நட்சத்திரதினம் அம்மை இப்பதி அடைந்ததும் புராண வரலாறு.

காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனுட்சி, ஆரூர் கமலாட்சி, நாகை நீலாட்சி என்ற பஞ்ச மூர்த்தங்களில் தனிக்

கோயில் கொண்டு அமர்ந்த திருக்கோலத்துடன் வீற்றிருப்பது காஞ்சிகாமாட்சி அம்மையே.

இவ்வம்மையைப்பற்றி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ''சௌந்தர்யலஹரி'' என்னும் நூல் அருளியுள்ளார்கள். இம்முனிவர் காஞ்சிக்கு எழுந்தருளி நகரைப் புதுப்பித்தும் பிரதான ஆலயங்களை நிர்மாணித்தும், முக்கியமாக காமாட்சி அம்மையாகிய பராசக்தியின் ஸ்ரீ சக்கரயந்திரத்தின் கோணத்தை அனுசரித்து அம்மையின் ஆலயத்தை நிருபித்தும் அம்மையின் உக்கிர நிலையைச் சாந்தப்படுத்தியதாகவும் வரலாறு இருக்கின்றது.

## புராண நூலில் அம்மனின் தவசுநிலை :

*உமாதேவியார் சிவபெருமானுடைய நேத்திரங்களைப் புதைத்த காலத்தில் சிருஷ்டியாதி தொழில்கள் மாறி தருமங்களெல்லாம் ஒழிந்து உயிர்களுக்குப் பாபம் மேலிட்டு அப்பாவங்கள் எல்லாம் கருமை நிறங்கொண்டு அத்தேவியாரது தேஜோரூபத்தைக் கருநிறமாக்கியது. அச்சமயத்தில் தேவர்கள் முறையிட்டு ஓலமிடத் தேவியார் நடுக்கமுற்றுக் கண்களைப் பொத்தியிருந்த கைகளை நீக்கித் தமது திருமேனி மாறுபட்டிருத்தலைப் பார்த்ததிசியித்து மனவருத்த முற்று இதன் காரணம் யாதோவென்று சிவனைப் பணிந்து, சொர்ணம் போற் பிரகாசிக்கும் என் மேனி பாபரூபமான கருநிறமடைந்து பார்ப்பதற்குச் சகியாத கோரமாகக் காணப்படும் காரணம் என்ன என்று வினவ, சங்கரர் உயிர்களின் பாபத்திரட்சி என்றார். உடனே அம்மை இதற்குப் பரிகாரம் என்ன என்று, கண்ணீரரும்பி மீளவுங் கேட்க சங்கரர் நீ பதரிகாச்சிரமத்துக்குச் சென்று அங்கு ஒரு குழந்தை வடிவங் கொண்டிருப்பாயாக அவ்விடத்தில் புத்திரப்பேறு வேண்டிய காத்தியாயன முனிவன் வருவான். அவன் உன்னைப் பார்த்தவுடன் பத்திர காமந்தீர்ந்து மகிழ்ச்சியடைந்து ஞான திருஷ்டியினால் உன் சொரூபத்தையுமறிந்து தன் ஆசிரமத்துக்குக் கொண்டுபோய் 8 வருடம் உன்னைச் சீராட்டியும் பூஜித்தும் வருவான். பின்னர் என்னுஜ்ஞையினால் யோகதண்டம், ஜபமாலை தீபஸ்தம்பம், இரண்டு குடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்தபயறு, கங்கைமணல் கங்காதீர்த்தம், குடை இவைகளைத்தருவான். அவைகளை நீ பெற்றுக்கொண்டு உடனே துர்ப்பிக்ஷையடைந்திருக்குங் காசிக்குச்

*காமாட்சி விலாசம் என்னும் நூலில் காணப்படும் புராண வரலாறு.

சென்று அன்னதானத்தால் அவ்வறுமையைப் போக்கி அன்ன பூரணியென்று பெயர் பெற்று பன்னிரண்டு வருடம் அவ்விடத்தில் இருந்து தென்திசைநோக்கிச் செல்லக்கடவாய். அப்படிச் செல்லும் பொழுது எவ்விடத்தில் புலித்தோல் சோமவிருத்தமாயும், ஆதார பீடமாகிய குடம் அதன் சூத்திரமாயும், மணல் இலிங்க ரூபமாயும், ருத்திராட்சம் மாலை பில்வமாலையாயும், குடைநாகாபரணமாயும், யோக தண்டம் திரிசூலமாயும், சாமரைகள் இரண்டு பெண்களாயும் விசிறி கிளியாயும், குடம் குடதீபமாயும் புஸ்தகம் காமதேனுவாக வும் வித்யாதரம் ஊசியாயும், வறுத்தபயறு முளையோடு கூடிய பெயராயும் கங்கை பாலாயும் எவ்விடத்தில் மாறுகின்றதோ அவ் விடத்தைக் காஞ்சித்தலம் என்று அறிவாயாக. அவ்விடத்தில் சோமசூத்திரருடன் கூடிய அவ்விலிங்கத்தை நாடோறும் க்ஷீரத் தாலபிடேகம் செய்து நாகாபரணத்தில் அலங்கரித்து பில்வமாலை யைச் சாத்தி முளையோடு கூடிய பயறை நிவேதனஞ் செய்து தியா னித்து அவர் பக்கங்களில் இரண்டு ஸ்திரீகளை காவலாகத் தாபித்து கோக்ஷீரத்தைப் பானஞ் செய்து கிளியைக் கையிற் பிடித்துக் கொண்டு ஊசியை நாட்டி அதன் முனையில பஞ்சாக்னி, மத்தியினி என்று என்னைத் தியானித்துத் தவஞ்செய்து வருவாயாக அப் பொழுது நான உனக்குப் பிரத்யக்ஷமாகித் திருமணம் செய்து கொள்கிறேன். அக்கணமே கருமை நிறம் நீங்கி சொர்ணுங்கி ரூபத்தை அடைவாய் என்று முடித்தார். அவ்வாறே காமாட்சி குறை இல்லாமல் முடித்து கைலைநாதனை மணம் செய்து கொண்டார் என்பது புராண வரலாறுக் கூறப்பட்டுள்ளது.

## புராணநூலுக்கும், இந்நூலுக்கும் வேறுபாடுகள் :

ஆனல் இந்நூலாசிரியர் மேற்படி புராணவரலாறுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தில் கூறியுள்ளார். புராணவரலாற்றில் காமாட்சியின் தந்தை கார்த்தியாயன முனிவர் எனக் கூறப்பட் டுள்ளது. இந்நூலாசிரியர் தக்கன் மகளாகக் கூறியுள்ளார். மேலும் தவசுக் காலத்தில் தவசைக் கலைப்பதற்கு இறைவன் சூழ்ச்சியால் பலர் பலவாருக முயன்று முடிவில் இறைவன் திருமணம் புரிந்தார் என்றும், திருமணம் முடிந்தபிறகு காமாட்சி மீண்டும் சிவனிடம் கருமாலிபாஞ்சு பாசுபதம் பெற்ருள் என்றும் பட்டணப் பிரவேசம் செய்து, முடிவில் தென்காசியில் உள்ள கொல்லிமலையில் கொலு விருந்து மாசிமலையில் உள்ள மலையாளரால் வணங்கப் பெற்ருள் என்றும் கூறி இந்நூலை முடித்து விட்டார்.

புராணத்தில் தவசைக் கலைத்ததாகவோ, திருமணம் முடிந்த பிறகு பட்டணப்பிரவேசம் பாசுபதம் பெற்றது, மற்றும் உள்ள நிகழ்ச்சிகள் யாவும் குறிப்பிடவில்லை.

## சுவடிபற்றிய விளக்கமும் நூலாசிரியரும் :

எமது நூலகத்தில் ''காமாட்சி தவசு'' என்ற தலைப்புள்ள சுவடி, பதிவு எண் 1404 - ஐக் கொண்டதாகும் இது திருச்சி கோட்டாத்தூர் வழி, முத்தியம்பாளையம் P.O. P. நல்லுசாமி அவர்கள் இந்நூலகத்திற்கு அளித்த 8 அன்பளிப்புச் சுவடிகளில் ஒன்றாகும். சுவடியின் ஏடுகள் நல்லநிலையில் உள்ளன. காமாட்சி தவசு என்ற இந் நூலின் பிரதி வேறு எந்த சுவடிகள் நூலகத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. (இருப்பின் அன்பர்கள் இதைத் தெரிவித்தால் இந்நூலின் மறுபதிப்பு திருத்திய, பாட வேறுபாடு களுடன் வெளியிட வாய்ப்பாக அமையும்.)

இந்நூலின் ஆசிரியரைப்பற்றி மூலத்தில் எங்கும் குறிப்பிட் டத்தாகத் தெரியவில்லை இறுதியில் ''வேருயம்பாளையத்திலிருக் கும் பள்ளிக்குடத்தான் காமாட்சி தவசு எழுதினது முற்றும்'' என்று குறிப்பிட்டு இருப்பதினால் பள்ளிக்குடத்தான் என்பவரே ஆசிரிய ராகவும் இருக்கலாம் என எண்ண இடமுண்டாகிறது.

## நூலின் அமைப்பும் நயமும் :

காமாட்சி தவசு எண்ணும இந்நூல் முழுவதும் அம்மானை நடையில் அமைந்துள்ளது மேலும் எளிய நடையில், பாமரர்களும் படித்து, விளக்கம் தெரிந்து கொள்ளும் வகையில் எழுதியுள்ளார்.

நூலில் பல இடங்களில் நயத்தை அழகுபட தெரிவித் ள்ளது எங்ஙனமெனில் காமாட்சி தவம் செய்ய கானகத்திற்குச் சென்ற பொழுது, அங்கு வாழ்ந்த மிருகம், பட்சியெல்லாம் எவ்வாறு, அவைகள் அம்மனிடம் பழகிய விதமும் நன்முறையில் கூறப்பட்டுள்ளது. அம்மனின் தவசுநிலை பற்றிக் கூறுமிடத்து, தவக்கோலமும் தவசின் அமைப்பையும் நன்கு கூறியுள்ளார். மேலும் அம்மனின் தவசுக்காலத்தில் விளைந்த இடையூறுகள் சூழலில் அமைந்திருக்கும் வருணனைகள் மிக அற்புதம்.

மலர்களின் எண்ணற்ற வகைகளும், கனிவகைகளும், திருமணத்தின் பொழுது அமைக்கப்பட்ட மண்டபத்தின் அலங்கார மும், சிறப்பும், மலையாளர்கள் அம்மனுக்கு பூசை செய்த முறைகளை யும் வெகு அழகுபடவும், நேரில் காண்பது போன்ற ஒரு பிரமையும் ஏற்படும்படிக் கூறியுள்ளார்.

இந்நூலில் பல இடங்களில், பல பழமொழிகளை நயம்பட எடுத்தாண்டுள்ளார். உதாரணமாக காமாட்சி, ஏகாம்பரனுதனை மாலையிட நினைத்திருந்த நேரத்தில் தன் தந்தை தாருகாசுரனை மணம் முடிக்க பேசும்பொழுது, காமாட்சி தன் தந்தையை நோக்கி, தண்ணீர் தவித்தார்க்கு எண்ணெய் கொடுத்தாற் போன்று'' என்றும், நாரத முனிவரின் பேச்சை தக்கன் கேட்க மறுக்கும் பொழுது, நாரதர் காமாட்சியிடம் '' சொல்ப் பேச்சுக் கேளார்க்குத் துக்கம் வந்தால்தான் தெரியும்'' என்றும் கூறியதை எடுத்து இயம்புகிறார்.

மேலும் இந்நூலாசிரியர் உவமைகள் கூறுவதிலும் வல்லவர் என்பதைச் சில சான்றுகள் மூலம் உணரலாம். எங்ஙனமெனில் இறைவிதன் தான் தவசுக் காலத்தில், தவசைக் கலைக்க வந்த இறைவனுடன் பொருத காட்சியைக் கீழ்க்கண்ட சில உவமை களால் விளக்குகிறார்.

1. ''இந்திர செயத்தின் மேல் லட்சுமணன் எதிர்த்தாற்போல்''

2. ''வானரம் முன் கும்பகர்ணன் வந்து எதிர்த்தாற்போல்''

3. ''அனுமந்தன் தானும் அன்றிலங்கை எதிர்த்தாற்போல்''

4. ''மயிடா சூரனையும் வாதாடுங் காளியைப் போல்''

5. ''அங்குதனும் இராவணனும் அன்று பொருதாப்போல்''

6. ''சந்திர சூரியனைத் தானரவம் கொண்டாப் போல்''

## நன்றியுரை

இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலைப் பதிப்பிக்கும் பணியினை எனக்களித்த எமது மகால் இயக்குநர் & மாவட்ட ஆட்சியர் திரு. ஆர்சத்பதி, இ.ஆ.ப அவர்கட்கும், இதனை வெளியிடும் பேறு பெற்ற தற்போதைய மாவட்ட ஆட்சியரும், எமது மகால் இயக்கு

தருமாகிய திருவாளர் T. R. இராமசாமி இ. ஆ. ப அவர் கட்கும், இம் மகால் நூலகளும் நிருவாக அதிகாரிப் பொறுப்பும் கொண்ட திருமிகு அ. பஞ்சநாதன், எம். பி லிப்சி, அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகிறது. இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த லாலி அச்சகத்தாருக்கும், பதிப்பித்தல் பணிக்குப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

இந்நூலில் சிறியேனின் சிற்றறிவினால் ஏற்பட்ட பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். பிழைகள் திருத்தம்பெற உதவினால் நன்றிக் கடப்பாடுடையேனாவேன். எனவே குற்றம் நீக்கிங் குணத் தினைக் கோடல் வேண்டுகிறேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத்துணைநின்ற காமாட்சி தேவியின் பொற்பாத கமலங்களை வணங்குகின்றேன்.

இங்ஙனம்
புலவர் ச. திலகம் B. Litt.
*தமிழ்ப்பண்டிதர்,*
*சரசுவதிமகால் நூலகம்.*

தஞ்சாவூர்
11-6-85

—:0:—

# கதைச் சுருக்கம்

முன்னொரு காலத்தில் தக்கன் என்ற அரசன் இருந்து வந்தான் அவனுக்கு நீண்ட நாட்களாக மகப்பேறு இல்லாமல் இருந்ததினால் மனம் மிக வருந்தினன். பிறகு தவமுனிவர் கோடிதவசிருக்கும் வனத்திலே மகப்பேறு வேண்டி சிவனை நினைந்து தவமிருந்தான். திங்கட்கிழமை சிவன் பிறந்த சோமவாரம் மன்னன் பூசை முடிக்கும் பொழுது இவனுடைய பக்தியை மெச்சும் வகையில் சிவன் தோன்றி அவனுடைய துயரம் என்னவென்று கேட்ட பொழுது தக்க மகராசனும் தகுந்த பதில் அளித்தான். நாதாக்கள் மூதாக்கள் முன் செய்த தீவினையாலும், இப்பிறப்பில் நானும் என்ன இடர் செய்தேனோ எனக்குமொரு பிள்ளை இல்லாமல் போனதினால் இவ்வனத்தில் மனத்துயரம் விட்டு, நீதிமுறை தப்பாமல் தவம் புரிகின்றேன். இருந்த தவம் செய்யாஞல், என்ன மனத்தாபம் என் பேரில் இருந்தாலும் எனக்கு புத்திர பேற்றை அளிக்க வேண்டும் என வேண்டி நின்ருன். அப்போது ஈசுவரருந் ஆதி சத்திதனை அழைத்து நீ போய் தக்கன் மனையிடத்தில் குழந்தையாய்ப் பிறவுமென்ருர். ஈசுவரியும் சம்மதித்தவுடன் தக்கனுக்கு கேட்ட வரம் தான் கொடுத்தார்.

வரம்வாங்கிக் கொண்டு வந்த தக்க மகராசனுக்கு பத்து மாதஞ் சென்று பார்பதியாள் தான் பிறந்தாள். எண்ணுங் இளங் கொடியாள் ஐந்து வயதில் பல அறிவு நூல்கள் கற்று ஆரும் வயதில் ஆரியங்கள் ஓதி ஏழாம் வயதில் எல்லா பாஷைகளும் கற்று அம்மா: னையாடி அழகாகப் பந்தாடி, கன்னியர்கள் சூழக்காமாட்சி வளர்ந்தாள்

இங்ஙனம் வளர்ந்து வரும் நாளையிலே தக்கன் மனையிடத்தில் காமாட்சியை பெண்கேட்டு தாருகாசுரன் வந்தான். தக்கனும் சரி என்று சம்மதித்து, திங்கட்கிழமை சிவன் பிறந்த சோமவாரம் முகூர்த்தத்திற்கு நாட்குறித்து, எல்லா திருமண ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. இதை அறிந்த தோழிமார்கள் காமாட்சியிடம் வந்து சொல்லவே எனக்கு இதில் சிறிதும் சம்மதம் இல்லை என் சம்மதம் இன்றி தாகருகாசூரன் எனக்கு மாலையிட்டால் அவன் தலை வெடித்து இறந்துபடுவது நிச்சயம். தந்தையாகிய தக்கனும் எனக்கு தாயாதி ஆகிவிட்டானு? ஆதிகைலாச நாதனை நம்பித்தான் உள்ளேன் என்று சிந்தைமிக கலங்கி உரைத்தாள். இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாத தக்கன் திருமணமண்டபம்

அலங்கரித்து அவன் குறித்த நாள் வந்ததும், மணப்பெண்ணைக அலங்கரித்து, காமாட்சியை அழைத்துவர தாதியர்களை அனுப்பினன் அவர்களும் அவ்வாறே வர, காமாட்சி வெகுண்டு, சனந்தெழுந்து கண்ணீருடன் கூந்தல்மிக விரித்து கோபாலாவென்று சொல்லி ஆபரணமெல்லாம் கழற்றி தரையில் விட்டெறிந்து விட்டு கோவென்று சொல்லி கொம்பனையாள் புலம்பினள் இப்புலம்பலைக் கேட்ட பூலோக நாரதரும் வந்து இங்ஙனம் நீ அகோரமான செயலை செய்யும்படி நடந்த நிகழ்ச்சிதான் என்ன என்று வினவ நாரதரைக் கண்டு நாயகியும் தண்ணீர் தவித்ததர்க்கு எண்ணெய் கொடுத்தது போன்று ஏகாம்பரநாதனையே கணவனாக நினைத்திருக்கும் என்னை பின்னையொருவன் மாலையிட சம்மதிப்பேனா என்று கூறினள் நாரதர் மீண்டும் வந்து தக்கனிடம் இதைக்கூறவே அவன் என் வயிற்றுப் பிள்ளை என்று இருந்தேன் என் சொல்லை மதிக்காமல் என்னை அவமானத்திற்கு ஆளாக்கியவளுக்கு இனி இங்கு இடமில்லை அவள் உண்ணும் உணவில் நஞ்சைக் கலக்குங்கள் என்று ஏவலர்களுக்கு உத்ததரவிட்டான். இதைக் கேட்ட காமாட்சியும் தானும் மிகவும் தந்தையுடன் சண்டை செய்து கொண்டு திருமணமண்டபத்திலிருந்து எழுந்து சன்னியாசி வேடந்தாகி தவசி வடிவு கொண்டு திண்டும் பிரம்புமது திரிசூலங் கைப்பிடித்து போத்தும் புலித்தோலும் புள்ளிமான் ஆசனமும் இட்டதிருநீரும் சடைமுடியும் தாங்கி அரனைரைத் தானினைந்து தவம் செய்யப் புறப்பட்டு விட்டாள் முனிவோர்களும் நாரதரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் கேட்கவில்லை எல்லா தெரிந்த தாங்களும் இப்படி சொல்லாமல் சூதுகளை ஏன் வளர்த்தீர் என மறுமொழி பகர்ந்தாள். நாங்கள் என்ன சொல்லியும் உன் தந்தையாகிய தக்கனும் இதனால் வரும் தீமைகளை எடுத்துச் சொல்லியும் அவர் கேட்கவில்லை கெடுமதியன் வந்ததென்றால் கேட்பாரோ வையகத்தில் என்று வேத முனிவர்கள் கூறினார்கள்.

இருப்பினும் நீ தவம் செய்ய முடிவு செய்திருப்பது நல்லதல்ல. இது தவம் செய்யும் பிராயமும் அன்று. நீ இச்சிறு வயதில் தவத்தை மேற்கொண்டிருப்பது, தவம் புரியும் கானகத்தில் மிருகங்களால் உன் உயிருக்கு ஆபத்தும், திருடர்களால் கற்புககு களங்கமும் ஏற்படலாம். எனவே இம்முயற்சியை விட்டு விட்டு, உன் மனதுக்குப் பிடித்த வேற்று நாட்டு அரசனையாவது திருமணம் செய்து கொள் என்று எடுத்துச் சொன்னார்கள். இதற்கு காமாட்சி அப்படியே பிருமாவும் அவரெழுத்துமுண்டானால், எங்கேயிருந்தாலும் எழுத்துவசம் போகாது. எப்படியும் என் தவசை முடித்து, அந்த ஏகாம்பர நாதனையே கணவனாக அடைவேன் என சூளுரைத்து தவசுக்குப் போக நடக்கலூற்றாள்.

தவசுக்கு ஏற்ற இடம் காஞ்சி வனம்தான் என்று தானறிந்து, அந்த வனம் புகுந்து ஆட்சிக்கம்பை காமாட்சி வருகையிலே வனத்திலுள்ள வாழ்மிருகம், பட்சியெல்லாம் சேர்ந்து வந்து தெண்டனிட்டது. செந்தலைநாகம் சேர்ந்து படத்தை விர்த்துப் பார்பதிக்குக் குடைபிடித்தது. மேலும் பூமலருமில்லாத பூ விருட்சங்களெல்லாம் பூத்துப் பொலிந்தது. காயில்லா மரங்களெல்லாம் காயுங் கனி பழமும் தந்தது. பூமியிலே பாதம் புழுதிபடுமென்று சொல்லி பல வகையாக விருட்சங்கள் எல்லாம் மெத்த மலர்தூவியது. வண்டுகள் இசைபாட, குயில்க் கூவ, மயிலாட, மேகம் பணி செய்ய மேகக் கன்னித் தாலாட்ட கண்டு மனமகிழ்ந்து கம்பை காமாட்சியும் பூரித்தாள்.

அவ்வனத்தை விட்டு அப்பால் சிறிது தூரம் நடக்கையிலே கம்பை நதியுங் கைலாசப் பொய்கைகளும், ஏகாந்தியாக இருப்பதைக் கண்ட காமாட்சி திருக்கம்பை ஆற்றருகே தவசிருக்க ஏற்ற இடம் என எண்ணி உத்திரரே தஞ்சமென்று சிவசிவாவென்று சொல்லி அடிவணங்கி தெண்டநிட்டு, வேல்பொருது கண்ணுள் வெண்ணீற்றுக் காப்புமிட்டு, பஞ்சாட்சரமணிந்து, ஆயிரம் அடியலகு அடவுடனே தானிருத்தி அதுமேலே ஏழுகும்பம் அணிஅணியாய்த் தானிருத்தி, குடத்தின்மேல்ப் பொன்னூசி கூரியவாள் தானிருத்தி, பொன்னூசி மேலே அவள் தான் பெருவிரலைத் தானூணி அரகரு வென்று ஈசுவரியாள் அருந்தவத்து மீதேறி சிவசிவாவென்று சொல்லி தேவி தவசிருந்தாள். இங்ஙனமாக வெகுநாளாய் தவசிருந்தாள்.

இத்தவக் காட்சியை சந்திரருஞ் சூரியருங் கண்டு மெச்சி, தேவேந்திரன் சபைக்குச் சென்று, முப்பத்து முக்கோடி தேவர்களும் முன்பு தொழ தேவர்களை நோக்கித் தெண்டநிட்டு உரைத்தார்கள். இவற்றையெல்லாம் செவிமடுத்த அகத்திய முனி பூருவத்தில் தானும் பொற்கொடியுங் காமாட்சியாருக்குப் பாரியென்று வினவ, நாரதர், அகத்தியருக்கு சிவனுக்கே உரியவள் என உரைப்பார். உடனே நாரதருந்தான் பணிந்து காமாட்சியின் தவசை மாற்றி, அவள் கேட்டவரங் கொடுத்து இரட்சிக்க வேணுமென்றார் அரனும் ஆனாலும் என்ன இப்படிச் சொன்னீர் இந்தச் சபை தன்னில் அவள் தவசை மாற்றி தவங்குலைத்து விடுகிறேன் என்று உரைத்தார். உடனே அவள் தவத்தைக் குலைப்பதற்கு தூதுவரை அனுப்பலுற்றார். அத்தூதுவர் காமாட்சி தவம் செய்யும் வனத்திற்குச் சென்று, மழைமாரி போல வானந்தொடுத்து, அண்டங் கலங்க அதட்டியே வில்வாங்கி, மலைகள் தவிடாகும்படி, வானரங்கள் இற்று விழும்படி செய்தார்கள். காமாட்சி சிவனை மனதில் நினைந்து

தூதுவர்களைப் பார்த்து ஏண்டா மிரட்டுகிறாய் உனக்குச் சரியான உத்தகுல வேடருடன் எதிர்த்தால்ச் சரியாகும் இந்தத் திருணி யெல்லாம் என் முன்னே காட்டாதே என்று சொல்லி அவர்கள் விட்ட பாணத்தையெல்லாம் துண்டந் துண்டமாகத் துணித்தாள் உடனே தூதுவர்கள் மிகப்பயந்து மெய்மறந்து கைசோர்ந்து தெண்டநிட்டு வந்துவிட்டார்கள். ஆதி கைலாச நாதரிடம் வந்து நடந்ததை முறையிட்டார்கள். பிறகு ராட்சதரை ஏவினார் அவர்களா லும் வெல்ல முடியாமல் போகவே பிறகு வருணபகவானையும் ஏவினார் வருணபகவானை காற்றும் மழையுங் கனத்த இடியும் தான் முழங்க வந்ததினால் பெருத்த வெள்ளம் ஏற்பட்டது. அப்பெரு வெள்ளத்தை கங்கை என எண்ணிய காமாட்சி கங்கையை பலவாறாக ஏசினாள். கோபமுற்ற கங்கை வாடிமுகஞ் சோர்ந்து சிவனுடைத்தே போய் வேசியென்று என்னை விகிர்தமாய் ஏசலுற்றாள்என்று கூறினாள் கோபமுற்ற ஈசுவரரும் மலையைத் துளைக்கும் வண்டுகளைத் தானழைத்து கங்கைவனந் தானிருக்குங் காமாட்சி தன் தபசை குலையுமென்று அனுப்ப அவ்வண்டுகளும் உடன் சென்று செங்குருதி ரோகமெல்லாம் சேருக ஆகும்படி துளைத்தது. என்ன துளைத்தாலும் ஏகாம்பரநாதர் பாதமே தஞ்சமென்று பார்பதியும் வீற்றிருந்தாள். பிறகு எமகண்ட ராட்சதரை அனுப்பினார். அவர்களும் அவ்வாறே வெல்லமுடியாமல் திரும்பி வந்தார்கள் பிறகு சிவபெருமான் நாரதரை அழைத்து வாது செய்யவேண்டாம் மண்ணுலகில் நான் அவளை மணப்பது என்பது எனக்கு ஏற்காது ஈனன் மனையிடத்தில் செல்லமாட்டேன் யாரை அவள் வேணு மென்று கேட்டாலும் அட்டினத்திலே அவரை அவளுக்கு இசைந்து மணஞ் சூட்டி வைக் கிறேன் சொல் பேச்சுக் கேட்டால் சொர்க்கந் தருவேன் இச்செய் தியை அவளிடத்தில் சொல்வீரர்களாக என கூறினார். நாரதரும் அவ்வாறே கூறலுற்றார். உடனே காமாட்சி நாரதரைப் பார்த்து என்ன மதியுடன் இங்கு வந்தீர் என்ன விதமானாலும் ஈசுவரனைத் தான்வேண்டி இருக்கிறேன் இந்தத் தவசு எதுக்கு நான் இருக் கிறேன் பின்னையொருவன் பேருலகில்க் கிட்டாதோ என்சீவன் உள்ளமட்டும் இப்படியே இருந்தாலும் என்னதான் சொன்னாலும் இறங்கேன் தவசுவிட்டு இறப்பதுவே நிட்செயங் காண்பீர் இன்னுமவர் நெஞ்சில் இருக்குங் குறைகளெல்லாம் என் பேரில் வெங்கை தீர்த்த பின்பாக அடியேனை ஆதரிக்கச் சொல்லவும் போய் வந்த சேதிதனை சிவனிடம் நாரதர் சொல்ல வெகு கோபங்கொண்டு மீண்டும் பல கோடி பூதங்களை அனுப்பி தவசைக் குலைக்கச் சொன்னார். அவைகளும் அவ்வாறே சென்று வெல்ல முடியாமல் திரும்பின. அப்பொழுது மகாதேவருக்கு அதிகோபம் உண்டாகி தில்லைவனமெரித்த செந்தம்பு தானெடுத்து அதுக்கு வெகு புத்திச்

சொல்லி அண்டங் கிடுகிடென தொடுத்தார். இறைவனுக்கு எதிராக இறைவியும் கணைகளை தொடுத்தாள் இருவர் கணையும் எதிர்த்துப் பொருதது பின்னும் அவர்க்குப பெருங்கோபம் உண்டாகி இறுதி யாக பாசுபதத்தை ஏவினர் அது எங்கும் நெருப்பு மயமாக்கியது இதைக்கண்ட தேவியும் மேகஞ்சிலை பாணம் ஒன்றை ஏவி அந்த நெருப்பை அவியப் பொழியுமென்ருள்.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற மாயவனர், உத்தமியைக் கொல்லுதற்கு, உங்களால் முடியாது, எனவே நல்ல நாள் பார்த்து நாயகியை மணம் முடித்துக் கொள்ளும் என்று வினவினர். இதைக் கேட்ட சிவபெருமான் வெண்கண் சிவந்து விட்டாரொரு கணையை இதைக் கண்ட காமாட்சி ஏழுலகமுந் தத்தளிக்க ஒரு கணையை ஏவினள். எல்லா படைகளும் இறந்து ஒழிந்தன இறுதியில் சிவன் தன் குழந்தைகளான விநயகரையும், முருகனையும் மற்றும் தெட்சிண மூர்த்தியையும் காமாட்சியைக் கொன்று வரும்படி அனுப் பினர். இச்செய்தியைக் கேட்ட மூவரும் என்ன செய்வதென்று அறியாமல் வர்ணமுகம் வேறுபட்டு விநயகர் தன் தம்பியைப் பார்த்து, மாதாவைக் கொல்ல வரங்கேட்டு வந்தோமே, இது தர்மமல்லப் பூமியிலே என்ன செய்வோம் என்று மூவரும் ஆலோசனை புரிந்தார்கள்.

பிறகு மூவரும் ஒரு முடிவுச்கு வந்து, சேனையுடன் சென்று நாமும் மடிந்து விட்டால் கவலையில்லை என்று கம்பை காமாட்சி தவ சிருக்கும் வனம் புகுந்து, தாயாரை தெண்டநிட்டார்கள். உடனே காமாட்சி தன் புத்திரர்களைப் பார்த்து, எங்கே வந்தீர்கள் என்று வினவ, விநயகரும் அம்மனை நோக்கி, தாயே தந்தைமீது யுத்தம் வேண்டாம், நல்ல வார்த்தைகளால் எடுத்துச் சொல்லி சண்டையை கை விடுங்கள் என்ருர். காமாட்சி, குழந்தாய் என்மேலே குறை இருந்தால் எனக்கு நீர் புத்தி சொல்லும், நான் அவரை வேண்டித் தானே தவம் செய்கிறேன் என்று சொல்லக்கேட்டு, மாதாவே உங்களுக்கு வந்த விரோதமெல்லாம் எங்களிடம் சொன்னல் இனித் தீரப்போவதில்லை. ஒருவருடன் கூடி ஒருவரை கொல்லுதர்க்கு எங்களுக்குப் பாவம் வரும் எனவே சேனைகளைக் கொன்ற சேந்தமணி வில்லாலே எங்களையும் கொன்றுவிட்டால் இருவருக்கும் குற்றமில்லை என்று விநாயகர் கூறினர்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட காமாட்சி விநாயகரைப் பார்த்து புத்திரரைக் கொன்று பூமியிலே நான் இருந்தால் மைந்தர் களைக் கொன்ற மாபாவியாவேன். முற்பிறப்பில் செய்த குற்றம் தான் இவ்வாறு எல்லாம் துன்பத்தை அனுபவித்து வருகிறேன். இப்பிறப்பிலும் உங்களைக் கொல்லும் குற்றத்தைச் செய்வேனே.

உங்களைக் கொல்லும் முன்னே நான் மடிந்தால் குற்றமில்லையென்று கூறினாள் புத்திரர்கள் மூவரும் என் தாயே காமாட்சி, சக்தி மடிந்தால் தென்றல்த் தரணியெங்கும் பாழாகும் எங்களைக் கொன்றால் இனி இந்த தவசு தீரும் என்று மறுமொழி பகர்ந்தார்கள். மேலும் விநாயகர் தாயைப் பார்த்து இதுக்கு நீ அஞ்சாதே இந்த வனத்தை எரித்த கணைகளை எங்கள் மேல் ஏவினால். நாங்கள் இறந்துபடுவோம் உடனே தந்தை உந்தனையும், தேவரையும் அழைத்து, உங்களைப் பார்த்து, மாண்ட படைகள் அத்தனையும் மீண்டும் உயிர்பெறச் செய்தால் உன்னை மணம் புரிவேன் என்று சொல்வார். அப்பொழுது நீ எழுப்ப எல்லோரும் எழுவோம், ஏதோ எனக்கு தெரிந்த மட்டும் யோசனைகள் சொன்னேன் என்று இதமுடன் உரைத்தார். அவ்வாறே அம்மனும் செய்ய முற்பட்டு கணைகளை ஏவினாள். உடனே எல்லோரும் மடிந்து விடவே நிமலனார் வந்து நின்று பார்த்ததும் மகாகோபந் தானாகி அம்மனைப் பார்த்து உன்னைவிடேன் ஊடறுப்பேன் என்று சொல்லி படுகளத்தில் நின்றார். தக்கனும் அவருடன் சேர்ந்து கொண்டான் இவர்கள் தொடுத்த கணைகள் எல்லாம் துண்டதுண்டமாய்ப் போச்சு வெல்ல முடியாமல் மெய் சலித்து வந்து விட்டார்கள்.

இவற்றையெல்ல நெடுநேரம் நின்று பார்த்த நீலவர்ணர் வான்கெருடன் மேலேறி மகாதேவர் பக்கல் வந்து ஏகாம்பர ஈசுபரனே இனியாவது என் வார்த்தையைக் கேளும் இருவருக்கும் தாழ்வு வராதபடி திருமணம் முடித்து விடுகிறேன் என்றார் ஈசுபரனும் அப்படியே நல்லதென்றார்.

உடனே காமாட்சியிடம் சென்று இச் செய்தியை சொல்லிய வுடன் மனம் மிக மகிழ்ந்து சம்மதம் தெரிவித்தாள். முகூர்த்தக்கால் நாட்டி திருமணத்திற்கு நாளும் குறித்தாகிவிட்டது முப்பத்து முக் கோடி தேவர்களும் அம்மனை அழைத்து மாண்டதொரு சேனை யெல்லாம் எழுப்பிவிட்டாலே சுந்தரனார் மாலையிடுவதாக சொல்கிறார் என்று சொன்னார்கள் பிறகு காமாட்சியும் தன் தவசுவிட்டிறங்கி ஆதி அரனாரைத் தானினைந்து வீரசக்தி காமாட்சி விபூதிதனை எடுத்து மாண்ட சமர்களத்தில் விட்டெறிந்தாள் துய்ய நெடுஞ் சேனை யெல்லாம் தூங்கினவர் போலே எழுந்திருந்தார்கள் பிறகு சிவன் சொல்லியபடியே முப்பத்துமுக்கோடி தேவர்களும் சூழ்ந்திருக்க அரசாணி சுற்றி வந்து அருந்ததியைதான் பார்த்து சோபனங்கள் பாடி துலங்கு மணப்பந்தலிலே திருமணம் வெகு சிறப்பாய் நிறை வேறியது.

உடனே இருவரும் பட்டணப் பிரவேசம் செல்ல நினைத்து தேவர்கள் கொண்டாட தங்கரதம் ஏறினார்கள். பிறகு பட்டணப் பிரவேசம் பாங்குடன் முடித்து இருவரும் நாலாம் நீருடி நாகவல்லி தான்முடிந்து முத்தும் பவளமும் மூன்றுதிரப்மெடுத்து மாளிகையில் புகுந்து மன்னவரும் தேவியரும் பள்ளியறையில் பாங்காக வீற்றிருந்தார்கள் தேவர்கள் எல்லோரும் தேவன், தேவியிடம் விடைவாங்கிக் கொண்டு சென்றார்கள் காஞ்சிபுரமென்று கதித்த நகருண்டாக்கி ஈசுபரரும் தேவியரும் இதமாக வாழ்ந்திருந்தார்கள்.

இங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் காமாட்சி தென்காஞ்சி நாடு பூசை கொள்ள விரும்பி சிவனிடம் வரம் பெற்றுக் கொண்டு அக்கினியில் மூழ்கி கருமாலி பாஞ்சு பாசுபதம் பெற்று தென்காஞ்சி நோக்கி பயணம் செய்கிறாள் அப்பொழுது சிவபெருமான் அம்மனுக்கு பக்கத் துணையாக வாதுப்புதுக்கருப்பன் என்ற வேலைக்காரனையும் அனுப்புகிறார் இருவரும் தென்காஞ்சி நோக்கிச் சென்று பிறகு கொல்லிமலையில் அம்மனை இருக்கச் சொல்லி விட்டு அம்மன் கொலு வீலுநக்க ஏற்ற இடம் தேர்ந்தெடுக்கின்றான் மாசிமலை என்ற மலையே ஏற்ற இடம் என்று முடிவு செய்து வெங்கலப் பாறையின் மேல் வெம்புலித்தோல் ஆசனத்தில் வளரும் பிறை காமாட்சி கொலுவிருந்தாள்.

மலையாளர் மாசிமலை என்ற பகுதியில் வாழ்ந்தார்கள். அவர்கள் பயிரிட்ட தினைப்புனத்தில் கிளிகள் அத்தினைப்புனங்களை அழித்தது பிறகு வாதுப்புதுக்கருப்பனின் ஏவலினால் மிருகங்களும் பயிரை அழித்தன இதைக் கண்ணுற்ற மலையாளர் அத்தனைபேரும் இது என்ன புதுமையாய் உள்ளது என்று அவ்வூர் நாட்டாண்மை காரனான நல்லதம்பியிடம் முறையிட்டார்கள் உடனே நல்லதம்பி எல்லோருக்கும் ஆட்கள் அனுப்பி கூட்டம் முடிவு எடுத்தான், கோணங்கிக் காரன் என்ற ஒருவனைகூட்டி வந்து கேட்டால் அவன் இன்ன காரணம் என்று சொல்லி விடுவான் எனவே அங்ஙனமே அவ்வூர்மக்கள் புறப்பட்டுச் செல்லுகையில் வாதுப்புதுக்கருப்பன் கோணங்கிக் காரன் வேடம் பூண்டு திரிந்து கொண்டு இருந்தான் இவனைக் கண்ட அவ்வூர் மக்கள் அவனை அழைத்து வந்து தங்கள் குறைகளை முறையிட்டார்கள் அவனும் உடுக்கைதட்டி காஞ்சி வனத்தில் கம்பை நதியில் கோபாலன் தங்கையவள் சத்திகம்பை காமாட்சி நெடுநாள் தவசிருந்து சங்கரருக்கு மாலையிட்டாள். அவள் தென்காஞ்சிநாடு பூசை கொள்ள சொல்லி மலையில் கொலுவிருக்கின்றாள். அவளுடன் வாதுப்புதுப்கருப்பன் தனிக்கருப்பன் என்ற இருவரும் உள்ளனர் இவர்கள் மூவருக்கும் மலையாளர் சேர்ந்து மாசி

மலையில் பூசை செய்தால் உங்களுக்கு இந்த இன்னல்கள் தீரும் என்றான். உடனே மக்கள் அத்தனைபேரும் நல்லதய்யா பூசாரி நன்று சொன்னீர் என்று அவனுக்கு மரியாதைகள் செய்து அனுப்பி வைத்தார்கள்.

கோணங்கி சொன்னபடி மலையாளர் அத்தனை பேருங்கூடி காமாட்சி அம்மனுக்கு கதுமையுடன் பூசை போட்டார்கள். கரும்பால் கால் நிறுத்தி பூவால் பந்தலிட்டு நெட்டிமலர்ச்சரங்கள் தொங்கவிட்டு மல்லிகை முல்லை மருவோடு இருவாட்சி மலர்களையும் தூவி எட்டு லட்சங் கோடி இளநீர் கண்திறந்து ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புதுப்பானை கொண்டுவந்து பொங்கல் வைத்து நல்லதம்பி மகா தீர்த்தமாடி சிவசிவாவென்று திருநீறுபூசி காமாட்சி தாயே ஈசுவரியே என்று உச்சரித்து கருவாழையில் பள்ளயம் வைத்து தெரிந்து செய்தோமோ, அறிந்து செய்தோமோ அறியாமல்ச் செய்தோமோ கொண்டு பொறுத்து எங்கள் குலங்களைக் காக்கவேண்டும் தாயே என நல்லதம்பி பூசை செய்தான் உடனே நல்லதம்பி [1]மருள் வந்து நீங்கள் அன்பாய் கொடுத்த அமுது அனைவர்க்கும் சம்மதம் பக்கத் துணையாக நான் இருப்பேன் எண்ணும் பதினாறு பெற்று இதமாக வாழ்ந்திருப்பீர்கள் என்றான் பிறகு வாதுப் புதுப் கருப்பனுக்கும் தனிக்கருப்பனுக்கும் ஆடு, பன்றி முதலியன பலியிட்டு இவ்வாறே பூசை செய்ய நல்லதம்பிக்கு கருப்பன்சாமி அருள் வந்து மாசிமலை நாட்டில் கொல்லிமலை சதுரகிரி தழைத்திருக்க மாரி பொழிந்து ஆண்டு தோறும் சென்னல் நல்ல செழிப்புடன் விளையும் இனி ஒரு தீங்கும் இந்த மலைநாட்டுக்கு ஏற்படாது என்று கூறி நின்றான்.

—:0:—

[1] அருள் வருதல்.

# காமாட்சி தவசு

## நூல்

மூந்திமுந்தி விநாயகனே முருகா சரஸ்பதியே
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
சீர்வளருங் காட்சித் திருக்கம்பை தன்னிலேதான்
வாழ்வுபெருங் கம்பை மாதுகம்பை காமாட்சி
பாரி லூதித்துப் பாசுபதம் பெற்றகன்னி
அன்னப் பசுங்கிளியாள் அருந்தவசை நான்பாடக்
காமாட்சி அம்மன் கனத்தபசு தன்னை
அஞ்சிலொரு பங்கு அறிந்தமட்டும் நான்(பாடக்)
கொஞ்சி விளையாடுங் குஞ்சரமே (முன்னடவாய்)
மாதா வடிவெடுத்து வழியி லமர்ந்தகண்ணே
தாயார் வடிவுகொண்டு தடத்தில் அமர்ந்தகண்ணே
பேழை வயற்றோனே பெருமாள் மருமகனே
தண்டை அழகியனே சரிந்த வயற்றோனே
கொண்டை அழகியனே கும்பிட்டேன் உன்பாதம்
காமாட்சி ஈன்றெடுத்த கண்ணே நவமணியே
மீனாட்சி ஈன்றெடுத்த வெற்றி விநாயகனே
தந்தி முகத்தோனே தையல்நல்லாள் புத்திரனே
ஆனை முகத்தோனே அருள்சடையோன் புத்திரனே
வித்தைக் களஞ்சியமே விளங்குதண்டைக் காலோனே
சத்தியுட புத்திரனே சரிந்த வயிற்றோனே
ஆலமுண்ட கண்டர் அரனார் திருமகனே
பேரான பிள்ளையாரே பிரபலமாய் முன்னடவாய்
மூவருக்கு முன்பிறந்தாய் முருகனுக்கும் மூத்தோனே
யாவருக்கு முத்திவீடு அருளும் பெரியோனே
தேவருக்குந் தேவனே தெவிட்டாத(தெள்ளமுதே)
காட்டில் நடுவழியிற் கருவேலின் கீழிருந்து
மிரட்டித் துணிபிடுங்கு மீனாட்சி புத்திரனே
சிறுபிள்ளை கள்வேண்டித் தேன்குழல் படைத்தாலும்
அறிவுடையோர் வேண்டி அதிரசம் வைத்தாலும்
சிறுபெண்கள் வேண்டித் திருட்டரிசி படைத்தாலும்
மன்னவர்கள் வேண்டி மகாபூசை (செய்தாலும்)
எங்கு மொருமுகமாய் இரங்குமகா மூர்த்தியே
சொர்க்கம் போவார்க்குத் துணையாய் (இருப்பவனே)
வர்க்கம் பலகாரம் வாங்கும் பெரியோனே

அப்பம் பொரியவலும் அரியதற் முன்னூலும்
செப்பரிய தேன்கடலே சேரப் பதின்கலமாம்
பூங்கரும்பு நூறும் பொரியா யிரக்கலமாம்
நாவற் பழமாம் நல்ல விளாங்கனியாம்
முந்திரிப் பழமா முதிர்ந்த பலாச்சுளையாம்
முப்பழமுஞ் சர்க்கரையு மூவா யிரங்கலமாம்
உடைக்கநல்ல தேங்காய் ஒன்பதுநூ ருயிரமாம்
படைக்கநல்ல பச்சரிசி பதினு யிரங்கலமாம்
மொந்தம் பழமா முளைப்பயறுஞ் சர்க்கரையும்
வாழைக் கனியாம் நல்லவெல்லச் சர்க்கரையும்
கொம்பிற் கருந்தேனுங் கோதுபடாச் (செழுநெய்யும்)
கூனேடே தேனுங் குடத்தோடே பாலமுதும்
தேனுந் தினைமாவுந் தேவா மிர்தமுடன்
செங்கரும்பு ரஸ்தாளி சீனிக் கரும்புடனே
அப்பம் அதிரசமும் அன்பான தேன்குழலும்
பருப்பிட்ட பணியாரம் பதினு யிரங்கோடி
முறுக்குப் புணியாரம் மூவா யிரங்கோடி
ஒப்புடைய தோசை உதிர்ந்தபிட்டு மிட்டிலியும்
உங்காளிச் சந்தையமும் உண்டை உருளையும்
தேங்காய்க் கொழுக்கட்டை திரளான மானகமும்
மாங்காய் விளாங்கனியும் மாதுள நற்கனியும்
ஓங்கார மான ஒளிவான் ஐங்கரர்க்குப்
பாங்காக நீர்சொரிந்து பத்தியுடன் நீறணிந்து
தீங்கில்லாச் சாம்பிராணி தூபதீபந் தான்கொடுத்து
அரிசி பதார்த்தமுடன் அன்பாக வேபடைத்து
அறுமுகர்க்கு முன்னேனே அன்பா யமுதுசெய்யும்
எறும்புகடை யானைதலை எண்பத்து னன்குயிர்க்கும்
உயரும் பொருளாக உத்தமனே முன்னடவாய்
தவசுநிலை நான்பாடச் சரஸ்வதியே முன்னடவாய்

**தக்கன் பிள்ளைவரம் வேண்டல் :**

தக்கமக ராசனுக்குச் சந்தான மில்லையென்று
பிள்ளையில்லை யென்றுசொல்லிப் போனர் பெருந்தவத்தில்
வைகைக்குக் கீழ்ப்புறமாய் மாவிருண்ட சோலையிலே
தவமுனிவர் கோடி தவசிருக்கும் வனந்தனிலே
நெற்றியிலே கல்லைவைத்து நிற்பார் ஒருகோடி
ஊசிமுனை நாட்டி இருப்பார் ஒருகோடி
தவமுனிவர் கோடி தவசிருக்கும் வனத்தினிலே

தவத்திலே போயிருந்தான் ரர்வேந்த னப்போது
இருந்தார் பெருந்தவசு எல்லோருங் கொண்டாட
வெகுகோடி காலம் வெகுநாள் தவசிருந்தான்
கரையானும் புத்தெடுத்துக் கல்லிச்சி தான்முளைத்து
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே
திங்கள் கிழமை சிவன்பிறந்த சோமவாரம்
சிங்கா சனத்தில் சிவனிருக்கும் வேளையிலே
புலியா சனத்தில் போதவே பூசைபண்ணிப்
பூசை முடித்தார் புரிசடையான் அப்போது
அந்தநல்ல வேளையிலே தக்கன் அரகறாவென்றுரைத்தார்
சொன்னசத்தங் கேட்டு சோதி மணிமுடியான்
ஏதென்று சொல்லி இதமுடனே தான்கேட்க
அப்போது தக்கன் அவன்துயர முள்ளதெல்லாம்
எல்லாம் எடுத்துரைத்தான் ஈசுவரர்க்கு முன்பாக
மூதாக்கள் நாதாக்கள் முன்செய்த தீவினையோ
தாயாருஞ் செய்தகுற்றந் தானோ இதுதானோ
அல்லாமல் நான்தானும் அரும்பாவஞ் செய்தேனோ
முன்பிறப்பில் செய்தகுற்ற மூன்றுதோ இப்போது
இப்பிறப்பில் தானும் என்னஇடர் செய்தேனோ
எனக்கு மொருபிள்ளை இல்லாமல் போனதினால்
இவ்வனத்தில் தானும் ஈசுவரரைத் தானோக்கி
மனத்துயரம் விட்டு ஈசுவரரை
நினைந்துமிக இவ்வனத்தில் நீதிமுறை தப்பாமல்
இருந்தவமே மெய்யானால் ஈசுவரருந் தான்காமாட்சி
தருவா ரென்றுசொல்லித் தான்வந்தேன் கண்டாயே
என்ன மனத்தாபம் இருந்தாலும் ஈசுவரர்க்கு
என்பேரில் தயவுவைப்பீர் ஈசுவரரே என்றுசொல்லி
வந்தேன் பெருந்தவத்தில் வருவாறோ ஈசுவரரும்
என்றுசொல்லித் தக்கன் எடுத்தானப்போது
அப்போது ஈசுவரரும் ஆதிசக்தி தனையழைத்து
தக்கன் மனையிடத்தில் தான்போய் பிறவுமென்றார்
அப்போது ஈசுவரியும் ஆமென்று சம்மதித்து
தக்கனுக்கு கேட்டவரம் தான்குடுத்தார் ஈசுபரரும்
வரம்வாங்கிக் கொண்டு வந்துவிட்டான் தக்கனவன்
இந்தப் படிக்கு இருக்குமந்த வேளையிலே
பத்துமாதம் சென்று பார்பதியாள் தான்பிறந்தாள்
எண்ணும் இளங்கொடியாள் ஈசுபரியுந் தான்பிறந்தாள்
காஞ்சி புறமாளக் காமாட்சி தான்பிறந்தாள்

**காமாட்சியின் இளமைப் பருவம் :**

பிறந்த உடனே பிரபலமாய்த் தான்வளர்ந்தாள்
நாளொரு வண்ணம் பொழுதுமொரு மேனியும்
வச்சு வளர்த்தான் வகையான தக்கனுந்தான்
அஞ்சு வயதில் அறிவுநூல்கள் பலகற்று
ஆரும் வயதில் ஆரியங்கள் தானோதி
ஏழாம் வயதில் எல்லாந்தான் பாஷைகளும்
பதினஞ்சு பாசை கற்றளே ஈசுபரியும்
கொஞ்சி விளையாடிக் குயில்போல வார்த்தைசொல்லி
அம்மானை ஆடி அழகாகப் பந்தாடி
கன்னியர்கள் தான்சூழக் காமாட்சி வீற்றிருந்தாள்
வெற்றி மணிமுடியாள் வீற்றிருக்கும் வேளையிலே

**காமாட்சியின் திருமண பேச்சு நிகழல் :**

தக்கன் மனையிடத்தில் சம்மந்தஞ் செய்யவென்று
சந்தோஷ மாகித் தயவாய்ப் பிரியமுடன்
தாருகர்க்கு உன்மகளைத் தாருமென்று தான்கேட்டான்
தருகுறே மென்று தக்கனுர் தாமுரைத்தார்
நல்ல நாள்கேட்டு நல்முகூர்த்தம் உண்டுபண்ணி
திங்கட் கிழமை சிவன்பிறந்த ஞானயிலே
முகுர்த்த மென்றுசொல்லி முழங்கும் நகரியெல்லாம்
முகுர்த்தமென்ற சொல்க்கேட்டு மொய்குழலாள் தாதியர்கள்
தாதியர்கள் ஓடிவந்து தாயேநீ காமாட்சி
மாலையிட உன்னை வாருன்காண் தாருகனும்

**காமாட்சி தாருகனை மணக்க மறுத்தல் :**

தாருகா சூரன் தலைவெடித்துப் போகாதோ
மாலையிட என்னை வருவானே தாருகனும்
கோபித்துக் கண்சிவந்து கொல்லும்புலி போல
தக்கனும் எந்தனுக்கு தாயாதி ஆனான்காண்
ஏகாம் பரநாதர் என்செய்தார் கண்டாயே
அண்ணு எழுதிவிட்ட ஆதிபிரம தேவா நீ
எண்ண மென்றுசொல்லி எவரேடே நானுரைப்பேன்
ஆதி கைலாசம் ஆண்டவனைத் தானினைந்து
உன்னைநம்பி நானிருந்தேன் உற்றதுணை நீயெனவே
என்ன நினைவாக எழுதிவிட்டீர் பிருமாவே

மண்டலத்தில் என்சீவன் மண்ணில் மடிந்தாலும்
கர்த்தன் கைலாச நாதருக்கே பாரியென்று
சிந்தைமிகக் கலங்கி சிவனாரைத் தானினைந்து
எந்த விதத்தாலே இனியிருப்போ மென்றுசொல்லி
எண்ணாது எண்ணி ஏங்கிமுகம் வாடிநின்று
மெத்தக் கவலையுடன் வீற்றிருந்தாள் காமாட்சி
இப்படித் தானும் இருக்குமந்த வேளையிலே

**தக்கன் திருமண ஏற்பாடு செய்தல் :**

தக்கமக ராசன் தளம்பெரிய வாசலிலே
முகூர்த்தக் கால்நாட்டி பருவயிரத் தூணிருத்தி
வயிரத்தால் உத்திரங்கள் வகையாய் வளைபரப்பி
மேல்க்கட்டுத் தூக்கி விபரீதமாய்ச் சோடித்து
பட்டினால் மேல்கட்டிப் பாங்கா அலங்கரித்து
மணவறையைச் சோடித்து வகையாய் அலங்கரித்து
வாரார் பரிசனங்கள் வையகத்தார் எல்லோரும்
வேதாவும் பிருமாவும் வேந்தர் தேவேந்திரரும்
தேசத்திலுள்ள தேவரெல்லாம் வந்திருந்தார்
இந்திராணி சரசுபதியும் இறையோனும் வந்தார்கள்
வந்தார்கள் அப்போ மகாகோடி அரம்பையர்கள்
எல்லோரும் கூடி இதமாக வந்திருந்தார்
அம்மி வலமாக அரசாணி முன்பாக
பிரம்பு வலமாக பேய்க்கரும்பு முன்பாக
சாலுங் கரகமுந் தண்ணீரு முன்பாக
சந்திரனுஞ் சூரியனுந் தானவரு முன்பாக
சங்கு முழங்க இடிபோல முரசதிர
சிவலோக ரம்பையர்கள் சிந்துகவி பாட
சின்னங்கள் ஊத தெருவெங்கும் நின்றதிர
வாரார் பரிசனங்கள் வையகத்தா ரெல்லோரும்
வேதாவும் பிருமாவும் வேந்தர்தே வேந்திரரும்
தேசத்தி லுள்ள தேவரெல்லாம் சூழ்ந்திருக்க
செகண்டி மல்லாரி துந்துமி தான்முழங்க
வீதிக்கி வீதி விதமாய்க் குறிஞ்சிகட்டி
வீதிக்கி வீதி விதமான தோரணங்கள்
பதினெட்டு மேள வாத்தியங்கள் தான்முழங்க
வேதப் பிறாமணர்கள் வேதியர்கள் தான்முழங்க
மாப்பிள்ளைக் கோலமுடன் வரவழைத்து தாருகனை

காமாட்சி என்னும் கட்டழகி வாள்மயிலை
அலங்காரஞ் செய்து அழையுமென்று சொன்னார்கள்
தாதியரைத் தானழைத்துத்[1] தானழைக்கச் சொன்னார்கள்
தாதியர்க ளோடிவந்து தங்கமே தங்கமே காமாட்சி

**காமாட்சியை தோழியர்கள் அழைத்தல் :**

முகூர்த்தம் நிறைவேற மொய்குழலே வாருமென்றார்
அழைத்தார்கள் தாதியர்கள் அம்மனென்னும் பெண்திருவை
அச்சத்தங்[2] கேட்டு ஆதிகம்பை காமாட்சி
ஏதடி தாதியரே இதுவென்ன மாயமென்றாள்
கேட்டாளே ஈசுபரியும் கிளிகொஞ்சும் பாவனைபோல்
மாலையிட உன்னை வந்தார்காண் தாருகனும்
தக்கனுங்கள் தந்தை தானழைக்கச் சொன்னார்கள்

**காமாட்சி மறுத்தல் :**

சேதி யறியாயோ செந்தாமரைப் பூவே
வாருமென்று சொல்லி மங்கையர்கள் தானழைக்க
சிந்தியிளங் கண்ணீருஞ் சிவனே யென்றாள்
முத்துமுகம் வாடி முன்னெழுகுங் கண்ணீரும்
கூந்தல்மிக விரிந்தாள் கோபாலா வென்றுசொல்லி
ஆபரண மெல்லாம் அவிழ்த்துமிக விட்டெறிந்தாள்
நாகமணி கழற்றி நாலுதிக்கும் விட்டெறிந்தாள்
கோவென்று சொல்லி கொம்பனையாள் தான்புலம்ப
புலம்புங் குரல்கேட்டுப் பூலோக நாரதரும்
ஓடிவந்து அப்போது உலகாளுங் காமாட்சி
இந்த அகோரமெனும் இருக்கவந்த காரியமேன்
என்றுசொல்லி நாரதரும் எடுத்துரைத்தா ரன்னேரம்
நாரதரைக் கண்டு நாயகியா ளேதுரைப்பால்
வந்தமுனியேகேள் மகாதேவரை நோக்கி
நான்விரும்பும் காரியமும் நல்வசனம் வேறிருக்க
தண்ணீர் தவித்தார்க்கு எண்ணை கொடுத்தாக்கால்
தாகந் தீர்ந்திடுமோ தண்ணீர்விடாய் தீர்ந்திடுமோ
ஏகாம் பரநாதர் என்னைவந்து மாலையிட்டால்
அப்போது சம்மதிதான் ஆனதொரு மாமுனியே
பின்னை யொருவன் புணர்வானோ மங்கலியம்

---

[1] கூப்பிட்டு எனல்பொருந்தும் [2] அந்தமொழி எனல்அமையும்

தாருகனைக் கொன்று தலைவெடிக்க நானெரித்து
வந்தவந்த பேரையெல்லாம் மார்பை பிளந்தெரித்து
மாப்பிள்ளையாய் வந்தவனை மார்பைப் பிளப்பேனென்றாள்
ஓடிப்பிழையு மென்று உத்தமியுந் தானிரைத்தாள்
வந்தொரு நாரதரும் வாய்திறந்து பேசாமல்
தக்கன் அருகில்வந்து தானுரைத்தார் சேதியெல்லாம்
காமாட்சி அம்மன் கண்டிதமாய்ச் சொன்னதெல்லாம்

**தக்கன் சினம் :**

தக்கன் அதுகேட்டு தான்வெகுண்டு கோபமுடன்
என்வயிற்றுப் பிள்ளையென்று இருந்தேன் இதுவரைக்கும்
என்சொல்லு மீறி எதிர்த்தாளே கண்டாயே
ஆணாகப் பெண்வளர்ந்து அரசாளு மென்றிருந்தேன்
இப்படியாய்க் கொத்த இசகேடு சொன்னவளை
கொன்றெரிந்து போட்டாலுங் கோபங்க ளாறாது
வளர்தா லுதவியுண்டு மன்னவரே மாமுனியே
என்பெருமை தன்னை இழந்தேன் இவளாலே
மூக்கறுத்து என்னை முனைகுலையச் செய்தாளே
நாலுசபை அறிய நல்முகூர்த்தம் உண்டுபண்ணி
தேசத்திலுள்ள தேவ ரெல்லாம் வந்திருக்க
மனத்தை அறியாமல் மங்கலியஞ் சூட்டவென்று
சம்மதித்து எல்லோருந் தான்வந்தார் கண்டாயே
கொல்ல மனதுண்டாகிக் குணகேடன் ஏதுரைப்பான்
நல்லதயிர்ச் சோற்றில் நஞ்சைக் கலக்குமென்றான்
படுக்கையிலே குத்தி பாதாளத்தில் தள்ளுமென்றான்
அக்கினி தன்னை அரண்மனையில் போடுமென்றான்
வேகாது வெந்து வெந்து மனமுருகி
மனக்கி லேசமுடன் மாளிகையில் போய்படுத்தார்
பஞ்சு மெத்தைமேல்ப் படுக்கயிடங் கொள்ளாமல்
தூங்கும் மஞ்சம்மேலே தூக்கமிக வாறாமல்
வெந்து மனமுருகி இருந்தானே தக்கனவன்
அந்தநாள் சென்று அலகதிரோன் தோன்றியே
ஆழிநெடுந் தேரேறி அலகதிரோன் வந்துதித்தான்

**காமாட்சி தக்கன் உரையாடல் :**

காமாட்சி பார்பதியுங் பதுமையுடன் தானிருந்து
தன்னை வளர்த்தெடுத்த தாதிமுகம் தானோக்கி
தக்கன் மனதறிந்து தான்வாருந் தாதியரே

தாருகர்க்குப் பெண்கொடுக்கச் சம்மதித் தென்னவே
எந்தத் தலைமுறையில் இவர்களுட சம்பந்தம்
பத்தாக் குலத்தில் பார்க்குட்டி பதித்தால்
ஏசாறோ தன்னை என்னகதை பண்ணிவைத்தாய்
நல்ல குலம்பாத்து நடத்தினால் குற்றமில்லை
அரக்கர் குலத்திலென்னை ஆனகுடி நீபதித்தால்
சரியொத்த ராசாக்கள் தானில்லையே தாரணியில்
பிச்சை எடுத்தாலும் பெரியகுலந் தேடவேணும்
ஏச்சுண்டோ பூமியிலே எனக்குப் பெருமையுண்டோ
நாலு சபையறிய நல்லாய் நீ சொல்லுமென்று
இந்த வசனம் இனியுரைத்து வாருமென்று
அனுப்பினான் தாதியரை ஆயிளையாள் காமாட்சி
நல்லபுத்தி என்று நலமுடனே தாதியர்கள்
தக்கன் அருகில்வந்து தாதியருந் தெண்டனிட்டு
தாதியரைக் கண்டவுடன் தக்கன்வெகு கோபமுடன்
எங்கே வந்தீரென்று இனிகேட்டான் தாதியரை
தங்கப் பொன்மேனி தாயாருங் காமாட்சி
விந்தையுடன் சேதி விதங்களென்ன வென்றுசொல்லி
கேட்டு வாவென்று கிருபையுடன் அனுப்பிவிட்டாள்
வந்தமையா உங்களண்டை வாய்விசனஞ் சொல்லிவிடும்
வந்ததொரு வசனம் மன்னவனே கேட்டருளீர்
அப்போது தக்கன் அவள்பேச்சைப் பேசாதே
எனக்குத் தெரியாத இனிகுலமும் புத்திகளும்
அறிந்து பிறந்தாளோ ஆம்பிளையோ தானிவளும்
ராச குலமும் நாட்டுப் புதுமைகளும்
அறிந்து பிறந்தாளோ ஆனகுல முள்ளதெல்லாம்
இவள்பேச்சைக் கேட்டு இனிஇளைக்கப் போரேனோ
தனக்கொக்த பேரைத் தான்கட்டிக் கொள்வாரோ
என்னுடனே பேசாமல் இனிபோடி தாதியரே
கோவித்துத் தாதியரைக் கோத்தவரும் போகவிட்டார்
தாதியரும் ஓடிவந்து தங்கப்பூ மேனியர்க்கு
காமாட்சி நாயகியாள் கனகமுடி பொற்பாதம்
வந்துகண்டு தெண்டனிட்டு வாய்பொத்தி நின்றுகொண்டு
தக்கன் உரைத்த தான்வசன முள்ளதெல்லாம்
கேளுமடி ஈசுபரியே கிருபையுடன் சேதியெல்லாம்
அறிந்துவிடும் என்தாயே அவ்வசன முள்ளதெல்லாம்
கொஞ்சுங் கிளியே குணமயிலே கேட்டருளும்
வேதப் பிறாமணத்தி வேதாந்த நாயகியே
பூசைக் கருத்தி பூலோக நாயகியே

அன்னப் பசுங்கிளியே ஆதிபர மேசுவரியே
தக்கனுட சேதி தனைக்கேளும் பார்பதியே
சொல்லுமடி தாதியரே சொன்னதொரு சேதியெல்லாம்
தக்கன் உரைத்ததெல்லாஞ் சொல்லிவிட்டார் தாதியரும்

## காமாட்சி தவக்கோலம் பூணல்

கேட்டு மனமுருகி கிளிமொழியாள் காமாட்சி
இட்டஅணி கழற்றி இனிகொடுத்தாள் தாதிகையில்
சன்னசி வேடந் தவசி வடிவுகொண்டாள்
திண்டும் பிரம்புமது திரிசூலங் கைப்பிடித்து
போத்தும் புலித்தோலும் புள்ளிமான் ஆசனமும்
இட்டா திருநீறும் எங்குஞ் சடைமுடியும்
காவி உடையணிந்து கையில் பிரம்பணிந்து
ஆதி கைலாசர் அரனுரைத் தானினைந்து
நாகஞ் சிலம்பணியாள் நான்தவசு பண்ணவென்று
அரகரு வென்றுசொல்லி அம்மனெழுந் தருளி
மணப்பந்த லிட்டிருக்கும் மாளிகையில் வந்துநின்று
கண்ணாலே தான்பார்க்க கருகியவன் வீழ்ந்தான்
வந்ததொரு தேவரெல்லாம் மதிகலங்கி ஓடிவிட்டார்
சரசுபதியும் இந்திராணி தான்பயந்து ஓடிவிட்டார்
வேத முனிவோரும் பிருமாவுந் தான்பயந்தார்
மணவறைக் கோலமெல்லாம் மண்டித்தீ மூண்டதுவே
சித்திரமும் பூச்சரமுந் தீய்ப்பட்டு எரிந்ததுகாண்
அகத்திய மாமுனியும் அன்பான நாரதரும்
வேத மகாமுனியுங் கலங்கி நிற்கலுற்றார்
முனிவரையுந் தான்பார்த்து மொழிக்கின்ரு எம்மணங்கே
முற்சேதி பிற்சேதி முனிவர்களே உங்களுக்கு
எல்லாந் தெரிந்திருக்க எங்களுட தக்கனுக்கு
குருவாகி நீயிருக்க கோத்திரங்கள் தானறிந்து
சொல்லாமல் நீங்களுந்தான் சும்மா இருந்ததென்ன
தில்லைவன நாதருக்கு தேவியென்று சொல்லாமல்
இசகேடன் தாருகனை ஏனழைத்து மாளவைத்தீர்
இந்தமட்டுஞ் சூதுகளை ஏன்வளர்த்தீர் மாமுனியே
என்றுசொல்லி ஈசுபரியாள் இதமுடன் தானுரைக்க

## முனிவர் மறுமொழி உரைத்தல்

அம்மன்தனைப் பார்த்து அம்முனிவர் ஏதுசொல்வார்
வேத முனிவோரும் வேதாவுந் தக்கனுக்கு

சொன்ஞேம் வருஞ்சேதி தீங்குவரு மென்றுசொல்லி
கெடுமதியள் வந்ததென்ருல்க் கேட்பாரோ வையகத்தில்
வருத்தம்வந்தால் தான்தெரியும் வாரதைசொல்லக் கேள்ப்பாரு
இதுநடுவில்க் கேள்ப்பாரு எவர்க்குந் தெரியாது
அப்போது மாமுனிக்கு அம்மனும் ஏதுரைப்பாள்

## முனிவர் மொழிக்கு அம்மன் மறுமொழி உரைத்தல் :

தவசுக்கு நான்போரேன் சதாசிவனைத் தான்வேண்டி
கைலாச நாதருந்தான் காண்பாரோ என்னையென்ருள்
ஏகாம்பர நாதர் இசைவாரோ எந்தனுக்கு
என்றுசொல்லி அம்மனுந்தான் ஏதுரைப்பார் மாமுனியும்
தக்கனுக்குச் சமானமென்று தான்வந்தால் கொஞ்சமென்று
உன்னையவர் வேண்டி இங்குவரப் போருரோ

## முனிவர் தவசின் கொடுமையை விவரித்தல் :

கொடிய வயதுடைய குண்டுமணி விளக்கே
சாதிப்பூ மேனியுள்ள சகலருக்கும் நீதாயே
தண்ணீர்பட்டால் கொப்பளிக்குந் தங்கத் திருமேனி
பூப்பட்டால் கொப்பளிக்கும் பொன்னின் திருமேனி
எப்படி தவசிருந்து இனிவெல்லப் போருய்நீ
அக்கினிக் காற்ருல் அனலெரியுங் கானகத்தே
வண்டுகள் தும்பிகள் மார்பிளக்குங் கானகத்தில்
மழையுங் குளிர்காற்றும் வாடைக்குளிர் வீசிநிற்கும்
தவசைக் குலைப்பதற்கு சதாகோடி வேடருண்டு
மெத்தப் பிருயமல்ல முன்தவசு இருந்ததில்லை
இந்த தவசுக்கு இனிதவத்தால் மோசம்வரும்
கற்பைக் குலைப்பார்கள் கானகத்தில் வேட்டுவர்கள்
மெத்தவுண்டு அவ்வனத்தில் வெகுமோசம் வந்துவிடும்
கரடி புலிகளுண்டு காட்டானை மெத்தவுண்டு
தவசைக் குலைக்கவருந் தாயே வயதுகொஞ்சம்
சிங்கமுடன் யாளிகளும் செவ்வேங்கை மெத்தவுண்டு
கொள்ளிதலைப் பேயும் குறும்பேயும் நெடும்பேயும்
சட்டித் தலைப்பேயுஞ் சண்டிமுனி செம்முனியும்
வந்து வளைந்துகொள்ளும் வனப்பேய்கள் உள்ளதெல்லாம்
தாயே வயதுனக்குத் தபசிருக்கப் [1]போதாது

[1] பத்தாது என உள்ளது

கொஞ்சப் பிருயமல்லோ கோதுபடா மேனியரே
இதுதவிர அவ்வனத்தில் இன்னும் பயங்களுண்டு
ஆண்பூதம் பெண்பூதம் அண்டத்தை முட்டிநிற்கும்
பூதங்கள் மெத்தவுண்டு போருடும் அவ்வனத்தில்
தவசிருக்க ஒட்டாது சதாகோடி பூதமது
வேதாள மெத்தவுண்டு வெகுலூட்டி செய்யுமது
மனது பிடியாது மகாதவத்தில் மோசம்
தவசிருக்கும் பேர்களுக்குத் தாழ்வுற லாகாது
இத்தனை உபத்திரியம் எப்படித் தவசிருப்பாய்
தாயாரே உந்தனுக்குத் தபசிருக்கப் பிருயமல்ல
குழந்தைப் பிருயமதில்க் கோடிதவஞ் செய்திடலாம்
என்றுமேத்த அம்மனுக்கு இயல்பாகத் தானுரைத்தார்
உரைத்த முனியைப்பார்த்து உத்தமியாள் ஏதுரைப்பாள்

**அம்மன்மறு மொழி பகர்தல் :**

எப்படியோ என்தலையில் எழுத்தைத் துடைப்பார்களோ
அப்படியே பிருமாவும் அவரெழுத்து முண்டானல்
எங்கே இருந்தாலும் எழுத்துவசம் போகாது
எப்படியு மாமுனியே என்தவசைப் பாருரோ
கர்த்தர்களுக்கே பாரியென்று காமாட்சி தானுரைத்தாள்
முனிவர்தனை யனுப்பி மொய்குழலாள் தானடந்தாள்
தவசுக்குப் போகவென்று தாயார் நடக்கலுற்ருள்

**அம்மன் தவசுக்கு காஞ்சியே ஏற்றதெனல்**

தற்பரனை வேண்டித் தவசிருக்க வாருளே
வனத்தைத் திசைநோக்கி மகாதவசைத் தானினைந்து
நடந்தாளே கானகத்தில் நாகலோகப் பெருந்தீவில்
தவசிக்கு ஏத்தவிடந் தானறிந்து போகவென்று
காஞ்சி வனமென்னுங் கனத்தபெருந் தீவில்
அந்தவனம் புகுந்து ஆட்சிக்கம்பை காமாட்சி
அன்னப் பசுங்கிளியில் அருங்கானகத்தே வருகையிலே

**அம்மனின் வருகைகண்டு உயிரினங்களின் மகிழ்ச்சி :**

வனத்திலே உள்ள வாழ்மிருகம் பட்சியெல்லாம்
பார்பதியாள் வாராளென்று பட்சிவந்து தெண்டநிட்டு

வர்ணமயி லன்னமெல்லாம் வான்சிறகைத் தான்விரித்து
தோகைமயி லுள்ளதெல்லாந் தோகைதனை விரித்து
அம்மனுட பக்கல் அருகிலிரு புறமும்
சூரியன் படாமல் தோகையில் மறைத்து
கூட நடக்குங் குணமயில்க ளுள்ளதெல்லாம்
கூடிவந்து தெண்டநிட்டுக் கூடிவிளை யாடிவரும்
அன்னக்கிளி உள்ளதெல்லாம் ஆட்சியரைத் தெண்டநிட்டு
ஆத்தாளுடன் பேசி அருகிருந்து வாழ்ந்திருப்போம்
என்றுசொல்லி அன்னமெல்லாம் இதமுடனே தானடக்க
செந்தலை நாகம் சேர்ந்து குடைபிடிக்க
படத்தை விரித்துப் பார்பதிக்குக் குடைபிடிக்க
கரடிபுலி சிங்கமெல்லாங் கண்டுமிக தெண்டநிடும்
வனத்தில் நுழைந்து மாதா நடக்கலுற்றாள்

## அம்மனின் வருகை கண்டு இயற்கையின் சூழ்நிலை

பூமலரு மில்லாத பூவிருட்சங்க ளுள்ளதெல்லாம்
காயில்லா மரங்களெல்லாங் காயுங்கனி பழமும்
செண்பகப்பூ மரங்களெல்லாம் பூத்துச் சிதறிடுமாம்
அடுக்கரளி செண்பகப்பூ ஆனமருக் கொழுந்து
மந்தாரை பிட்சி மருவோ டிருவாட்சி
மல்லிகை சிவந்தி மலர்ந்து சிதறிடுமாம்
ஆத்தாள் நடந்துவரும் அந்தவழி நெடுக
பூமியிலே பாதம் புழுதிபடு மென்றுசொல்லி
விருட்சங்க ளுள்ளதெல்லா மெத்தமலர் தூவியதே
வண்டுகள் பாட வாசமிக வீச
தும்பிகள் பாட சுகந்தம்பல வீச
அன்னக் கிளியாள் அருகிருந்து இசைபாட
குயில்கூவ மயிலாட கொம்பனைக்கி முன்பாக
மேகம் பணிசெய்ய மேகக்கன்னி தாலாட்ட
கண்டுமன மகிழ்ந்து கன்னிகம்பை காமாட்சி
பூரித்தாள் ஈசுபரியும் புலிபோல் லங்கரித்தாள்
வந்துபணி செய்தவரை மாதுகம்பை ஏதுரைப்பாள்
இன்னபதம் பெறுவீர் இனையபாத முண்டாவீர்
பின்னைப்பதம் பெறுவீர் பெருமாள் துணையுமுண்டு
என்றுசொல்லி அம்மன் ஏகினாள் அப்போது
சுகமா இருங்களென்று சோதி மணிமுடியாள்
இருமென்று தானடந்தாள் இயல்பெரிய காமாட்சி
அவ்வனத்தை விட்டு அப்பால் நடக்கையிலே

மாந்தேன் கனியுடைந்து வழிந்துவரும் வெள்ளமது
தேங்கா யுடைந்து திருக்கம்பை சேர்ந்திடுமாம்
அந்தவிடஞ் சென்று அப்பரமே போகையிலே
கம்பை நதியுங் கைலாசப் பொய்கைகளும்
ஆரு மந்தியும் அமர்ந்திருக்கும் பொய்கைகளும்
ஏகாந்தி யாக எதுத்த தவசிருக்க
கண்டு மனமகிழ்ந்து கன்னிகம்பை காமாட்சி
தவசுக்கு ஏற்றவிடந் தானுகு மென்றுசொல்லி
திருக்கம்பை யாற்றருகே செய்ய தவசிருக்க
பார்த்து நினைந்தாலே பார்பதியுங் காமாட்சி
உத்தி நினைந்தாளே உத்திரரே தஞ்சமென்று
சிவசிவா வென்றுசொல்லி சிவனே அடிவணங்கி
அரகரு வென்றுசொல்லி மிகநினைந்தாள் ஈசுபரியும்
அந்தப்படி நினைந்தாள் ஆதிகம்பை காமாட்சி.

**காமாட்சியின் தவசு நிலை :—**

வேல்பொருது கண்ணுளும் வெண்ணீற்றுக் காப்புமிட்டாள்
சிவசிவா வென்று திருநீற்றுக் காப்புமிட்டாள்
பஞ்சாட் சரமணிந்தாள் பார்பதியுங் காமாட்சி
ஆயிர அடியலகு அடவுடனே தானிருத்தி
அதுமேலே ஏழுகும்பம் அணிஅணியாய்த் தானிருத்தி
குடத்தின்மேல்ப் பொன்னூசி கூரியவாள் தானிருத்தி
பொன்னூசி மேலேயவள் பெருவிரலைத் தானூணி
அரகருவென்று ஈசுவரியாள் அருந்தவத்து மீதேறி
சிவசிவா வென்றுசொல்லி தேவி தவசிருந்தாள்
ஏகாம்பர நாதர் என்னைமணஞ் செய்யவென்று
தற்பரனை வேண்டி சங்கரியுந் தவசிருந்தாள்
அருந்தவத்து மீதேறி ஆலித்தாள் ஈசுவரியும்
அண்ணாந்து பார்த்து ஆலித்தாள் ஈசுபரியும்
பூமியைப் பார்த்து பூரித்தாள் ஈசுபரியும்
அந்த வனத்திலுள்ள ஆன மிருகமெல்லாம்
சிங்கங் கரடிபுலி சேர்ந்துவந்து தெண்டநிட
மானுங் கலையும் வந்துமிகத் தெண்டநிட
அன்னமுந் தாராவும் அருகிருக்கும் புள்ளினமும்
ஐந்தலை நாகமும் அம்மன்முடி மேலிருக்கும்
நாகங் குடைபிடிக்க நாகக்கன்னி தாலாட்ட
சங்கரனை வேண்டித் தாயார் தவசிருந்தாள்
முத்திக்கி வித்தே முக்கணனே போற்றியென்று

செவ்வேரு ஈசுவரனே சிந்தையிலே போற்றியென்று
இருந்தாள் பெருந்தவசு ஈசுவரனைத் தான்வேண்டி
இப்படித்தான் தவசு இருந்தாள் வெகுனளாயி.

**சந்திரனும் சூரியனும்**
**காமாட்சியின் தவசைப்பற்றிக் கூறல் :-**

சந்திரருஞ் சூரியருந் தானவருங் கண்டுமெச்சி
தேவந்திரன் சபைக்கிச் சென்று ரிருவருமே
முப்பத்து முக்கோடி தேவர்களு முன்புதொழ
நாற்பத் தெண்ணாயிரம் நமன்கோடி சித்தர்களும்
தும்புரு நாரதருஞ் சுகந்தகெரு டாழ்வாரும்
சித்திய வித்தியாதரருந் தெய்வலோக ரம்பையரும்
எல்லோருங் கூடி இருக்குமந்த வேளையிலே
சந்திரருஞ் சூரியருந் தானவருங் கண்டுமெச்சி
தேவர்களை நோக்கித் தெண்டனிட்டு ஏதுரைப்பார்
தக்கன் குமாரத்தி தவசிருக்கு மவ்வனத்தில்
கண்டு முடியாது காமாட்சி தன்தபசை
பார்க்க முடியாது பார்பதியாள் தன்தபசை
ஆயிரத்தைந் நூறுமுழம் அலகு முனைநிறுத்தி
அதுமேலே ஏழு பாசி முனைநிறுத்தி
பாசி முனைமேல்ஏழு கடுகு முனைநிறுத்தி
கடுகுமுனை மேலேஏழு கும்பந் தனைநிறுத்தி
கும்பமுனை மேலேஏழு கூரியவாள் தானிருத்தி
கூரியவாள் மேலேஏழு பொன்னூசி தானிருத்தி
பொன்னூசிமேலே ஈசுபரியாள் பெருவிரலைத் தானூணி
அருந்தவசு பண்ணுகிருள் ஆதிபரஞ் சோதியவள்
அவளஞ்சு சடையழகி ஆனந்த ரூபழகி
குஞ்சிச் சடையழகி கோபாலன் தங்கையவள்
அவள்நாலு முகத்துக்கும் நாலு சடையழகி
இந்தப் படியாக இருக்கிருள் ஈசுபரியாள்
ஓசை மணிக்குரலாள் உத்தமியாள் தன்தவசை
பார்பதியாள் தன்தபசை பார்க்க முடியாது
தவசுநிலை கண்டவர்க்குச் சற்றும்மனங் கூடாது
இன்றல்ல நேற்றல்ல இருபது வருஷமல்ல
கண்டுகண்டு சனங்களுக்கு கலங்குதே கெற்பமெல்லாம்
தவசை இனிமாற்றித் தானழைக்க வேணுமைய்யா
தாருகனைக் கொன்றதுவும் தக்கனுடன் சொன்னதுவும்
அழகில் மிகுந்த அபரஞ்சிப் பூமாலை

பூருவத்தில்த் தானும் பொற்கொடியுங் காமாட்சி
ஆருக்குப் பாரியென்று அகத்தியமுனி தானுரைக்க
அப்போது நாரதரும் அகத்தியர்க்கு ஏதுரைப்பார்
ஆதி கைலாசம் அரனுரைத் தான்வேண்டி
ஊசி முனைநாட்டி உத்தமியாள் தவசிருக்க
பார்பதியாள் இத்தவசை பார்க்க முடியாது
அத்தவசு மாற்றி அவள்கேட்ட வரங்கொடுத்து
இரட்சிக்க வேணுமென்று நாரதருந் தான்பணிந்து
தக்கனுட பெண்ணைத் தான்கொள்ள வேணுமென்று
இப்படிச் சொன்னீரே இந்தச்சபை தன்னிலே
மனதிலே எண்ணி மன்னரெல்லாஞ் சொல்லவந்தீர்
ஆனாலும் என்ன அவள்தவசை நான்மாற்றி
தவங்குலைத்து வாரனென்று தற்பரனும் தானுரைத்தார்
அப்போது ஈசுபரரும் அனுப்பலுற்றார் தூதுவரை
வண்ணச்சிலை வேடர் வந்து பணிந்தார்கள்
வாடாபுனல் வேடர் வனத்திலொரு பெண்தவசை
நெட்டூர மாக இருப்பாள் பெருந்தவத்தில்
தவங்குலைத்து வாருமென்று தற்பரனார் தாமுரைத்தார்

**புனல்வேடர் காமாட்சியின் தவசை அழித்தல்:-**

நல்லதென்று சொல்லி நடந்தார் புனல்வேடர்
கம்பைத் தவசிருக்குங் கனத்தவனம் உள்புகுந்து
எதிர்த்துச் சினத்து எல்லையெங்கும் ஆர்ப்பரித்து
அண்டங் கலங்க அதட்டியே வில்வாங்கி
இவ்வனத்தி லுன்னை இறக்கடிப்பே னென்றுசொல்லி
கண்ட துண்டமாகக் கழுத்தறுப்பேன் தப்பாது
சொல்லுவே னுன்னை குலைப்பேன் தவசுதன்னை
மழைமாரி போலே வாணந்தொடுக்க லுற்றார்
மலைகள் தவிடாக வானரங்கள் இற்றுவிழ
அண்டங் கிடுகிடென அதட்டிச் சிலையோட
வாணங்கள் தொட்டார்கள் வனவேட ரப்போது
அஞ்சாப் பெரும்புகழாள் ஆட்சிக்கம்பை காமாட்சி
சிவசிவா வென்று சிந்தையிலே தானினைந்து
ஏண்டா மிரட்டுகிறாய் இதுக்குநான் அஞ்சுவேனோ
இந்தத்திருணி யெல்லாம் என்முன்னே காட்டாதே
பெண்மேலே வில்லங்கம் போடாதே போடாதீ
இந்தமிகச் சண்டை இனிப்பண்ண வேண்டாங்காண்
உனக்குச் சரியான உத்தகுல வேடருடன்
எதிர்த்தால்ச் சரியாகும் என்முன்னே நில்லாதே

என்றுசொல்லி அம்மன் அவன்விட்ட பாணமெல்லாம்
துண்டந் துண்டமாகத் துணித்தாளே ஈசுபரியும்
வேடன்மிகப் பயந்து மெய்மறந்து கைசோர்ந்து
ஈடுபட மாட்டாமல் ஈசுவரனுர் பக்கலுக்கு
வந்துகண்டு தெண்டநிட்டு மகாதேவர் தன்னருகே
ஆதி கைலாசம் அரனுரே போற்றியென்று
தேவரீர் சொன்னபடி செய்தேன் வனந்தனிலே
அடங்காத வாணமெல்லாம் அதட்டி எறியலுற்றேன்
மலைகள் கிடுகிடென வான்மலைகள் தத்தளிக்க
அண்டங் கிடுகிடென ஆனதொரு பாணமெல்லாம்
தொடுத்ததொரு பாணமெல்லாம் தூளுபொடி யாச்சுதுகாண்
அஞ்சாப் பெரும்புலியை அசைக்கவெண்ணுல் போகாது
அஞ்சாமல் நின்று ஆரடா வென்றுசொல்லி
இன்னமுண்டோ வீரியங்கள் இதுதானே வென்றுரைத்தாள்
என்றுமிகச் சொன்னுளே இயல்பெரிய காமாட்சி
தாருகனைப் போலே தானெரிந்து போகாதே
இந்தச் சவுரியங்கள் என்முன்னே காட்டாதே
கோபங்கள் வந்ததென்ருல்க் கொல்லுவேன் பாருமென்ருள்
என்னுல் முடியாது ஈசுபரனே என்றுசொன்னுர்
அப்போது அரனும் ராட்சதரைத் தானழைத்து
கங்கை வனத்தில்க் காமாட்சி தன்தவசை
தவசைக் குலைத்துத் தான்வாரு மென்றுசொன்னுர்

**ராட்சதர்கள் காமாட்சி தவசைக் குலைத்தல்:-**

அப்போது ராட்சதரும் ஆதிசிவன் சொல்படிக்கி
தப்பாமல் வந்துநின்று தவசைக் குலைப்பமென்று
கானகத்தில் வந்து கனதவசைத் தான்பார்த்து
எந்த விதத்தாலே இனிவெல்லப் போரமென்று
மாயமாய்ச் சூதெடுத்து மருவிவிளை யாடலுற்ருர்
மானுங் கலையும் மருவிவிளை யாடலுற்ருர்
மன்மதனும் ரதியு மருவியிருந் தாப்போல்
சேர்ந்து இருவருமாய் தேவிமுன்னே சொல்லலுற்ருர்
காமாட்சி தான்பார்த்து நிலைகுலைந்து நிற்கவென்று
கண்டவுடனே கற்பழிய வேணு மென்று
இப்படியே மாமுனிவன் இருந்துவிளை யாடுவதே
கண்முழித்துப் பாராமல் காமாட்சி வீற்றிருந்தாள்
கூப்பிடவே மாமுனிவன் கூடிவிளை யாடலுற்ருர்
தவத்தால் பெரியவளே தங்கமெனுங் காமாட்சி
பாருங்காண் எங்கள்வித்தை பைங்கொடியே இப்போது

ஆடுகிற வித்தையெல்லாம் வொண்ணுநோ பார்த்தாக்கால்
கண்ணுலே நீபார்த்தால் கவலையினித் தீருமம்மா
அப்போது ஈசுபரியும் அரியென்றும் பேசாமல்
பேசாதே போடாநீ பேய்கொண்ட மாமுனியே
கானகத்தில்க் கீர்த்திகொண்ட கண்மணியே போடாநீ
தவத்தால்ப் பெரியதொரு சத்திக்கம்பை ஏதுசொல்வாள்
தவசுநிலை விட்டுவந்தால்ப் பார்ப்போமடா வித்தையெல்லாம்
இதுநடுவே பேசாதே இனிப்போடா மாமுனியே
சொன்னமொழி கேட்டு சூதாடு மாமுனியும்
மாமுனியும் பொய்யல்லவோ மகாதேவரைத் தாள்பணிந்து
எங்களால் ஆனமட்டும் பார்த்தமையா ஈசுவரரே
ஆருலுங் கூடாது ஆதிசக்தி தன்னையிப்போ
என்றுசொல்லி மாமுனிவர் இதமுடனே நிற்கையிலே
அப்போமகா தேவருக்கு அதிகோபந் தானுகி
வாது மகாமுனியே வருகவென்று தானழைத்து
கம்பை தவசிருக்குங் கானகத்தில் போய்புகுந்து
காமாட்சி தன்தவசைக் கடுகக் குலையுமென்ருர்
அப்போது வாதுமுனி அதிர்ந்துமிக ஓடிவந்து
கம்பைத் தவசிருக்குங் கானகத்தில் வந்துகண்டு
அண்டங் கிடுகிடென அதிர்ந்து சுழற்றியதே
வாதுகொண்ட வாயுவும் வந்து வளைந்ததுவே
மண்ணும் விண்ணுங் கொள்ளாத மரம்பிடிங்கிப் போகவென்று
தபசைச் சுழற்றித் தரையேடே மோதியதே
செய்யாது செய்தாலும் சீவன் மடிந்தாலும்
உன்னைவிட்டு நான்தானும் உத்தமனே போறதில்லை
என்னென்ன செய்தாலும் ஏகாம்பர நாதர்
பாதமே தஞ்சமென்று பைங்கொடியும் வீற்றிருந்தாள்
மெத்த விளையாடி மெய்சலித்து வாதுமுனி
சத்தி கைலாசம் சங்கரரை வந்துகண்டார்
என்னுலே ஆனமட்டும் பார்த்தேன் பராபரியே

**தபசைக் குலைக்க வருணனை ஏவுதல் :**

வருணமக ராசாவே வாருமென்று தானழைத்து
வருணர்தனைப் பார்த்து மகாதேவ ரேதுரைப்பார்
தக்கன் மகளுடைய தபசைக் குலையுமென்ருர்
அப்போது வருணன் அழைத்தானே மேகமெல்லாம்

மேகமெல்லாங் கூடிவந்து மின்னல்மிக வெரித்து
சற்றேழு லோகமெங்குந் தரணியெங்கும் பொழியுமென்றார்
கார்மேகம் வந்து கவிந்ததுகாண் அவ்வனத்தில்
எல்லையெங்குஞ் சுத்தியே இறங்கிற்று மேகமெல்லாம்
எங்குமதிரும் இடியதிரும் பூமி எல்லாம்
சற்றேழு லோகமெங்குந் தரணியெங்கும் பொழிந்ததுவே
கல்லு மலைகளெல்லாங் கரையவே தான்பொழிந்து
கொக்கரித்து வெள்ளமெல்லாங் கூடி எழுப்பியதே
ஆகாச மூடுருவி அடர்ந்துவரும் வெள்ளமது
மாண்டுதுகாண் அப்போ வனத்திலுள்ள மிருகமெல்லாம்
பாதாளங் குத்தி பருத்தமலை தான்பிடிங்கி
அசைத்துப் பாடியதே ஆர்ப்பரித்து கெங்கையரும்
ஆதிசக்தி காமாட்சி அதிகமுள்ள செஞ்சடைச்சி
நாலுமுகத்தி லேயும் நாலுசடை வேரூணி
எங்கு மசையாமல் இருபுறமும் வேரூணி
காற்று மழையுங் கனத்தயிடி தான்முழங்க
அதிர்ந்து பொழியுரத்தை ஆதிசக்தி தானறிந்து
கண்டுமன மகிழ்ந்து காமாட்சி வீற்றிருந்தாள்
ஆதி கைலாசம் அரனாரைத் தானினைந்து
தஞ்சமென்று வீற்றிருந்தாள் தாயார் சடைமுடியான்
மழைபொழிந்து வெ்லமது வருகிறதைத் தான்பார்த்து

## கங்கையென எண்ணி வெள்ளத்தை ஏசுதல்

கொஞ்சுங் கிளிமொழியாள் கூப்பிடாள் கெங்கையவள்
எங்கானுங் கெங்கையரே என்னோடு எதுக்கவந்தீர்
உன்னுடைய நன்னடைத்தை உரைக்கிறேன் நீகேளாய்
கன்னி கழியாமல் காப்புநூல் வாங்காமல்
அரசாணி முன்பாக அருகுமணஞ் சூடாமல்
தாயுந் தகப்பனுந் தானொருவர் காணாமல்
சாதிக்கு மாகாமல் சடையி லொளிந்தாயே
உன்னைப்போல் கொஞ்சம் ஒளிகுடி போவாரோ
சாதிகுலம் பழிக்க தாழ்ந்தவர்கள் தானேச
பார்த்தவர்கள் தானேச பளுப்பட்டுப் போனேனோ
கள்ளிதிருடி நீயேன் கற்பைக் குலைக்கவந்தாய்
உனக்குநான் தோற்பேனோ ஊதாரி போடியென்றாள்
கள்ளிக்கு நான்பயந்தால் சீமையிடங் கொள்ளாதே
எரிப்பேன் ஒரு சினத்தில் என்கையிலே ஆகாதோ

உன்னை அனுபவித்த உத்தமரை நான்வேண்டி
முத்திபெற வேணுமென்று இத்தவசு நானிருந்தால்
என்னை மதியாமல் இங்குவந்தாய் இப்போது
ஓடிப் பிழையுமென்று உத்தமியாள் தானுரைத்தாள்
அப்போது செங்கையம்மாள் அவ்விசயந் தான்கேட்டு
வாடி முகஞ்சோர்ந்து வர்ணமுகம் வேறுபட்டு
கெங்கைமுகம் பார்த்துக் கிளிமொழியாள் ஏதுரைப்பாள்
தவங்குலைக்க வந்தீரோ தங்கையரே வென்றுரைத்தாள்
அப்போது கெங்கையரும் அழுதுமுகஞ் சோர்ந்து
கண்ணீர் தழும்ப கடக்கப்போய் திறக்கலுற்றாள்
சிவனா ரிடத்தேபோய் சிந்தித்துத் தெண்டனிட்டான்
தெண்டனிட்ட கெங்கையரே சேதியென்ன சொல்லுமென்றார்
போனதுவும் வந்ததுவும் பேச்சுமெத்தக் கேட்டதுவும்
ஏசாது பேசி ஈனங்கள் சொன்னதுவும்
பேசாது பேசி பேச்சுமெத்தக் கேட்டதுவும்
வேசியென்று என்னை விகர்தமாய்ச் சொன்னதுவும்
இப்படிக்கிச் சொல்லு என்னையவள் ஏசலுற்றாள்
என்றுமிக வேதான் ஈசரிடம் தானுரைத்தாள்
கேட்டாரே ஈசுபரரும் கிலேசமெத்த உண்டாகி
அப்போது ஈசுவரர்க்கு அதிகோபம் உண்டாகி

**காமாட்சியை தோழியர்கள் அழைத்தல் :**

மலையைத் துளைக்கும் வண்டுகளைத் தானழைத்து
கல்லைத் துளைக்குங் கருவண்டே வாருமென்று
ஆதி கைலாசம் அரனாரைத் தெண்டனிட்டார்கள்
வண்டுமுகம் நோக்கி மகாதேவர் ஏதுசொல்வார்
கங்கைவனந் தானிருக்குங் காமாட்சி தன்தபசை
தவசைக் குலையுமென்று தானனுப்பி வண்டுகளை
நல்லதென்று வண்டுகளும் நன்றாய் ஒருமுகமாய்
மரங்கள் தவிடாக மாமரங்கள் பார்த்துவிழ
பீரங்கி உருண்டையைப்போல் புறப்பட்ட வண்டுகளும்
ஆட்சிக்கம்பை தன்தவசை அதிர்ந்து துணைக்கவென்று
மகாதேவி மார்பிலேதான் வண்டுவந்து தோன்றியதே
பக்கத் தெலும்பைப் பழுவெலும்பை அஞ்சுதுண்டாய்
காதுசெவி இரண்டுமே கன்னிப்பழு வெலும்பும்
அதட்டித் துளைத்ததுகாண் ஆனவண்டு உள்ளதெல்லாம்

செங்குருதி ரோகமெல்லாம் சேருடவே துளைத்து
துண்ட துண்டமாகத் தும்பித் துளைத்ததுவே
பட்டமரம் போலே பழுதுபடவே துளைத்து
ஆனமட்டுந் தும்பிகளும் அதிர்ந்து துளைத்ததுவே
என்ன துளைத்தாலும் ஏகாம்பர நாதர்
பாதமே தஞ்சமென்று பார்பதியும் வீற்றிருந்தாள்
சல்லடைக் கண்போலே சரீரமெல்லாந் தான்துளைத்து
ஆனமட்டும் பார்த்து அந்தத்தும்பி யெல்லாம் ஏதுரைக்கும்
மலையைத் துளைத்தோம்வான் மலையை யூடறுத்தோம்
கல்லைத் துளைத்தோம்வான் மலையை யூடறுத்தோம்
நம்மாலே ஆனமட்டும் நாயகியைத் தான்துளைத்தோம்
ஏலங் குயிலே இவளைவெல்லப் போகாது
தும்பி முகமழுங்கித் தும்பியெல்லாம் ஒருமுகமாய்
வண்டெல்லாங் கூடி மகாதேவர் பக்கலுக்கு
ஆயிரம் வண்டுவந்து அரனுரைத் தெண்டனிட்டு
சிவனாரும் பாத்துச் சேதியென்ன வென்றுரைத்தார்
வண்டெல்லாம் ஏதுசொல்லும் மகாதேவரைத் தானோக்கி
கனத்தபசு செய்யுங் காமாட்சி தன்னுடம்பை
அதிர்ந்து துளைத்தமய்யா அங்கமெல்லாம் புண்ணாக
பக்கத்தெலும்பைப் பழுவெலும்பு அஞ்சு துண்டாய்
சரீரமெல்லாம் தான்துளைத்தோம் சல்லடக் கண்போலே
ஆனமட்டும் நாங்கள் அதிர்ந்து துளைத்தமய்யா
மூக்கு முனையு மெய்மழுங்கி வந்தமய்யா
கல்லைத் துளைத்தாலுங் கலங்காத நெஞ்சமது
ஆதி சிவனுரைஉமை அரைக்கிணத்தில் வேண்டிடுவாள்
தக்கன் மகளைவெல்ல தற்பறனுர் தீருது
மூக்குமுலை குலைந்து முழங்காலுந் தானொடிந்து
எங்கள்பில னுள்ளதெல்லாம் இனிபார்த்து வந்தமய்யா
அப்போது ஈசுவரரும் அதட்டிவெகு கோபமுடன்
இடியைப் பிளந்த இமகண்ட ராட்சதரை

## இராக்கதரை ஏவுதல்:—

வாருமென்று சொல்லி வகையுடனே தானுரைத்தார்
இராட்சதரும் வந்து நாயகரைத் தெண்டனிட்டார்
வந்து பணிந்தவரை மகாதேவர் தான்பார்த்து

காஞ்சி வனத்தில்க் காமாட்சி என்றொருபெண்
தக்கன் குமாரத்தி தவக்கோலஞ் செய்துகொண்டு
என்னை அவள்வேண்டி இருக்கிருள் கண்டாயே
தவத்தைக் குலைத்துத் தான்வாரு மென்றுரைத்தார்
நல்லபுத்தி யென்று நடந்தாரே ராட்சதரும்
கம்பை வனம்வந்து காமாட்சி தன்தவசை
வேஷ மெடுக்கலுற்ருர் மேதினியில் ராட்சதரும்
நாகமொரு கோடி நற்புலிகள் தான்கோடி
சிங்கமொரு கோடி சிறந்தபன்றி முக்கோடி
ஆனையொரு கோடி அரசுமன்னர் முக்கோடி
காடெங்குஞ் சுத்தி கட்டிவளைந்து கொண்டு
வேடரொரு கோடி முன்னுக வந்துநின்று
நாகங்க ளுள்ளதெல்லாம் நலமாகத் தான்நாட்டி
ஆட்சி தவசிருக்கும் அருந்தவசை சுற்றிடுமாம்
வேடரெல்லாம் வந்து வெட்டி பிடுங்கலுற்ருர்
அக்கினியைக் கொழுத்தி ஆகாசம் விட்டெறிந்தார்
வேடர் சினத்து வில்வாங்கி எய்யலுற்ருர்
தக்கன் மகளேநீ உந்தனுயிரை வாங்கவந்தோம்
அவரவரைப் போலே அல்லநாங்கள் விடப்போவதில்லை
இடிவானந் தானெடுத்து எதிராக விட்டெறிந்தார்
இப்படியே ராட்சதர்கள் இனிப்போரு செய்யலுற்ருர்
அப்போது ஈசுபரியும் ஆரடா பாவியென்ருள்
என்விதியாள் இவ்வனத்தி லிருந்தால் உனக்கென்ன
ஆரைநான் என்னசெய்தேன் ஆதிசிவன் ருத்திரரே
என்தவசைத் தான்குலைக்க ராட்சதரை ஏவிவிட்டார்
இப்படிக்கு நீர்தாமும் ஏதேது செய்தாலும்
எப்படியும் உன்பாதம் இனிச்சேர்வ தொல்லாம்
ஆதிரிக்க வேணுங்காண் ஆதிபர மேசுவரனே
சித்த மறியாயோ செஞ்சடையீர் நாயகனே
பின்னை யொருவன் புணர்வானே மங்கிலியம்
எந்த விதத்தாலும் எனக்குநீ ஆண்டவனுர்
எனக்கடிமை நானென்று டீலக மறியாதோ
பூருவங்கள் அறியாமல் புண்ணியனே இடும்புசெய்தீர்
ஈட்டுக்கு நான்பயத்து இனிபோற தில்லையென்ருள்
வந்த விதிக்கும் வலுவுக்கும் அஞ்சுவனே
சிவனை யெண்ணி செய்தவத்தில் வந்தேனே
பிராணனை வேண்டிப் பெருங்காட்டில் வந்தேனே
என்னை மணங்கூடி இருப்பீர்காண் ஆண்டவனே

என்று மனதிலெண்ணி ஈசுவரியுந் தானிருந்தாள்
சந்திரனைத் தான் பார்த்து சதாசிவன் ஏதுரைப்பார்
அண்டரண்ட மூடுருவும் அரனுடைய கோபமெல்லாம்
ஆரை விட்டாலும் ஆகாதி வர்க்கபாலே
பெண்பிள்ளையை வெல்லப் போகாதோ பூமியிலே
என்ன வித்தையுண்டோ ஏதென்று நானறியேன்
ஆண்பிள்ளையோ தானுமிவள் ஆனாலுங் கூடாதோ
ஒரு பெண்ணை எதிரிடப் போகாதோ பூமியிலே
அப்போது சந்திரரும் அரனாரைத் தான்பார்த்து
பூருவத்தில் தானும் பூங்கிளியாள் ஈசுவரியாள்
சத்தி மிகுத்து தானுலகம் ஆளிலையோ
எல்லையெங்குந் தான்பார்த்து இருந்துலகு ஆலிலையோ
எதிருண்டோ சத்திக்கு எவராலுங் கூடாது
வாதுசெய்யப் போகாது மண்ணுலகில் இப்போது
அவள்கேட்ட வரங்கொடுத்தால் கீர்த்தியுண்டு கண்டாயே
அப்போது ஈசுரருக்கு அண்டரண்ட மூடுருவி
நல்ல மணிமுடியாள் நாரதரைத் தானழைத்து
தவத்தி லருக்குந் தக்கன்மகள் தன்னுடனே
தக்கன் குலமோதான் தானிருக்குங் கண்டாயே
நான்கொண்டாலக் கொஞ்சம் நாவலர்க்கு ஏற்காது
ஈனன் மனையிடத்தில் இனிகொள்ளப் போகாது
ஏகாம்பர நாதருன்னை இச்சித்தா லேற்காது
உனக்கு வேணுமென்றால் அட்சணத்திலே அவரை
இப்போது உனக்கு இசைந்துமணஞ் சூடுகிறோம்
சொல்பேச்சு கேட்டால் சொர்க்கந் தருவேன்காண்
அரனாரு மிவ்வார்த்தை அம்மனுக்கு சொல்லிவிட்டார்
நல்ல தென்றுசொல்லி நாரதமா முனியும்
ஆட்சி தவசிருக்கும் அருந்தவத்தில் வந்துநின்று
வந்துகண்டு இப்போது மாமுனிவன் ஏதுரைப்பான்
ஏகாம்பர நாதர் என்னையிங்கே அனுப்பிவித்தார்
நலங்களெல்லாம் கூடி நாயகரைக் கொள்ளுமென்றார்
அச்செய்தி கேட்டு அரனாரும் ஏதுரைப்பார்
தக்கர்குலம் ஈனமென்று தானுரைத்தார் கண்டாயே
என்னையவள் வேண்டிவந்தால் ஏற்காது கண்டாலே
இன்னொருவர் வேணுமென்றால் இட்சணமே சோபனங்கள்
பண்ணிக் கொடுப்போமென்று தானுரைத்தார்

இச்செய்தி யெல்லாம் எடுத்துரைத்து உம்முடனே
சொல்லிவரச் சொல்லிவென்னைத் தூதுவிட்டார் ஆண்டவனார்

**காமாட்சி மறுமொழி கூறல்**

அப்போது காமாட்சி அவ்வசனந் தான்கேட்டு
கேட்டாளே ஈசுபரியாள் கிளிகொஞ்சும் பாவனைபோல்
என்ன மதியாலே இங்குவந்தீர் மாமுனியே
தக்கன் ஈனமென்றால் தற்பரனார் ஈனமல்லோ
நான்ஈன மென்றால் அவர்ஈன மல்வோதான்
ஈனன் வயிற்றிலென்னை ஏனனுப்பி விட்டார்காண்
கொஞ்சமென்று சொன்னால் கோத்திரத்துக் கேற்காது
இச்செய்தி சொல்லுவரோ ஈசுவரனார் தானுமிப்போ
என்னவித மானாலும் ஈசுவரனைத் தான்வேண்டி
இந்தத் தவசுக்கு எதுக்கு நானிருந்தேன்
பின்னை யொருவன் பேருலகில் கிட்டாதோ
இந்தச் செடிவனத்தில் இறந்துதான் போனாலும்
என் சீவன் உள்ளமட்டும் இப்படியே வைத்தாலும்
இத்தவசு நானிருந்து இறப்பதுவே நிச்சயங்காண்
என்னதான் சொன்னாலும் இறங்கேன் தவசுவிட்டு
மகாதேவர் வந்து மாலையிட்டு என்னையிப்போ
ஆதரிக்க வேண்டியது அடியேனை இப்போது
பின்னை யொருவருக்கும் பிரங்குட னென்றுசொல்லும்
ஆனாலு மாமுனியே அவரைவிடப் போறதில்லை
இன்னுமவர் நெஞ்சில் இருக்குங் குறைகளெல்லாம்
என்பேரில் வங்கை இனிதீர்த்த பின்பாக
ஆதரிக்க வேண்டியது அடியேனை இப்போது
என்றுசொல்லி நாரதரை எடுத்துரைத்துப் போகவிட்டாள்
அப்போது நாரதரும் அந்தவனம் விட்டுவந்து
சத்தி கொடுமுடியில் சங்கரரை வந்துகண்டு
வந்தமகா முனியை மகாதேவர் தான்பார்த்து
போய்வந்த சேதிதனை புதுமைதனைச் சொல்லுமென்றார்

**நாரதர் இறைவனிடம் கூறல் :**

சொல்லுகிறார் நாரதரும் சொன்ன விசயமெல்லாம்
கம்பை தவசிருக்குங் காமாட்சி தன்னுடனே

நீர்சொன்ன சேதியெல்லாம் நிட்செயமாய்நீ தானுரைத்தேன்
சொன்னமொழி கேட்டுத் துயர்மிக உண்டாகி
அச்செய்தி தான்கேட்டு ஆதிகம்பை ஏதுரைப்பாள்
பின்னையொருவன் வந்தென்னைப் பிரியமுடன் மாலையிட்டால்
அப்படிக்கி முண்டானல் அருந்தவசு பண்ணுவதேன்
இவ்வனத்தில் நானும் இருந்து மடிந்தாலும்
இன்னம்வெகு தூதுவரை இட்சணமே விட்டாலும்
கொல்லவென்று என்னைக் கொடுமை நினைந்தாலும்
இன்னும்வர் என்னை ஏதேது செய்தாலும்
என்கையிலே ஆகாதோ இவரைநான் வெல்லுதற்கு
இன்னுமவர் செய்யும் இடும்பெல்லாம் நானறிவேன்
இத்தவசு விட்டு இறங்கிநான் வருவதில்லை
ஆதி கைலாசம் அரனுரே பாரியென்று
மேதத்த திருணியெல்லாம் விதமாகத் தானுரைத்தாள்
என்று சொல்லி நாரதரும் ஈசுவரர்க்குத் தானுரைத்தார்
அச்செய்தி கேட்டு அரனுர்வெகு கோபங்கொண்டு
வெண்கண் சிவந்து வெள்ளிமலை நாதருக்கு

## இறைவன் சினந்து பூதங்களை ஏவுதல்

கூப்பிட்டார் தூதுவரைக் கோடிமகா பூதலத்தை
பூதங்கள் வந்து புண்ணியரைத் தெண்டனிட்டு
பூதந்தனை நோக்கி புரிசடையோ னேதுரைப்பான்
கம்பை தவசிருக்கும் காமாட்சி தன்னையிப்போ
கொன்றுதின்று வாருமென்று கொத்தவரும் போகவிட்டார்
அப்போது பூதமெல்லாம் அதிர்ந்து படையெடுத்து
காஞ்சிவன நோக்கி கணபூதம் வந்ததுவே
திருக்கம்பை ஆற்றருகே சென்று முடிகிவந்து
அருந்தவத்தில் மீதிருக்கும் ஆட்சியரைத் தான்பார்த்து
காமாட்சி தன்வடிவை கண்டந்த பூதமெல்லாம்
ஆக்கரித்துப் பல்கடித்து அதட்டியே கொக்கரித்து
பல்லாலுங் கண்ணாலும் பார்த்து மிரட்டியதே
மலைகள் சிலையோடே மாமலைகள் தத்தளிக்க
ஆக்கரித்துப் பூதமெல்லாம் அருந்தவசை தான்பிடிங்கி
கொக்கரித்துப் பூதமெல்லாம் கொல்லுவே னென்றுசொல்லி
பூதத்தைக் கண்டு கைக்கிளியா ளேதுசொல்வாள்
இத்தனைபேர் வந்துதான் கொன்றுதின்று போட்டாரோ

உங்களால் நானுமிப்போ உயிரிழந்து போரேனே
இன்னுஞ்சில தூதுவரும் ஈசுபரரும் வந்தாலும்
இத்தவசு நானிருந்து இறக்கடிப்பே னல்லாமல்
கொஞ்சமென்று பாராதே கொல்லவந்த தூதுவரை
இத்தனை நாளும் இருந்து மனம்பொறுத்தேன்
இனிமேல்ப் பொறுப்பதில்லை ஈசுவரரே இப்போது
வந்துவந்து யெந்தனுடன் வாதாடி இப்போது
வென்றுஅவர் போனாலே வெள்ளிமலை மீதிருப்பார்
இல்லாவிட்டால் வெள்ளிமலை யிருக்கவொட்டார்[1]
[தேவரெல்லாம்
வந்துழனே குலைந்து மகாதேவர் போகாமல்
கேட்டவரங் கொடுத்தால் கீர்த்திவரும் ஈசுவரர்க்கு
என்சேதி தானறிவார் இருக்குமந்தத் தேவரெல்லாம்
பெண்மேலே ஈசுவரனார் பூசல்செய்ய லாகாது
இப்படினான் சொன்னதெல்லாம் இனியுரையுந் தூதுவரே
போரதில்லை யென்று பூதலமெல்லாம் போராட
மெத்தச் சினத்துடனே வேல்பொருது கண்ணாளும்
சமர்பொருதுங் கண்ணாளி சத்திசூலந் தானெடுத்து
அம்புக் குபதேசம் ஆரணங்கு தானுரைத்தாள்
விட்டா ளொருசினத்தில் விண்ணுமண்ணு நின்றதிர
சடையறவே காலொடிந்து தான்மூக்கு யிற்றுவிழ
காலொடிந்து கையொடிந்து கனத்தகுடல் சரிந்து
சோவென்று பூதமெல்லாங் கொத்தவனா ரண்டையிலே
வந்து விழுந்ததுகாண் மகாதேவ ரண்டையிலே
முப்பத்து முக்கோடி தேவரெல்லாம் வந்திருக்க
அஷ்டகிரி நாதர்முன்னே அபையம் அபையமென்றார்
காமாட்சி செய்த கனவசனச் சேதியெல்லாம்
அச்செய்தி கேட்டு அரனார்வெகு கோபங்கொண்டு
வெள்ளி மலையில் மிகுந்த கொடுமுடியில்
தில்லைவனா தர்க்கு திருஉளமே யல்லாமல்
காமாட்சி என்பவளைக் கன்னிகுடல் பிடுங்கி
சின்னா பின்னமாக செடிவனத்தில்த் தானுமிப்போ
வெட்டி யெறிந்து விருதறுத்து நான்வருவேன்
எத்தனைதான் சொன்னாலும் இனிப்பாவம் வந்தாலும்
நானவளைச் சங்கரித்து நாலு சடையறுப்பேன்
மதம்பெற்றாள் தானுமிப்போ மாளவிதி நாளாச்சு
மதத்தைக் குலைத்து மருகிறே னென்றுசொல்லி

[1]யிருக்க விட்டார்கள் என்றுள்ளது.

மீதமுள்ள சேனைகளை ஏவி தானும் உடன் சென்றார்

கூப்பிட்டா டாரப்போ கோடிமகா சேனையெல்லாம்
வந்ததுகாண் சேனையெல்லாம் மகாதேவரைத் தான்பணிந்து
நின்றவரைப் பார்த்து நிமலனு ரேதுரைத்து
கங்கை தவசிருக்குங் காமாட்சி தன்னையிப்போ
சங்கரிக்க வேண்டி தானழைத்தோம் தேவரெல்லாம்
அப்படியே நல்லதென்று ஆதித்தன் சேனையெல்லாம்
மெச்சுமகா சூரன் வேல்பருசை முக்கோடி
அச்சுமணித் தேரும் அன்புடனே சூலங்களும்
மெச்சா யுதமும் வீரபத்திர சூலமுடன்
அதிர்ந்துபடை வென்றுவரும் அயிரா பதமெடுத்து
தின்று கபாலம் திரிசூலங் கையிலேந்தி
தில்லைவன நாதர் சிவனாரும் அப்போது
பூதங்கள் சேனையுடன் புறப்பட்டார் மகாதேவர்
ஆர வாரமாக அரனார் நடக்கலுற்றார்
அப்போது மாமுனிவர் அச்செய்தி தான்கேட்டு
வந்துசிவ னாரிடத்தில் மாமுனிவர் தான்பணிந்து
எங்கே பயணமென்று இனிகேட்டார் மாமுனிவர்
கங்கை தபசுதன்னை கண்டறியப் போரேன்காண்
கொக்கரித்துக் கொண்டு குடல்பிடுங்கி மாலையிட
வென்றுவரப் போரேன் வேறுமொரு சேதியில்லை
அந்தமொழிக் கேட்டு ஆனதொரு மாமுனிவர்
தகைத்தாரே மாமுனியும் நாதனார் தனைபார்த்து
ஏன்வந்தீ ரென்று ஈசுவரனார் தான்கேட்டு
என்னபுத்தி நீர்நினைத்தீர் ஏகாம்பர னாதர்
பெண்மேல் படையெடுக்க போதாது புண்ணியரே
மாற்றான்மேல் சண்டை வந்தெதிர்த்தாப் போல
தேவர்மேல் சண்டைசெய்து எதிர்த்தாப் போல
தக்கன் மகள்தான் சண்டைசெய்ய வந்தாளோ
உன்னையவள் வேண்டி வீடுவிட்டு காடுறைந்து
ஊசிமுனை மேலே உருகிமனஞ் சேர்ந்திருக்க
இப்படித் தவசிருக்க எதற்குப் படையெடுத்தீர்
ஆனாலு மென்ன அவள்பேரில் நீஎதிர்த்தால்
சக்தியல்லோ முற்பிறப்பில்த் தானுமந்த காமாட்சி
இப்பிறப்பில் உமக்கு இளங்கொடியாள் தாரமல்ல
எல்லா மறிந்திருப்பீர் எங்களுக்குத் தான்தெரியும்
சொன்னா லுமக்குத் தோணுதில்லை கண்டீரோ
என்று முனிவோர்கள் எல்லோருந் தானுரைத்தார்

அப்போது ஈசுவரனார் அச்செய்தி தான்கேட்டு
மட்டடங்காச் சேனைகளும் மகாதேவர் தன்னுடனே
சொல்லி முடியாது சேனைமன்னர் தன்னுடனே
மண்ணும்விண்ணும் கொள்ளாத மட்டடங்காச் சேனையுடன்
கொடுமுடியை விட்டிறங்கி கோடிபடை சேனையுடன்
கங்கை வனம்நோக்கி கதித்தபடை சேனையெல்லாம்
முப்பத்து முக்கோடி தேவர்களும் தான்கூடி
நாற்பத் தெண்ணாயிரம் நமன்கோடி சித்தர்களும்
கோடான கோடி கோடிலெட்சம் பூதகணம்
பிருமாவும் விஷ்ணுவும் மிக்கயங்க தேவர்களும்
சித்திய வித்தியாதரரும் தேவேந்திர னரும்
கோவென்று கொக்கரித்து கொத்தவருந் தானடந்தார்
இடிபோல முரசதிர இமலோகந் தத்தளிக்க
துந்துபி முழக்கம் சூழுந்திசைக ளெட்டும்
தம்புரு வீணை சல்லாபந் தான்முழங்க
வீரதண்டை ஆர்ப்பரிக்க விருதுக்கொடி பறக்க
பேரிகை டங்கா பிறகே முழங்கிவர
அன்னக் கொடிபறக்க அரம்பையர்கள் ஆடிவர
கார்மேகம் சூழ்ந்தாப்போல் கறதன் பெருமடையும்
வீராணம் நாகசின்னம் வெங்கலங் கொம்பூத
எக்காளம் ஊத இடிவாணம் நின்றதிர
அரம்பைரும் தாசியரும் நாட்டியங்க ளாடிவர
கிருஷ்ண நாரயணரும் கெருடன் மேலேறிவர
விருது கொடிபறக்க வேந்தர்மன்னர் கொக்கரிக்க
கம்பை தவசிருக்கும் காஞ்சிவணம் வந்திரங்கி
சுற்றி வளைந்தார்கள் தேவர்கள் சேனையெல்லாம்
அருந்தவத்தின் மீதிருக்கும் ஆத்திசத்தி தானறிந்து
மாகோடி தேவரெல்லாம் வாராரோ இப்போது
அன்னேரந் தான்முனிவர் எல்லோருந் தான்கூடி
ஆட்சிக்கம்பை தன்னுடைய அருந்தவசு வந்துகண்டார்
பார்த்து மனமகிழ்ந்து பாரிலுள்ள தேவர்களும்
இந்த அருந்தவசை (இனிப்)பார்க்க இயலாது
என்றுசொல்லி மாமுனிவர் எல்லோரும் ஆட்சரித்து
மெச்சி மனமகிழ்ந்து வேண்டியதோர்ப் பாணமெல்லாம்
உருவேத்தி அப்போது உத்தமியாற் கைக்கொடுத்தார்
எண்ணு மசையாமல் ஈசுவரர்க்கு அஞ்சாமல்
வாணங்கள் வந்தாலு மகாதேவர் வந்தாலும்
எதுக்கு மஞ்சாமல் இருமென்று தான்வணங்கி
கொடுத்துமிகப் போனார்கள் கொடியதொரு தேவரெல்லாம்

அப்போது ஈசுவரரும் ஆயிழையை வந்துகண்டார்
சுற்றிவளைந்து கொண்டு சொல்லுகிரு ரப்போது
சேனைமகா பூதமெல்லாம் தேவியுடன் தாலுற்ருர்

## தேவர்கள் அம்மனைப் பார்த்து தவசு வேண்டாமென மறுத்தல்

மகாதேவ ருன்னை வாஞுளை வாங்கவென்று
வந்தார்க ளிப்போது மட்டுஞ்சி னில்லாதே
தவசுவிட்டு நீயிறங்கி உன்னூருக்கு போய்பிழையும்
என்றுமிகச் சொன்ஞர்கள் இயல்பெரிய தேவரெல்லாம்

## அம்மன் மறுமொழி பகருதல்

அருந்தவசின் மீதிருக்கும் ஆட்சிக்கம்மை தான்கேட்டு
என்னதான் சொன்ஞலும் இருப்பேன் பெருந்தவசில்
உங்களுக்கு என்மேல் உத்தய வேதுகண்டாய்
அப்போது மாயவஞர் அன்னேரம் ஏதுரைப்பார்
இவ்வனத்தி லுன்னை இருக்கவொட்டோங் கண்டாயே
இத்தவசு நீயிருந்தால் எங்களுக்கு மாகாது
மேகம் பொழியாது வெள்ளாண்மை குன்றிவிடும்
என்று மாயன் எடுத்துரைத்தான் அப்போது

## ஈசுவரஞர் தூதுவரை ஏவுதல்

ஈசுவரஞ ரப்போது ஏவிவிட்டார் தூதுவரை
தவசைக் குலேக்கவென்று தானெதிர்த்தார் சேனையுடன்
பூதங்க ளெல்லாம் போய்வளைந்து கொக்கரித்து
பாணந் தொடுப்பாரும் மலேபிடுங்கி நிற்பாரும்
மலேபிடுங்கி வந்து மகாதவத்தில் போடுவதும்
இப்படியே சேனையெல்லாம் எதிர்த்துமிகச் சண்டையிட
கண்டாள் தவமிருக்கும் காமாட்சி பார்பதியும்
பெண்மேலே படையெடுத்துப் புண்ணியரும் வந்தீரோ
சேனையைப் பார்த்துத் தேன்மொழியாள் ஏதுரைப்பார்
பூசல்செய்ய வேண்டாம் போய்பிழையும் பூதமெல்லாம்
என்மேல் சண்டையிட்டால் உங்களுயிர் பொன்னுலகம்
சேர்ந்துவிடும்
சண்டையிடப் போகாது தவருமல் தானுமிப்போ
என்னுடனே பூசல் விட்டால் ஈசுவரர்க்குத் தானுமிப்போ

பெண்மேல் தானெதுக்கப் போகாது புண்ணியற்கு
போநாது போதாது பூமி பொருக்காது
எந்தன் குறைதீர்த்து ஈசுவரனுர் மாலேயிட்டால்
மெத்தப் பெருமையுண்டு மேதினிக்கு நன்ருக
இவ்வார்த்தை யெல்லாம் எடுத்துரையும் நன்ருக
ஒன்றுகொண்டு மூன்றுதரம் உறுதியுடன் சேதிசொன்னேன்
என்மேலே தானும் இனிமேலும் குற்றமில்லே
ஆர்ப்பரித்து பூதமெல்லாம் அதட்டியே பல்க்கடித்து
வாணந் தொடுத்து வலுப்பொரு செய்யலுற்ருர்
அரகரு ஈசுவரரே ஆண்டவனே போற்றியென்ருள்
எடுத்தாளொரு கணேயை எமலோகம் தத்தளிக்க
விட்டா ளொருகருணேயை சூழ்த்தபடை சேனேயின்மேல்
தொடுத்தா ளொருகணேயை சூழ்ந்தபடை சேனேயின்மேல்
கண்டு பயந்து கலங்கி விழுவாரும்
அய்யோ சிவனேயென அலறி விழுவாரும்
காமாட்சி தாயேயென கோடி என்பாரும்
ஆதி கைலாசம் அரகரு வெண்பாரும்
பெண்மேல் தானெதுக்கப் போதாது என்பாரும்
எதிர்த்தால் மூனேகுலேயும் என்றுசொன்ஞல் கேளாமல்
கேளாமல் கிலேசம் மெத்த உண்டாச்சு
கேளாத பேருக்குக் கிலேசம்வந்தால் தான்தெரியும்
சொல்பேச்சுக் கேளார்க்குத் துக்கம்வந்தால் தான்தெரியும்
அரகரு ஈசுவரனே என்றவழி விழுவாரும்
செவ்வெரும் ஈசுவரரே சேனே மடிந்துதய்யா
மாண்டுதய்யா சேனேயெல்லாம் மகாதேவர் என்பாரும்
என்ருர்கள் தேவரெல்லாம் ஈசுவரனேத் தான்பார்த்து

## ஈசுவரனே பொருதல்

அப்போ மகாதேவருக்கு அதிகோப முண்டாகி
தில்லே வனமெரித்த செந்தம்பு தானெடுத்து
அண்டரண்ட மூடுருவும் அந்தம்பு தானெடுத்து
தில்லே வனத்தைச் சினத்தி லெரித்தாப்போல்
அம்பை எடுத்து அதுக்குவெகு புத்திசொல்லி
அம்பை தொடுத்துவிட்டார் அண்டங் கிடுகிடென

## ஈசுவரனுடன் ஈசுவரியும் எதிர்த்து நிற்றல்

அம்புதனேக் கண்டு அரனுர்மேல் உத்தமியாள்
நாகஞ் சிலேயெடுத்து நாயகியாள் தான்தொடுத்தாள்

கொண்டு வகைகளையும் நடனம் புரிந்ததுவே
இருவர் கணையும் எதிர்த்துப் பொருந்தியதே
இந்திர ஜித்தின்மேல் லட்சுமணர் எதிர்த்தாப்போல்
வானரர்முன் கும்பகர்ணன் வந்து எதிர்த்தாப்போல்
அனுமந்தன் தானும் அன்றிலங்கை எதிர்த்தாப்போல்
மகிடா சூரனையும் வாதாடுங் காளியைப்போல்
அங்குதனும் ராவணனும் அன்று பொருந்தாப்போல்
சந்திர சூரியனைத் தானரவங் கொண்டாப்போல்
அட்ட கஜங்கள் அதிர்ந்து விழுந்தாற்போல்
மகாமேரு தானடுக்க மகாமேரு பார்த்துநிற்க
சந்திர சூரியரும் தானவரும் பார்த்துநிற்க
மாற்றானைச் சங்கரிக்க வாணர்நின்று கொக்கரிக்க
எதுபுதுமை யென்று எல்லோருந் தான்பயந்து
என்று முனிவோர்கள் ஈசுவரனே என்றுசொல்லி
வானத்தை இங்கே வரவழையு மென்றுசொன்னார்
பின்னு மவற்கு பெருங்கோபந் தானாகி
பாசு பதத்தைப் பரமனார் தானெடுத்து
அம்புக்கு உபதேசம் அரனாருங் கூறலுற்றார்
நெருப்பை மிகவாழ்த்தி நிமலனார் தானெரிந்தார்
எங்கும் நெருப்பாய் இருக்குமந்தப் பாணமது
கண்டுமனங் கோணாமல் காமாட்சி நாயகியாள்
மேகஞ் சிலைபாணம் வேண்டியவள் தானெடுத்து
அக்கினி தன்னை அவியப் பொழியுமென்று
அம்புக்கு உபதேசம் ஆரணங்கு தான்கூறி
மகாதேவ ரென்று மரியாதி பாராமல்
என்சீவன் போகையிலே எதிர்த்தாளக் கொல்லவென்று
படுகளத்தில் ஒப்பாரி பார்த்தால் வெகுமோசம்
நம்பி இருந்தவளை நாதனார் கொல்லவென்று
[1]கொசுகுமேல்ச் சண்டை கொண்டு எதிர்த்தாற்போல்
நரியெதிர்க்கச் சிங்கமல்ல தாதரென்று பார்த்திடுமாம்
என்னை எதிர்த்தவரை இனிவென்று வாருமென்று
மேகஞ் சிலையைவிட்டு எரிந்தாள் ஈசுபரியும்
அப்போது மாயவனார் அரனாரைப் பார்த்துரைப்பார்
உம்மாலே கூடாது உத்தமியை வெல்லுதற்கு
நல்ல தினமாக நாயகியை தானழைத்து
தவசில் இருந்தகுறை தான்தீர வேண்டியது
எல்லாஞ் சரியாகும் ஏச்சொன்றும் வாரதில்லை
வீம்புகள் சொல்லாதே இவளைவெல்லப் போதாது

---

[1] ஈ, தேனிலையாள், நுளம்பு.

சொன்னமொழி கேட்டால் சேர்ந்து உறவாடி
சொன்னசேதி கேட்பாள் சுந்தரியாள் அப்போது
அந்தமொழி கேட்டு அதிகோபந் தானாகி
என்னை மதியாமல் எண்ணாமல்ச் சேனையெல்லாம்
கொன்றானே நீலி குடிகேடி இவள்தானும்
பெண்ணை வணங்கிப் பேதைவரங் கொடுக்க
சொன்னதொல்லாம் மாதவரே சொல்க்கொஞ்ச மில்லாமல்
நீலியைக் கொன்றிடுவேன் நிட்செயமே அல்லாமல்
பத்திச் சிரமெரித்துப் பகைமுடிப் பேனல்லாமல்
இனிவிடப் போறதில்லை என்சீவன் மாண்டாலும்
இருந்த படையத்தனையும் ஏகமாய்த் தான்சூழ்ந்தார்
மண்ணாங் விண்ணாங் கொள்ளாத வாணந்தொடுக்கலுற்றார்
கொக்கரித்து மன்னவர்கள் சேரவென்று படையெடுத்தார்
தேசங் கொடிப்பறக்க நீலவர்ணந் தானெரிய
அங்கம் பறக்க அந்தமலை இற்றுவிழ
குண்டம் பரக்கக் கொடிவாணம் ஆர்ப்பரிக்க
கண்முழித்துப் பார்த்தாளே காஞ்சிகம்பை காமாட்சி
ஆதி சிவனாரே ஆண்பிள்ளையோ தானுமிப்போ
என்மேல் போராட எதிரோநான் ஈசுபரனே
ஆதிசிவனாரே ஆண்டவனே தஞ்சமென்றாள்
காணாத சித்தர்களே கடைக்கண்ணாலே தான்பார்த்து
இனிமேல்ப் பயந்தால் ஏற்காது என்றுசொல்லி
சோட்டைமணி வாளெடுத்துச் சுந்தரியாள் கையிலேந்தி
ஆடரவங் கொண்ட அந்தமணி வாளெடுத்து
ஆதிசிவன் சேனையின்மேல் அந்தம்பு தானெடுத்து
சுற்றெங்கும் பார்த்து துரைமன்னர் சேனையெல்லாம்
பட்டு விழுந்தார்கள் பரமனார் சேனையெல்லாம்
கண்டு கைலாசர் கனகோபந் தானாகி
வெண்கண் சிவந்தாரே வெள்ளிமலை நாதருந்தான்
விட்டா ரொருகணையை விண்ணுமண்ணும் நின்றதிர
வருகிறதைக் கண்டாளே வாழ்பெரிய காமாட்சி
எடுத்தா லொருகணையை ஏழுலகந் தத்தளிக்க
எங்கும் இடிமுழங்க எமலோகந் தத்தளிக்க
வாணம் முழங்க மகாதேவர் தான்முழங்க
அட்டதிக்குப் பாலகரும் அதிர்ந்து பறந்தோட
என்மேலே போராட எதிரோநான் ஈசுபரனே
ஆதி சிவனே ஆண்டவனே தஞ்சமென்றாள்
தேவேந்திர லோகஞ் சென்றுகுடி யோடே
பூதங்கள் தன்னுடனே போர்வேந்தர் தாமடிந்தார்

சித்தர் சிவமுனிவர் திக்கென்று வீழ்வாரும்
ஆறுபோலே ரத்தவெள்ளம் பொங்கி அதிர்ந்துவிடும்
மாண்டார் சிவனுடைய மகாசேனை அத்தனையும்
சத்திக் கணபதியுஞ் சமர்களத்தில் வந்துநின்று
வீரர் சமர்கயமோ வேல்வேந்தர் போர்களமோ
மன்னர் சமர்களமோ மகாதேவர் பேரிதுவோ
எண்ணி மனஞ்சோர்ந்து ஈசுபரனுந் தான்பார்த்து
வாடிமுகஞ் சோர்ந்து மகாதேவர் நிற்கயிலே
எல்லை அடங்காத ஏழுலகந் தான்படைத்து
முல்லைமலர் கண்ணை மூக்கையது போக்கிவிட்டார்

**விநாயகர் சிவனுக்கு மொழிதல்**

என்று விநாயகரும் ஈசருட பக்கல்வந்து
ஆதி சிவனாரே அந்தநல்ல சத்திதன்னை
வெல்லமுடிப் போகாது மேதினியில் இப்போது
சற்றேழு தீவுந் தான்படைத்து லோகமெல்லாம்
அன்று ஒருத்தியாய் அவளிருக்கும் நாளையிலே
தேவர்களை உண்டாக்கிச் சென்றகதை கேளீரோ
மன்னவரை உண்டாக்கி வாழ்ந்ததை கேட்கிலையோ
முனிவரவி நாயகரும் மூர்க்கமுள்ள மன்னவரும்
சொன்னார்கள் சேதியெல்லாம் சோதிமகா தேவருக்கு
கேளாமல்த் தாளழைக்க கிட்டவந்து போராட
மோசங்கள் வந்ததையா முனைகுலைந்தேன் கண்டாயே
என்று விநாயகரே ஈசுபரருந் தான்பார்த்து

**சிவன் மறுமொழி கூறல்**

சிந்தை தெளிந்து சிவனாரும் ஏதுரைப்பார்
கானமயில் வேலவரே கண்டழையு மென்றுரைத்தார்
சித்தன் சிவனாரை சேர அழையுமென்றார்
தெட்சிணா மூர்த்தியரே தேரேறும் ஈசுபரனே
கந்தன் குகனையுங் கடுக அழையுமென்றார்
வந்தார் அப்போ மகாதேவர் பக்கலுக்கு
ஆறுமுக வேலவரை அரனார் முகம்பார்த்து
வேலை முகத்தோனே வேண்டும் வயிரவனே
தெட்சிணா மூர்த்தியரே தெண்டேசு பரனாரே
இப்போது நீங்கள் எனக்குதவும் புத்திரனே

காட்டிக் கொடுத்துக் கடக்கநிற்கும் புத்திரனே
எனக்குமொரு அவதியென்றால் எனக்குதவி செய்யாமல்
பார்த்து இருப்பீரோ பாலகரே நீங்களுந்தான்
காமாட்சி செய்த கனமோசந் கண்டியலோ
எந்தனை மொக்கை செய்த இசகோடி தன்னையிப்போ

## தவசைக் கலைக்க சிவன் மைந்தர் நால்வரையும் ஏவ, மறுத்தல்

கொன்று சரிபிடித்துக் குமரா நீ வாருமென்றார்
அச்செய்தி கேட்டு ஆறுமுக வேலவரும்
... ... .. . சார்ந்து வர்ணமுகம் வேறுபட்டு
... ... ... ... செய்வமென்து எண்ணி விநாயகரும்
... ... ... ... வரைதாய் காணுங் காமாட்சி
... ... ... ... ரசர் ஆண்டவனார் தையலல்லோ
... — ... ... பொருந்தால் என்னசெய்வோம் தம்பியரே
... — ... ... கொல்லுதற்குத் தர்மமல்லப் பூமியிலே
மாதாவைக் கொல்ல வரங்கேட்டு வந்தோமே
நம்மையவள் வேண்டி நாடி யிருந்தபலன்
கைமேல் பலித்ததுகாண் கானமயில் வேலவனார்
என்ன செய்வோமென்று இனிகூடி நால்பேரும்
ஆலோசனை புரிந்தார் அந்த வனத்திலேயும்
சேனையுடன் நாமும் சென்று மடிந்து விட்டால்
............ ... மில்லையென்று மனதி லெண்ணி
தொந்தி விநாயகரும் தோகைமயில் வேலவரும்
...... ........... .. மைந்தர்கள் நாலு பேரும்
.......................... .. காமாட்சி சீர்பாதம்
... ...—.... ம்பிலைதான் புதுநீரும் கொண்டுவந்து
தும்பை மலர்கொடி மல்லிகைப் பூவெடுத்து
சொந்தா மரைப்பூவுஞ் சிவந்திமலர் தானெடுத்து
முல்லை யிருவாட்சி முகமலராச் செண்பகப்பூ
வர்ண மாயிரம்புஷ்பம் வகையுடனே தானெடுத்து
பாதம் வழுக்கிப் பட்டதனால் நீர்துவட்டி
மாதாவின் பாதம் மலர்தூவித் தெண்டநிட்டு
தாயேநீ கம்பை தவசிரிக்கு மாதாவே
சாஷ்டாங்க மென்று சரணம் பணிந்தார்கள்
புத்திரரே யென்று புனக்கிளியால் கண்முழித்து
கானமயில் வேலவரைக் கணபதியைத் தான்பார்த்து
கால வயிரவனே கதிக்குமந்தக் குகனாரே

கண்டு மனங்குளிர்ந்து கன்னிகம்பை காமாட்சி
எண்ணும் பதம்பெறுவீர் இளையபத முண்டாவீர்
ஆயன் பதம்பெறுவீர் அரனார்போல் வாழ்ந்திருப்பீர்
ஈரேழு லோகம் எங்கும் பதம்பெறுவீர்
வாழ்த்தி எடுத்து மாதுகம்பை ஏதுரைப்பார்

## காமாட்சி, விநாயகர், முருகர் உரையாடல்

மைந்தரைக் கண்டு மனங்குளிர்ந்து காமாட்சி
நின்றார் முகம்பார்த்து நீலமயில் வேலவரே
எங்கே வந்தீரென்று இனிக்கேட்டாள் ஈசுபரியும்
அப்போது விநாயகரும் அம்மன்முகம் நோக்கி
ஈசுபரனார் பெரியோர் ஏழுலகந் தான்படைத்தோன்
ஆண்டவனார் மேலேயுத்தம் ஆகாது மாதாவே
கொன்றாலும் ஈசுபரன்மேல் கோபங்கள் ஆகாது
வாதுசொல்லி நீயவரை வார்த்தை மிகயுரைத்து
கனசீவ னென்சீவன் உனக்கெனக்குந் தான்விடுத்து
சென்றெதுத்து நீங்கள் சேனை மடிந்துகாண்
என்று விநாயகரும் எடுத்துரைக்கத் தான்கேட்டு
என்மேலே குற்றமுண்டோ எங்கள் விநாயகரே
நான்அவரைத் தான்வேண்டி நல்ல தவசிருந்தால்
என்மேல் குறையிருந்தால் எனக்குநீர் புத்திசொல்லும்
என்றுசொல்லக் கேட்டு இறையோனும் ஆறுமுகம்
மாதாவே உங்களுக்கு வந்தவிரோத மெல்லாம்
எங்களுடன் சொன்னால் இனித்தீரப் போகாது
உங்களுடைய போரை உத்தியாய் நான்பார்க்க
கூடாது தாயே குற்றம்வரும் ஈசுபரர்க்கு
ஒருவருடன் கூடி ஒருவரைக் கொல்லுதற்கு
பாவம்வரும் எங்களுக்குப் பைங்கொடியே நீர்கேளும்
சேனைதனைக் கொன்றச் சேந்தமணி வில்லாலே
எங்களைநீர் கொன்றுவிட்டால் இருவருக்குங் குற்றமில்லை
புத்திரரைக் கொன்று பூமியிலே நானிருந்தால்
மைந்தரைக் கொன்று பூமியிலே நானிருந்தால்
வாழுவது நிட்செயமோ மகாதேவர் தன்னுடனே
முற்பிறப்பில் செய்தகுற்றம் முளைத்து அருகிருக்க
இப்பிறப்பில் உங்களுயிர் சொல்லவே நிட்சயமோ
சத்தியாய் நான்பிறந்து சடல மெடுத்தமுதல்
பிள்ளைக்குரல்க் கேளாத பெரும்பாவி யானேநான்
மைந்தன்குரல்க் கேளாத மாபாவி யானேநான்

உங்களை நான்சொன்னால் உங்கமன கையாதோ
எப்படிநான் சொல்வேன் என்மனது கூடாது
உங்களைநான் கொல்லுமுன்னே நான்மடிந்தால் குற்றமில்லை
என்தாயே காமாட்சி எனைவளர்க்கும் பார்பதியே
சத்தி மடிந்ததென்றால் தரணியெங்கும் பாழாகும்
எங்களைக் கொன்றுவிட்டால் இனிதவசு தான்தீரும்
வாழும் பிராயமென்ன மகாசமத்து வீரியமும்
உங்களைநான் கொன்றால் உலகமெங்கும் பாழாகும்
என்றுமிக உரைத்தாள் இயல்பெரிய காமாட்சி
இப்போது மாதாவே இதுக்குநீ அஞ்சாதே
காண்டா வனமெரித்த கணைதனையுந் தான்கொழுத்தி
எங்கள்மேல் விட்டெறிந்தால் இனிச்சோர்ந்து வீழ்ந்திடுவோம்
அப்போ மகாதேவர் அழைப்பார் உந்தனையும்
தேவரெல்லாம் வந்துநின்று சேதிபட உரைப்பார்
அப்போ தறிந்துகொண்டு அழைப்பார் மகாதேவர்
சந்தோஷ மாகத் தானழைப்பார் உந்தனையும்
மாண்டபடை மன்னவரை வந்தெழுப்பச் சொல்வார்காண்
அப்போது நீஎழுப்ப எல்லோரும் எழுந்திருப்போம்
தெரிந்தமட்டும் யோசனைகள் சொன்னேன்காண் மாதாவே
என்று விநாயகரும் இதமுடனே தானுரைத்தார்
நல்ல தென்றுசொல்லி நானிலத்தோர் தானறிய
தொட்டா ளொருகணையைத் தோகைமயில் வேலவர்மேல்
சேர்ந்து விழுந்தாரே தோகைமயில் வேலவரும்
வேலவனார் விழுந்தபின்பு விநாயகரும் அப்போது
ஆனைமதங் கொண்டதுபோல் ஆர்ப்பரித்தார் அப்போது
கல்லு மலைகளெல்லாங் கடகடன்று தானதிர
எட்டுத் திசையும் இடிவிழுந்த பாவினைபோல்
சத்த சமுத்திரங்கள் தான்விழுந்த பாவினைபோல்
வானுலகம் நடுங்க மகாதேவர் தானடுங்க
அப்போது ஈசுபரும் ஆனைமுக வேலென்றும்
சந்தோஷ மாகத் தனக்குதவும் பிள்ளையென்று
எந்தனுக்கு பின்னுதவி எந்தனுட பிள்ளையிது
என்று சொல்லி மகாதேவர் இருக்குமந்த வேளையிலே
அம்மன்விடுங் கணையால் ஆனைமுகத் தோன்விழுந்தோன்
கொண்டுதவி செய்யுங் குகனுங் மடிந்துவிட்டான்
மாண்டார்கள் நால்பேரும் மகாதேவிகை அப்பதினால்
அச்செய்தி கேட்டு அரனார் முகஞ்சலித்து
என்னசெய் வோமென்று எண்ணாது எண்ணுகிறார்
வாய்வறண்டு கைசோர்ந்து மகாதேவர் பேசாமல்

வாங்காத் துயரமுடன் மகாதேவர் நெஞ்சுருகி
நீங்கி எழுந்திருந்து நிமலனு ரேதுரைப்பார்
புத்திரனுர் தாமடிந்து போன படுகளத்தில்
வந்துநின்று பார்த்து மகாகோபந் தானுகி
உன்னைவிடேன் கண்டாய் ஊடறுப்பேன் என்றுசொல்லி
நின்றுர் படுகளத்தில் நிமலனுர் அப்போது
சேனை மடிந்ததுவுஞ் செயங்கொண்ட வெற்றிகளும்
நக்கனது கேட்டு தற்பரனைக் காண்பதற்கு
சேனையுடன் தக்கன் சிவனுரே வந்துகண்டான்
நமஸ்கரித்து தக்கன் நாதனுர் தாள்பணிந்து
என்னவகையாலே இனிமோசம் வந்ததுகாண்
என்னையவள் மீறி எடுத்தெறிந்து தான்பேசி
கொல்லவென்று நானிருந்தேன் குடிதேடி ஓடிவந்தாள்
என்றுசொல்லி தக்கன் ஈசுபரர்க்குத் தானுரைத்தான்

## தக்கன் அம்மன் மீது பொருதல்:

சங்கரித்து வாரேனென்று தக்கன் படையெடுத்தான்
வந்து வளைந்துகொண்டு வாரணங்கள் தான்தொடுத்தான்
கண்டாளே காமாட்சி கண்குளிரத் தான்பார்த்து
வேறொருவன் ஆனல் விண்ணுலகஞ் சேர்த்திடுவேன்
கொன்றெறிந்து போடேனே குடிகேடா போடாநீ
இனிமேலும் உன்சமத்தை உறுதியாய்ப் பாருமென்னள்
தற்பரனை நோக்கித் தானிருந்தாள் காமாட்சி
தன்கையிலே ஆவதெல்லாந் தான்பார்த்து தக்கனுந்தான்
வெல்ல முடியாமல் மெய்மறந்து கைகோர்ந்து
வந்து சிவனுர்முன் வாய்புதைத்து ஏதுரைப்பார்
கோடி சனத்துடனே கோடியம்பு தான்பார்த்து
தொடுத்தேன் வெகுகணையைத் தோகையரைத் தான்பார்த்து
தொடுத்த கணைகளெல்லாம் துண்டதுண்ட மாய்ப்போச்சு
வெல்ல முடியாமல் மெய்சலித்து வந்துவிட்டேன்
என்றுசெல்லி தக்கன் ஈசருடன் தாள்பணிந்து
நின்றுர் நெடுநேரம் நீலவர்ணர் தன்னையிங்கே
வருகவென்று தானழைக்க வான்கருடன் மேலேறி
வந்தாரே மாயவனுர் மகாதேவர் அண்டையிலே
வைகுந்த வாசகனுர் வந்துகண்டார் ஈசுபரரே
மாயவனுர்ப் பார்த்து மகாதேவர் ஏதுரைப்பார்
என்ன வகையெனக்கு இனியுரையு மென்றுசொன்னார்

## மாயவனார் யோசனை கூறித் திருமணம் பேசி முடித்தல்

சொன்னோம் உமக்குமொழி தோத்தகதை கண்டீரோ
மாமுனிவர் தம்மை வருகவென்று தானழைத்தார்
கூட்டமிட்டுத் தேவரெல்லாங் கொத்தவருந் தான்பேசி
ஆதிசிவன் முன்பாக அயனு ரேதுரைப்பார்
ஏகாம்பர ஈசுபரனே இனிகேளும் என்வார்த்தை
தப்பாமல் நீர்கேட்டால் தாழ்வு வராதபடி
செப்பனிட்டுத் தாரேன்காண் [1]செவ்வேரும் ஈசுபரனே
அப்படியே நல்லதென்றார் அரனார் கைலாசம்
தம்மதங்க ளாலே தன்சேனை அத்தனையும்
எழுந்திருக்க வேணுமென்று ஈசுபரனார் தானுரைத்தார்
நல்ல தென்றுசொல்லி நடந்தாரே தேவிபக்கல்
அப்போது மாயவனார் அருந்தவசைக் கண்டுமெச்சி
வந்துகண்டு மாயவனார் மகாதவசைப் பார்த்துநின்றார்
அந்தநல்ல வேளையிலே ஆட்சிக்கம்பை தான்பார்த்து
எங்கே வந்தீரண்ணாவி எனக்கறியச் சொல்லுமென்றாள்
அரனார் அனுப்பிவிக்க நான்வந்தேன் கண்டாயே
வந்தென்ன சேதியது மாயவரே சொல்லுமென்றாள்
இருவரும் போராடி இந்தப்படு களத்தில்
இப்போது ஈசுபரனார் ஏழுலகந் தானறிய
மாலையிட வேணுமென்று மகாதேவர் சொன்னார்காண்
சம்மதிச்சு நாங்களெல்லாம் நான்வந்தேன் கண்டாயே
நல்லபுத்தி அண்ணாவி நண்பருஞ் சொன்னபடி
சொன்னபுத்தி அண்ணாவி சுகமுடனே கேட்கிறேன்
அப்படியே நல்லதென்றாள் ஆட்சிக்கம்பை காமாட்சி
வந்தாரே மாயவனார் மகாதேவர் அண்டையிலே
இப்போது சோபனங்கள் எழுதுமென்றார் ஓலைதன்னை
அட்டதிக்குப் பாலகரும் அமரர்தே வேந்திரரும்
சந்திரருஞ் சூரியருஞ் சதுர்முகன் நான்முகனும்
இந்திரரும் பிர்மாவும் எல்லோரும் வாருமென்றார்
தக்கன் முதலாய்ச் சரசுபதியிந்தி ராணிமுதல்
தும்புரு நாரதருந் துய்யமுனி தேவரெல்லாம்
சித்தி வித்தியாதரருந் சேரவே வாருமென்று
காமாட்சி சோபனங்கள் கண்டெழுதி விட்டார்கள்
பூமகளும் இந்திராணி போதவே கன்னியரும்
ஆயிரங் சரசுவதியும் அனைவோரும் வந்தார்கள்
முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும்

---

[1]சேவேறும் — காளைமீதேறும் சிவன்

நாற்பத் தெண்ணாயிரம் நமன்கோடி சித்தர்களும்
வந்தார்கள் அப்போ மகாதேவர் அண்டையிலே
காமாட்சி அம்மன் கனதவசை விட்டிறங்கி
நல்லநாள் கேட்டு நல்முகூர்த்த மிட்டு
நிட்சயமாய்த் தாம்பூலம் நிலவரமாய் உண்டுபண்ணி
அம்மனையுந் தானழைந்து ஆனதொரு தேவரெல்லாம்
மாண்டதொரு சேனைவிட்டு மாலையிடப் போகாது

**சுந்தரனார் இறந்த சேனையை எழுப்பச்சொல்ல, காமாட்சி அவ்வாறே எழுப்புதல்**

இறந்ததொரு சேனையெல்லாம் எழுப்பியவள் விட்டாளே
சொன்னபடி கேட்பனென்று சுந்தரனார் தானுரைத்தார்
மாண்டா ரெழுந்திருந்து வரவேணும் இட்சணமே
மாலை யிடுவேன் வாளுமலர் கொடுப்பேன்
சேனை எழுந்திந்தால் சொன்னபடி நான்கேட்பேன்
என்று சிவனாரும் எடுத்துரைத்தார் அப்போது
அச்செய்தி கேட்டாளே ஆட்சிக்கம்மை காமாட்சி
அப்படியே தானும் அருந்தவசை விட்டிறங்கி
வெற்றி பெருந்தவசு விட்டிறங்கி வருகையிலே
சந்தன மாரி தரணியெங்குந் தான்பொழியும்
குங்கும மாரி குளிர்ச்சிபெற வேபொழியும்
பூமாரி தான்பொழிய புனக்கிளியால் தானடந்தாள்
வெற்றி மணிமுடியாள் வீரசக்தி காமாட்சி
ஆதி சிவனை அரனாரைத் தாள்பணிந்து
வீரசக்தி காமாட்கி விபூதிதனை எடுத்து
மாண்ட சமர்களத்தில் மாதாவும் விட்டெறிந்தாள்
ஓதிய திருநீறை உத்தமியாள் விட்டெறிந்தாள்
தூங்கினவர் போலே துய்யநெடுஞ் சேனையெல்லாம்
மாண்டபடை அத்தனையும் வகையுடனே தானெழுந்தார்
இறந்தகள மத்தனையும் எழுப்பிவிட்டா ளீசுபரியும்
எல்லாம் எழுந்திருந்து ஈசுபரரே வந்துகண்டார்
சந்தோஷ மாகிச் சங்கரனா ரேதுரைப்பார்
மாயவரை நோக்கி மாடேறும் ஈசுபரனும்
இன்னமொரு சேதி இனிகேளும் சுதனே
மாலையிட வேணுமென்றால் மாமன் எவர்காணும்
தக்கனை நான்பணியத் தாழ்மைகாண் போதாது
வையகத்துக் கேற்காது மகாதேவர் தான்பணிய
என்று சிவன்சொல்ல எண்ணியே தேவரெல்லாம்

ஆலோசனை புரிந்தார் அந்தநெடுஞ் சேனையெல்லாம்
ஈவு புரியாமல் இருந்தார்கள் தேவரெல்லாம்
காமாட்சி தானறிந்து காரணமோ தேவர்களே
தக்கனைத் தாள்பணியப் போதாது என்றுரைக்கால்

**விநாயகரை முன்நிறுத்தி திருமணம் முடித்தல்-**

ஆனைமுக வேலவரை அழைத்து நடுவில்வைத்து
எல்லா அறிந்துசெய்வார் எங்கள் கணபதியும்
அப்போது ஈசுபரனார் ஆமென்று சம்திச்சு
மகாதேவர் தாமும் மாமுனியைத் தானழைத்து
கலியாண முகூர்த்த கதுமையுடன் சொல்லுமென்றார்

**மணமேடை அமைத்தல்:**

பவழக் கால்நாட்டி பருவயிரத் தூணிருத்தி
ஆட்சா மரம்பிளந்து அடியளந்து பந்தலிட்டு
தென்னை மரம்பிளந்து தெருவெங்கும் பந்தலிட்டு
மூங்கி மரம்பிளந்து முக்காதம் பந்தலிட்டு
பொதிகையுஞ் சித்திரமும் போதநிழல்க் காட்ட
சித்திரங்க ளெல்லாஞ் சிறக்கவே உண்டுபண்ணி
பொன்னினால் தூணும் போதிகையும் நிழலாட
ஒருயோசினை தூரம் உசிதமாய்ப் பந்தலிட்டு
நிரைக்காயிரந் தூணிருத்தி நிழலாடக் கண்ணாடி
பத்துநிலைக் கோபுரமும் பளிங்குமா மண்டபமும்
சுத்துந் திருமதிலுஞ் சூழும்நிலைக் கோபுரமும்
திசைக்கித் திசைதானும் சித்திரங்கள் உண்டுபண்ணி
வீதிக்கி வீதி விதவிதமாய்க் குரிஞ்சிக்கட்டி
மேகவர்ணப் பட்டதினால் மேல்கட்டுத் தான்தூக்கி
முகுர்த்தக் கால்நாட்டி முழுவயிரத் தூணிருத்தி
தூணுக்குத் தூணு சோதிவிடுஞ் சித்திரங்கள்
காலுக்குக் காலு கால்விளக் கெரிய
பூப்பந்த லிட்டு பூங்கமுகு வாழைகட்டி
பாக்குச் சரங்கள் பக்கமெல்லாந் தொங்கவிட்டு
எலும்பிச்சை நாரத்தை இதமாகத் தொங்கவிட்டு
வர்ணமாயிரங் கோடிமலர் சரங்கள் தொங்கவிட்டு
சந்திரருஞ் சூரியருந் தானவரு முன்பாக
சாலுங் கரகமுந் தண்ணீரு முன்பாக

அம்மி வலமாக அரசாணி முன்பாக
பிரம்பு வலமாக பேய்க்கரும்பு முன்பாக
கனகரத்தின மணவறையில் கதுமையுடன் தானுமிப்போ
சிங்கா சனத்தில் சிவனும் வந்திருப்பார்
வேதப் பிராமணர்கள் வேதங்கள் தான்படிக்க
வேத விருமாவும் வேத முனிவர்களும்
மங்களங்கள் பாட மகாகோடி மாமுனிவர்

## காமாட்சியை மணப்பெண்ணாக அலங்கரித்தல் :

காமாட்சி நாயகியைக் கனக்க அலங்கரித்து
அழைத்துவரச் சொன்னாரே அரனார்முன் தேவரெல்லாம்
கோடிலட்சந் தெய்வரம்பை குயில்கிளியால் முன்னேவந்து
பத்துலட்சந் தெய்வரம்பை பைங்கொடிக்கு முன்னேவந்து
பார்பதியாள் முன்பாகப் பணிவிடையுஞ் செய்தார்கள்
ஓரிழைப் புடவை உலகமெச்சும் பொன்சருகு
இந்திரவர்ணப் பாவாடை இதமுடனே கோசுடுத்தி
சீவி முடித்து சிகப்புரத்தினக் கொப்புமிட்டு
தண்டை சிலம்பசைய தாவடங்கள் சோதிமின்ன
முத்து வடமணிந்து முன்கை முதாரியிட்டு
மாணிக்கம் மாலை வச்சிரமணி தானணிந்து
இரத்தினமணி மாலைகளும் நவரத்தினமுஞ் சோதிமின்ன
தோள்வந்திக் காப்புந் துலங்குமஷ்த்த கடையமின்ன
பத்து விரலுக்கும் பசும்பொன் கணையாழி
நெத்திக்குச் சுட்டியிட்டு நீலவிழி மையெழுதி
திருவிழா மயிலாப்புரையுஞ் செம்பொன் பணதியிட்டு
காலாழி பீலி கதுமையுடன் தானணிந்து
நாகரத்தின, மாலை நவமணியுந் தானணிந்து
பாடகந் தண்டைகளும் பசும்பொன் சிலம்பணிந்து
கொஞ்சிவரும் வீரதண்டை கொப்பிமிக வணிந்து
பாத சரமசையப் பஞ்சாட்சங் குலுங்க
காதுக்குக் கொப்பணிந்து கைக்குவெள்ளி காப்பணிந்து
கோலவிழி மையெழுதி கொந்தளப்பொன் ஓலையிட்டு
வேணுமென்ற ஆபரணம் மேல்நிறையத் தான்சூட்டி
மணவறையின் மீது வந்திருந்தார் மாகதேவர்
மகாலெட்சுயும் இந்திராணியும் நல்லசரசு பதியும்
இனங்களதி லொற்றுமையும் இணைசேர்ந்த கன்னியரும்
பத்துலட்சந் தெய்வரம்பை பாங்காக முன்னடக்க

எட்டுலட்சம் பாங்கியர்கள் இணைகவுரி தான்வீச
பட்டுக் குடைசூழ பாங்கியர்கள் முன்னடக்க
முத்துக் குடைசூழ மோகினியாள் முன்னடக்க
பவழக் கவுரியரும் பாங்கியர்கள் முன்னடக்க
தோகைமயில் அன்னம்போல தோழியர்கள் முன்னடக்க
நாட்டியங்க ளாட நடுவே யியல்பாட
கட்டியங்கள் கூறக் கவுரி பறிமாற
கோடிசூரியப் பிரகாசந் துலக்கமிடும் பாவனைபோல்
வண்டுகள் பாட வாசமிக வீச
தும்பியள் பாட சுகந்தம்பல வீச
நடந்தாளே காமாட்சி நல்லமுத்து மாலைசிந்த
பூமாரி பொன்மாரி பொழியுமந்த தேசமெல்லாம்
சுகந்தம்பல வீச துர்ந்தரீக மானசத்தி
நடந்தாளே காமாட்சி நாட்டியங்க ளாடிவர
மணவறைப் பந்தலிலே வந்திருந்தாள் காமாட்சி
கர்த்தன் கைலாசர் கண்டு மனமகிழ்ந்து
மாலையும் மங்கிலியம் வாங்கியே கைப்பிடித்து
விநாயகரைத் தானினைந்து விடையேறும் ஈசுபரனே
மாமுனிவர் எல்லோரும் வாழ்த்தியே கைக்கொடுத்தார்
வாங்கியே மங்கிலியம் மகாதேவர் அப்போது
நாலு முகத்திலேயும் நாலுமுத்துக் கோர்வையிட்டு
ஆசீர்வாத மென்றார் அரனார்முன் தேவரெல்லாம்
இரும்பான மங்கிலியந் தான்தரித்தார் மகாதேவ ரப்போது
தக்கன் அருகிருக்கத் தான்வாழ்த்தித் தேவரெல்லாம்
அரசாணி சுற்றிவந்து அருந்ததியைத் தான்பார்த்து
சோபனங்கள் பாடி துலங்குமணப் பந்தலிலே
மாளிகையில் போய்ப்புகுந்தார் மன்னவருந் தேவியரும்
பள்ளி யறையிலேதான் பைங்கிளியும் வீற்றிருந்தாள்
பட்டணப் பிரவேசம் பாங்காய் வருகவென்று

**திருமணம் முடிந்து இறைவனும் இறைவியும்
பட்டணப்பிரவேசம் வருதல்**

தற்பரனா ரப்போது தங்கரத மேறுகிறார்
கன்னிக் கம்பைகாமாட்சி பொன்னுரத மேறுகின்றாள்
இருவர் ரதமேறி இணைசோடாய் வருகையிலே
பூமாரி பொன்மாரி பொழியுமந்த தேசமெல்லாம்
தேவர்கள் கொண்டாடத் தெருவீதி வருகையிலே

ஏறினர் தங்கரதம் எடுத்தார் நெடுங்குடையை
பட்டுக் குடையும் பவழவர்ண நற்குடையும்
முத்துக் குடையும் முழுவயிர நற்குடையும்
பொன்னின் குடையும் பூசக்கிர வாளகுடையும்
பத்தி நிரைத்தார்கள் பகவானைக் காணுமல்
இடக்கியங்கள் சூரியவான் இரண்டுலட்ச முன்னடக்க
அன்னக் கொடிவிருதும் *அனுமந்தடால் விருதும்
சந்திரகாவிடால் விருதும் தளமெல்லாந் தான்வீச
புலிக்கொடி டால்விருதும் புண்ணியனுர் பக்கலிலே
கெருடக் கொடிவிருது கிளிமொழியாள் பக்கலிலே
கட்டியங்கள் கூற கவிவாணர் முன்னடக்க
ஒற்றைச் சங்கோசை உலகமெல்லாந் தானதிர
துந்துமி மேளந் திக்கெங்குந் தான்முழங்க
ஆனைமேல்ப் பேரிகை அதிருந்திசை களெட்டும்
குதிரைமேல்ப் பேரிகை குமுறுந்திசை களெட்டும்
பந்தயங்கள் தானெரிய பகவத்தி தான்துலங்க
பத்துலட்சங் கோடி பகவத்தி சூழ்ந்துவர
ஆகாச பாணம் அதிருந்திசை களெட்டும்
நட்செத்திர பாணம் நலமாய்த் துலக்கமிட
நிலவிருசு பாணம் நிலைபெற்று நின்றதிர
முப்பத்து முக்கோடி தேவர்களும் சூழ்ந்துவர
நாற்பத் தெண்ணுயிரம் நமன்கோடி சித்தர்களும்
கோடான கோடி வேதியர்கள் சூழ்ந்துவர
நாலுலட்சந் தாதியர்கள் நாட்டியங்க ளாடிவர
பத்துமுகத் தீவட்டி பக்கமே சூழ்ந்துவர
முத்துக் கவுரியிட மோகினியாள் முன்னடக்க
பவளக் கவுரியிட பாங்கியர்கள் சூழ்ந்துவர
ஆயிரங் கோடி வெண்சாமரம் வீச
கட்டியங்கள் கூற கவுரி பருமாற
சின்னங்க ளூத தெருவெங்கும் ஆர்ப்பரிக்க
நாகசின்ன மூத நாட்டியங்க ளாடிவர
எக்காள மூத இடிபோல முரசதிர
முத்தினு லாலாத்தி மூவாயிரங் கோடி
பவழளத்தா லாலத்தி பதினுயிரங் கோடி
பட்டணப் பிரவேசம் பாங்குடனே வந்தார்கள்
இருவரெண்டு பேரும் பொன்னுரதம் விட்டிறங்கி
மணவறைப் பந்தலிலே மகாதேவர் வந்துநின்று
நாலாம் நீருடி நாகவல்லி தான்முடிந்து

* அனுமந்தடால் — ?

முத்தும் பவளமும் முன்றுதர மெடுத்தாகள்
மாலையைத் தான்சுற்றி மளிகையில் வைத்தார்கள்
மாளிகையின் உள்புகுந்து மன்னவரும் தேவியரும்
பள்ளியறை தனிலே பாங்காக வீற்றிருந்தார்
மகாதேவர் அப்போது மாளிகையில் வீற்றிருந்தார்
எண்ணும் பதிறு இருந்துமிக வாழ்ந்தார்கள்
மாரி பொழியவேணும் மகாதேவர் தான்வாழ்க
காமாட்சி யம்மன் கருத்தில்மிக வாழ்க
ஈசுபருந் தேவியரும் இணையாக வாழ்ந்திருந்தார்
தேவர்கள் எல்லோருந் திரமாகத் தான்கூடி
மகாதேவர் பாதம் வந்துகண்டு தொண்டநிட்டு
ஈசுபரனர் அண்டையிலே விடைவாங்கி கொண்டல்லோ
தேவர்கள் எல்லோருந் திரமாய்ப்போய் வாழ்ந்திருந்தார்

**காஞ்சியின் சிறப்பு கூறல் :**

காஞ்சி வனத்தில்க் கதித்ததொரு பட்டணமும்
காஞ்சி புரமென்று கதித்தநக ருண்டாக்கி
நெட்டுப் பதிங்காதம் நெடுகமுள்ள பட்டணமாம்
ஆறுங் குளமும் அடிக்கடிச் சத்திரமும்
கம்பை நதியுங் கைலாசப் பொய்கைகளும்
சந்தனத் தடாகமுந் தாமரைப் பொய்கைகளும்
சிங்காரத் தோப்புஞ் சிறந்ததொரு மண்டபமும்
பூங்கா வனமும் பூத்துப் பொலிந்திருக்க
ஏகாம்பர நாதர் இயல்பெரிய சன்னதியும்
வெற்றிபெருங் காமாட்சி மிகுந்ததொரு சன்னதியும்
சுத்துந் திருமதிலுஞ் சூழும்நிலைக் கோபுரமும்
பத்துநிலைக் கோபுரமும் பளிங்குமா மண்டபமும்
சித்திரத் தேருஞ் சிறந்தகொலு மண்டபமும்
ஆயிரங்கால் மண்டபமும் அபரஞ்சிக் கோபுரமும்
வீதிக்கு வீதி விதவிதமாய்க் குரிஞ்சியளும்
தேருந் திருநாளும் தேரடி அதிசயமும்
வருட மொருக்கால் மகாதேவர் தேரோட்டம்
காஞ்சிபுரம் பட்டணத்தில்க் கதுமையுடன் பூசைகொண்டு
ஈஸ்பருந் தேவியரும் இதமாக வாழ்ந்திருந்தார்

**காமாட்சி பாசுபதம் பெறுதல்**

அந்தநல்ல வேளையில் ஆட்சிக்கம்பை காமாட்சி
உத்து நினைத்தாளே உலகாளும் காமாட்சி

தென்காஞ்சி நாடு தேசமெல்லாம் பூசைகொள்ள
மனதில் நினைந்தாளே மாதுகம்பை காமாட்சி
சன்னதிக்கு முன்னிருக்கும் மகாதேவர் தீர்த்தமது
தீர்த்தக் குளமுந் திருமஞ்சன நீர்பொய்கைகளும்
தீர்த்தக் குளத்தோரஞ் செயல்பெரிய காமாட்சி
மானம்போலக் கட்டைவெட்டி மலைபோலே தீவளர்த்து
கோபுரம்போலக் கட்டைவெட்டி குன்னதுபோலத் தீர்வளர்ந்து
அக்கினியை உண்டுபண்ணி அனலாய்ப் பொறிபரக்க
அண்டரண்ட பாதாளம் ஆகாச மூடுருவ
தீயை வளர்த்தாள் செயல்பெரிய காமாட்சி
தீர்த்தத் துறையில் திருமஞ்சன நீராடி
ஈரத் துயில்கிளைந்து இந்திரவர்ணப் பட்டுடுத்தி
பஞ்சவர்ணப் பாவாடை வகையாய் வரிந்துகட்டி
சிவனை நினைந்து சிவபூசை தான்முடித்து
எலுமிச்சங் கனியும் பூச்செண்டும் கைபிடித்து
தீக்குழியைச் சுற்றிவந்து செயல்பெரிய காமாட்சி
அரகரா வென்றுசொல்லி அக்கினியில் போய்முழுகி
மாலை கசங்காமல் மல்லிகைப்பூச் சோம்பாமல்
செந்தாமரை முகமுஞ் சிந்தை மூலையாமல்
அக்கினியை விட்டுவந்தாள் ஆட்சிக்கம்பை காமாட்சி
தீக்குழியை விட்டு மேலேறி வருகையிலே
கருமாலி பாஞ்சு திருமாலை பெற்றுவந்தாள்
வளரும்பிறை காமாட்சி வருகுமந்த வேளையிலே
மேகங் குடைபிடிக்க மேகக்கன்னி தாலாட்ட
பூமாரி பொன்மாரி பொழியுமே அட்சணமே
அக்கினியால் குளித்து அனலில் விடாய்தீர
அந்தந் திருக்குளத்தில் ஆட்சிக்கம்பை காமாட்சி
கோடான கோடி உருக்குவசி தானிருத்தி
இணைக்காயிரங்கோடி ..........................
பத்துலட்சங் கோடி பதித்த திருக்குளத்தில்
வாசலுக்கு முன்னிருத்தி வச்சிரமணி கோபுரத்தில்
ஆகாச மூடுருவும் அபரஞ்சிக் கோபுரத்தில்
அப்பெரிய கோபுரத்தில் ஆட்சிக்கம்பை காமாட்சி
பஞ்சவர்ணக் கோபுரத்தில் பார்பதியும் போயேறி
சிவசிவா வென்றுசொல்லி சிந்தையிலே தானினைந்து
மகாதேவா வென்றுசொல்லி மனதில்மிக நினைந்து
சுத்தெங்கும் பார்த்தாள் துரந்தரீக மானசத்தி
அரகரா வென்றுசொல்லி ஆக்கரித்துத் தான்குதித்தாள்
கருமாலி பாஞ்சு தீக்குளியை விட்டுவந்தாள்

அப்போது ஈசுபரியாள் ஆதிசிவன் பக்கம்வந்து
மகாதேவர் பாதம் மலர்தூவித் தெண்டநிட்டு
அப்போது சிவனாரும் அரனாருங் கண்டுமெச்சி
முப்பத்து முக்கோடி தேவர்களுங் கண்டுமெச்சி
அப்போ மகாதேவர் ஆதிசத்தி தனையழைத்து
முன்னும் அருந்தவசில் மூண்டுநீ பேறுபெற்றாய்
இன்னமொன்று வேண்டி இக்கருமாலி பாஞ்சுவந்தாய்
என்றுசொல்லி மகாதேவர் ஈசுபரியைத் தான்கேட்டார்
அப்போது மாதுகம்பை அடிவணங்கி ஏதுரைப்பாள்
தென்காஞ்சி நாடு தேசமெல்லாம் பூசைகொள்ள
வரந்தர வேணுமென்று மடதுகம்பை தான்கேட்டாள்
அப்போது மகாதேவர் அரனாருங் கண்டுமெச்சி
கேட்டவரந் தான்கொடுத்தார் கிருபையுடன் ஈசுபரரும்
மாயவனார் தானரிய வரங்கொடுத்தார் ஈசுபரரும்
தென்போறதுக்குச் செயல்பெரிய காமாட்சி
பயணமென்று சொல்லி பருமுரசு சாற்றுமென்றார்
அப்போது ஈசுபரனார் அன்புடனே தான்பார்த்து

**அம்மனுக்குத் துணையாக பல சேனையை அனுப்புதல் :**

பக்கத் துணையாகப் பாலகர்ப் பயணமென்றார்
நாரத மாமுனியை நன்றாய்ப் பயணமென்றார்
செட்டி சடமுனியுஞ் செங்கமல சடாமுனியும்
அகத்திய மாமுனியும் அங்கன் முரங்கப்பன்
லாடப்பன் சன்னாசி நல்லமகா முனியும்
தங்க ரதமுஞ் சதிருக உண்டுபண்ணி
ஏகாம்பர நாதர் தங்கரத மேறுகின்றார்
தேவிகம்பை காமாட்சி பொன்னுரத மேறுகின்றாள்
பூலோகந் தான்செழிக்கப் பொன்னுரத மேறுகின்றாள்
அப்போது ஈசுவரனார் அன்புடனே தான்பார்த்து
சேனை தளத்துஞ் சிறுதாணி வேணுமென்று
வாது கருப்பை வருகவென்று தானழைத்து
வேண்டும் வரங்கொடுத்து விடைகொடுத்தா ரப்போது
காசி மட்டஞ் சீனிவைத்து பயணமென்றார்
பதினெட்டு ஆயுதமும் பாங்குடனே தான்கொடுத்து
வருக வென்றுசெல்லி மகாதேவர் சொன்னபின்பு
தேவபூசைக் காரன் செயல்பெரிய அண்ணரையும்
வாதுப் புதுக்கருப்பை வருகவென்று தானழைத்து
பதினெட்டு ஆயுதமும் பாங்குடனே தான்கொடுத்து

வருக வென்றுசொல்லி விடைகொடுத்தா ரப்போது
பயண மென்றுசொல்லிப் பருமுரசு தான்முழங்க
இருவர் ரதமேறி இணைசோடாய் வருகையிலே
அணைமேல் பேரிகை அதிருது திசைகளெட்டும்
ஒட்டைமேல்ப் பேரிகை ஒருகோடி தான்முழங்க
குதிரைமேல்ப் பேரிகை குமுறுது திசைகளெட்டும்
எருதின்மேல்ப் பேரிகை எங்கும் கிடுகிடென
தம்பட்டங் கொட்டத் தவில்முரசு தான்முழங்க
நாட்டியங்க ளாட நடுவே இயல்பாட
ஒத்தைச் சங்கோசை உலகேழுங் தானதிர
நாகசின்ன மூத நவரம்பை தானாட
வீராணம் நாகசின்னம் வெங்கலக் கொம்பூத
எக்காள மூத இடிபோல முரசதிர
ஏறினார் தங்கரதம் எடுத்தார் நெடுங்குடையை
பட்டுக் குடையும் பவழவர்ண நற்குடையும்
முத்துக் குடையும் மூரிவயிர நற்குடையும்
பொன்னின் குடையும் பூச்சக்கிர வாளகுடையும்
பத்தி நிரைத்தார்கள் பகவானைக் காணாமல்
கோடான கோடி இடைக்கியங்கள் சூழ்ந்துவர
சுந்தி நிரைத்துவரும் சூரியவான் ஒருகோடி
கட்டியங்கள் கூற கவுரி பருமாற
ஆயிரங் கோடி வெண்சாமரம் வீச
தேவிகம்பை காமாட்சி சிந்தை மகிழ்ந்துவர
கம்பை நதியைவிட்டு தென்காஞ்சி வருகையிலே
வடகாஞ்சி விட்டு தென்காஞ்சி வருகையிலே
தென்காஞ்சி நாடு பேய்மேய்ந்த ராச்சியமாம்
அப்படித் தானும் இருக்குமந்த ராச்சியத்தில்

**அம்மனின் வருகையால் தென்காஞ்சியின் சிறப்பு :**

தேவிகம்பை காமாட்சி வருகுமந்த வேளையிலே
பட்டமரம் பாலொழுகும் உளுத்தமரந் துளிரேடும்
பூக்கா மரங்களெல்லாம் பூத்துப் பொழிந்திடுமாம்
காய்க்கா மரங்களெல்லாம் காயுங் கனிபழமாம்
பூமாரி தான் பொழியப் பொற்கிளியால் தானடந்தான்
தேவிகம்பை காமாட்சி தென்னாடு வருகையிலே
அன்னர்தங் குலுங்க அனுமந்தடால் வீச
பொன்னினார் தங்குலுங்கப் பூச்சக்கிரக் குடைநெருங்க
வண்டி நெருதெருக்க வச்சிரத் தேர்குலுங்க

கொல்லிமலை சதுரகிரி தீவுநோக்கி வருகையிலே
அப்போ மாரிமொழிந்திடுமாம் வனங்கள் தழைத்திடுமாம்
கோடி தளத்துடனே கொல்லிமலை வந்திறங்க
பூங்கா வனச்சோலை புளிவனச் சோலையது
வாங்காக கொலுவிருக்கும் மாவிருண்ட சோலையது
என்றுசொல்லி அவ்வனத்தில் இறங்கினாள் தேவிகம்பை
மக்கள் இருவரையும் வருகவென்று தானழைத்து
சிவபூசைக் கேற்ற தேவஸ்தல மெங்கையென்று
கனகசபை இரங்கக் கதித்ததல மெங்கையென்று
பார்த்து வருகவென்றாள் பைங்கிளியுங் காமாட்சி
வெற்றிபெறும் அண்ணருக்கு விடைகொடுத்தா ளீசுபரியும்
விடைவாங்கிக் கொண்டு விந்தைபெரி யண்ணருந்தான்
மேகவர்ணப் பொன்ரதம் போலவிதமா யலங்கரித்து
பத்துலட்சம் பொன்பெற்ற பற்பறாகஞ் சீனிவைந்து
தங்கத்தி னாலே சதிறான கல்லணையும்
அங்குவடியும் ஆணிமுத்துஞ் சோதி மின்ன
சல்லித் திரளுகளும் தங்கமணி மாலைகொஞ்ச
கொஞ்சிவருந் தேசியர்க் குலுங்கிவரும் வீரதண்டை
தோளாடுஞ் சல்லி துவண்டாடும் வீரகுஞ்சம்
நாட்டியங்க ளாடிவரும் நடனமிடும் வான்பரிக்கு
பூட்டி யலங்கரித்துப் பூசணமாய் மெஞ்சாப்போல்
கொண்டுவந்து விட்டார்கள் கொத்தவரை முன்பாக
கண்டு மனமெச்சி கார்மேகத்தை யயரவும்
[1]திட்டி கழியுமென்றார் செயல்பெரிய தூதுவரை
ஆதி பெரியண்ணாவும் அன்புடனே தானெழுந்து
பட்டுத்தட்டிச் சல்லடமும் பாங்காய் வரிந்துகட்டி
கருங்கச்சை ஒட்டியாணங் கதித்த நிசாருதொட்டு
சந்திர காவி சதிறான பாகுகட்டி
ஒண்டிமுத்துக் கடுக்கன் உலகேழுஞ்
மார்புப் பதக்கம் வச்சிரமணி ஆபரணம்
தோளுப் பதக்கந் துளசிமணி ஆபரணம்
தும்பிப் பதக்கஞ் சோடுவை டூரியங்கள்
முன்கை முதாரிமின்ன முழுக்கடையஞ் சோதிமின்ன
பாவுலிமேல் முருகும் வச்சிர்ப் பதக்கமின்ன
பொன்னருநாள் மிஞ்சி பூலோகஞ் சோதிமின்ன

---

[1] திஷ்டி - கண்ணேறு

பத்து விரலுக்குப் பசும்பொன் கணையாழி
வெள்ளி யருநாண் விதமாகச் சோதிமின்ன
வாகுதார் பெரியகத்தில் வச்சிரமணிக் கேடயமும்
கட்டாரி நெரிசமும் கையம்பு வலையமும்
சிங்கமணி வில்லும் சேனையம்பு கைப்பிடித்து
வாங்கு புடிஅம்பும் வளைதடியுங் கைப்பிடித்து
எடுத்தாரைச் சங்கரிக்க எண்ணற்ற வீச்சருவாள்
பகைத்தாரைச் சங்கரிக்க பரமனுட வீச்சருவாள்
எமதண்டா யுதமும் ரெண்டுசூலமுந் தானெடுத்து
காண்டீபந் தானெடுத்து கைக்கொள்ளா அம்பெடுத்து
படைகண்டா லாவிக்கும் பஞ்கலி யாணினமே
ஏறினார்வானம் பரிமேல் எதிரில்லாக் கோடையிடி
வாதுப் புதுக்கருப்பன் வரிசைபதம் பெற்றதுரை
வெள்ளையொரு வான்பரிமேல் விதமாகச் சீனிவைத்தார்
ஆடை அலங்கரித்து ஆபரணம் மேலணிந்து
பத்துலட்சங் கோடி பசும்பொன் பணதியிட்டு
பதினெட்டு ஆயுதமும் பாங்குடனே தானெடுத்து
காண்டீபந் தானெடுத்து கலக்கொள்ளா அம்பெடுத்து
மகாதேவி ஈசுவரியே மலர்த்தூவித் தெண்டநிட்டு
இருவரெண்டு பேரும் இணைசோடாய் வான்பரிமேல்
வான்பரிமேல் ஏறுகின்றார் வரிசைபதம் பெற்றதுரை
விட்டாரொரு சாரி விண்ணும்மண்ணும் நின்றதிர
கொல்லிமலை சதுரகிரி அண்ணாசாரி வருகையிலே
தாவுநிலை எங்கேயென்று அண்ணாசாரி வருகையிலே

**மாசிமலையின் சிறப்பு :**

பார்த்து வருகையிலே பாங்கான மாசிமலை
வாங்காத மாசிகட்டு மலைமேக்முஞ் சூழ்ந்திருக்கும்
மேகங்கள் வந்து விரும்புமந்த மாசிமலை
செண்பகப்பூ மாங்கள் பூத்துச் சிதறிடுமாம்
கொத்தரளி முத்துருவி கொடிமல்லிகைப் பூச்சொரிய
மந்தாரைப் பிட்சி மருவோ டிருவாட்சி
பிட்சி இருவாட்சி முகமலராச் செண்பகப்பூ
ஈழத்தரளி இதழ்பிரிஞ்சு பூத்து நிற்கும்
கெந்த பரிமளமுஞ் சுகந்தம்பல வீச
சந்தன வாசஞ் சவ்வாது தான்வீச
மாமரமுஞ் சோலைகளும் மகிழமரந் தோப்புகளும்
கூந்தப் பணையுங் குளிர்வனச் சொங்குகளும்

தாழை மடவுந் தாமரைத் தடாகமது
பச்சைப் புளியும் பருத்தபிலா மரங்கள்
சந்தனச் சோலையது தாமரைத் தடாகமது
காதத்துக் காதங் கருவாழைத் தோட்டமது
பிரம்புக் குறிஞ்சிவனம் பூங்காவனச் சோலையது
எலும்பிச்சை நாரத்தை ஏதேது உள்ளதெல்லாம்
தேக்கு மரமுந் தெகுலடியே கண்டுமெச்சு
வண்டுகள் பாட வாசமிக வீச
தும்பிகள் பாட சுகந்தம்பல வீச
வாச மிகுத்ததொரும் மாசிமலை நன்னாடு
வந்துமிகக் கண்டான் வாதுபெரி யண்ணனுந்தான்
கண்டு மனம்மகிழ்ந்து கனபீரிய முண்டாகி
தேவிகம்பை காமாட்சி தெங்களிரிக் காகுமென்று
வளரும்பிறை காமாட்சி வந்திரங்க நல்லதலம்
ஆகுமென்று சம்மதித்தான் ஆதிபெரி யண்ணருந்தான்
அந்தவிடம் விட்டு அப்பிறமே போகையிலே
சதுரகிரி பருவதத்தை அண்ணமார்சாரி வருகையிலே
கண்டானே அங்கையொரு கருமையுள்ள மேல்தலத்தை
வாசலூர் நன்னாடு வாங்காக கொலுவிருக்க
மனதில்மிக நினைந்தான் வாதுபெரி யண்ணருந்தான்
மிருகனூர் நன்னாடு மேல்த்தலங்க ளாகுமென்று
கொல்லிமலை நன்னாடு எழுவத்தார் கொம்பையெல்லாம்
கொம்பைக்கிக் கொம்பை கொலுவிருந்து பூசைகொள்ள
நமக்கு ஏற்ற நல்லதல மாகுமென்று
என்றுசொல்லி அண்ணமார் இதமாகத் தான்பார்த்து
வான்பரியை விட்டிறங்கி மாதாகிட்டே ஓடிவந்து
மாதாவின் பாத மலர்த்தூவித் தெண்டநிட்டு
தெண்டநிட்ட பாலகரைத் திக்கென்று தானெடுத்து
போய்வந்தந் தேசத்தினைப் புகழ்ந்துவிடுந் தம்பியென்ருள்
தெண்டநிட்டு வாய்புதைத்துத் தேவிகம்பை முன்பாக
ஆட்சியரே உந்தனுக்கு ஆனதலம் பார்த்துவந்தோம்
காஞ்சி வனம்போல் கதித்ததலம் பார்த்துவந்தோம்
கனகசபைக் கேற்ற கதித்ததலம் பார்த்துவந்தோம்
தெய்வப் பசுங்கிளியாள் திருச்செவியி லூற்றதுவே
தேவர்கள் எல்லோரும் மந்திரமிகக் கேட்டதுவே
அன்னகம்பை காமாட்சி தங்கரத மேறுகிருள்

## காமாட்சி மாசிமலை செல்லல்

காமாட்சி அவ்வனத்தை மாதாவுந் தீவுநோக்கி

வந்து இறங்குகின்ருர் மகாதேவ ரெல்லோரும்
படர்ந்ததொரு பாறைகளும் பக்கமிருஞ் சோலைகளும்
சந்தணத் தடாகமது தாமரைப் பொய்கைகளும்
கண்டு மனமெச்சி கன்னிகம்பை காமாட்சி
தங்கரதம் விட்டிறங்கி தரணியெங்குந் தான்செழிக்க
வெற்றிபெருங் காமாட்சி விதமுடனே தான்பார்த்து
வெங்கலப் பாறையின்மேல் வெம்புலித்தோல் ஆசனத்தை
வேங்கைப் புலித்தோலும் வெளிமானின் ஆசனமும்
குட்டிப் புலித்தோலும் கொடிவேங்கை ஆசனமும்
கண்ணுப் புலித்தோலும் கவரிமான் ஆசனமும்
இட்டார்கள் ஆசனத்தை எல்லோருங் கொண்டாட
வளரும்பிறை காமாட்சி வந்துகொலு வீற்றிருந்தாள்
மகாதேவ ரெல்லோரும் வந்துகொலு வீற்றிருந்தார்
தில்லைப் பசுங்கிளியாள் தேவிகம்பை தான்பார்த்து
மக்கள் இருவரையும் வருகவென்று தானழைத்து
அப்போ தனிக்கருப்பன் அரவதடி வேலைக்காரன்
இருவரும் வந்துகண்டு ஈஸ்பரியே வந்துகண்டு
முக்கா வலம்வந்து மூவிருக்கால் தெண்டநிட்டு
மற்று மொருகால் மலர்த்தூவி தெண்டநிட்டு
தெண்டநிட்ட புத்திரரை திக்கென்று தானெடுத்து
கடித்தாலும் மீளாத கருநாக்கு குட்டியல்லோ
தீண்டினல் மீடாள சென்ருக்கு குட்டியது
மட்டடங்கா சேனை மகாதேவர் வந்திறங்கி
தேவர்கள் எல்லோரும் மந்திரமாக வந்திறங்கி
மாசிமலை நாடு மகிழ்ந்துமிகப் பூசைகொள்ள
சதுரகிரி மலைநாடு எல்லை அடங்கலுமே
மலைஞட்டி லுள்ள மலையாளர் அத்தனையும்
வணங்கிமிகப் பார்த்து வரவழையு மென்றுரைத்தாள்
நல்லதென்று சொல்லி நலமாகத் தெண்டநிட்டு
தெண்டநிட்ட மக்களையும் தேவிகம்பை தான்பார்த்து
என்னைப் பெறுவீர் எதிர்த்தார் முடிவுபெறுவீர்
பின்னைப் பெறுவீர் பெருமாள் பதம்பெறுவீர்
வாழ்த்தி விடைகொடுத்து மந்திரவாள் கைக்கொடுத்து
போற்றி விடைகொடுத்து போடா மகனேயென்ருள்
விடைவாங்கிக் கொண்டு வெளிப்பட்டா ரன்னேரம்
கார்மேக நீலவர்ணன் கதித்ததொரு வான்பரிமேல்
மேகவர்ண பட்டதினல் விதமாகச் சீனிவைத்து
தங்கத்தி னலே சதிருண கல்லனையும்
வேணுமென்ற ஆபரணம் மேல்நிறையத் தான்பூண்டு

மலைநாடு தான்திரிவான் பரிமேல்த் தானேறி
விட்டா ரொருசாரி விண்ணும் மண்ணும் நின்றதிர
இட்டசாரி விட்டார் இருபத்து நற்காதம்
வலதுசாரி விட்டார் வையகத்தைச் சுற்றிவந்தார்
சாரிவிட்ட வான்பரியைத் தனித்திருக்கும் மாந்தோப்பில்
கொண்டுவந்து தானிருத்தி கொள்ளைகொண்ட வான்பரியை
அண்ணன்மார் இருவரும் ஆலோசனை புரிந்தார்
வர்ணமாயிரங் கோடி வனக்கிளிகள் உள்ளதெல்லாம்
வருக வென்றுசொல்லி மனதில் நினைந்தவுடன்
கோடான கோடிகிளி கூடிவந்து தெண்டநிட்டு
தெண்டநிட்ட வான்கிளியைத் திக்கென்று தானெடுத்து
வாரும் கிளியினமே வார்த்தை சொல்லக் கேட்டருளீர்
சோலைக் கிளியினமே சொல்பேச்சுக் கேட்டருளும்
சொல்லுமையா ஆண்டவனே சொல்லுமென்ற சேதியெல்லாம்
என்றுசொல்லி வான்கிளிகள் இணைசேர்ந்து கேட்டிடுமாம்
கேட்டா ரென்று கிருபையுடன் ஏதுரைப்பார்
சதுரகிரி மலைநாடு எல்லையடங் கலுமே
கொல்லி மலைநாடு கொம்பையிட மத்தனையும்
மலையாள ரதங்களுட வான்பயிறு சொன்னதெல்லாம்
கருந்தெனையுங் செந்தனையுங் கதித்தபுன லுள்ளதெல்லாம்
கருதுக்கு அஞ்சுகிளி கதுமையுடன் போயேறி
கோதியே தின்று கொள்ளையிட்டு வாருமென்றார்
கருவாழைத் தோட்டங் கனிபழங்கள் உள்ளதெல்லாம்
மாவிளங் கனியும் வாய்த்தபிலாச் சுளையும்
கோதியே தின்று கொல்லையிட்டு வாருமென்று
வாழ்த்தியே விடைகொடுத்தார் வனக்கிளிகள் எல்லோருக்கும்
விடைவாங்கிக் கொண்டு வெளிப்பட்டுக் கிளியினங்கள்

## கிளியினங்கள் தினைப்புனத்தை அழித்தல்

தினைப்புனங்க ளுள்ளதெல்லாம் சேரவே கொள்ளையென்று
வந்து வளைந்ததுகான் வனக்கிளிகள் உள்ளதெல்லாம்
கருதுக்கு அஞ்சுகிளி கதுமையுடன் பேயேறி
பஞ்சு பஞ்சாக பழுதுபடக் கோதியதே
கோதும் பொழுது கொல்லிமலை யாளரெல்லாம்
கண்டு அலங்கரித்து கதுமையுடன் ஓடிவந்து
ஆணொருவர் பெண்ணொருவர் அத்தனையும் ஓடிவந்து
ஆலோல் மென்று அதட்டியே கல்லெறிந்து
வாயால்தட்டி வலது கையாக் கல்லெறிந்து

குல்லலை யிட்டுக் குலவையிட்டுக் கல்லெறிந்து
அப்படியே தானும் அதட்டி எறியயிலே
பயந்து எழுந்ததில்லை பஞ்சவர்ணக் கிளிகளெல்லாம்
தினைப்புனங்க ளுள்ளதெல்லாம் தூள்பொடி யானதுவே
எதுபுதுமை யென்று மலையாளர் அத்தனையும்
பொழுது விடிந்து பகல்முப்பது நாழிகையும்
போட்டுச் சலித்தாலும் பொன்கிளிகள் போறதில்லை
இன்னாள் வரைக்கும் இதுபுதுமை கண்டதில்லை
என்றுமிகச் சலித்து மலையாளர் நிற்கையிலே
ஆழிநெடுந் தேரேறி அலைகதிரோன் போய்மறைந்து
அப்போது மலையாளர் அத்தனைபேருங் கூடி
பெரியபட்டக் காரனுடன் *அருக்கையிட வேணுமென்று
ஏழநாடு மாசிமலை இனம்பெரியநல்ல தம்பிக்கவுண்டனுக்கு
அருக்கையிட வேணுமென்று அனைவோருந் தானடந்தார்
ராத்திரியேபோய் நாட்டார்க்கு அருக்கை யிட்டார்
வேணுமென்ற பந்தம் விதமுடனே தான்கொழுத்தி

## நல்லதம்பியிடம் மலையாளர் அருக்கையிடல் :

நடந்தார் மலையாளர் நல்லதம்பி தன்னருகே
வந்துகண்டு தெண்டநிட்டார் மலையாளர் எல்லோரும்
தெண்டநிட்ட பேரை திக்கென்று தானெடுத்து
வந்த வயணமென்ன வகையுடனே சொல்லுமென்றார்
கொல்லிமலை நாடு கொள்ளைபரி யாகுதய்யா
மலைநாட்டி லுள்ள வனம்பெரிய சென்னலெல்லாம்
வந்து விளைந்ததய்யா வர்ணலட்சம் பொற்கிளிகள்
தினைப்புனங்க ளுள்ளதெல்லாம் சேர அளிக்குதய்யா
எங்களா லானமட்டும் போட்டுச் சலித்தமையா
அதிர்ந்து பறந்ததில்லை அந்தவன பொற்கிளிகள்
ஆருபண்ணுந் தீவினையோ அறியமுடி வேணுமென்றார்
கண்டயறி வேணுமென்றார் காரிளைய நல்லதம்பிக்கவுண்டன்
அந்தநல்ல வேளையிலே அரவதடி வேலைக்காரன்
வாதுப் புதுக்கருப்பன் மந்திரியும் ஓடிவந்து
செவ்வேங்கை கருவேங்கை சேர்ந்ததொரு புலிகள்
வருகவென்று சொல்லி மந்திரித்தா ரன்னேரம்
மலைநாட்டி லுள்ள வான்புளிக ளத்தனையும்
செவ்வேங்கை கருவேங்கை சேர்ந்துவந்து தெண்டநிடும்

---

*அருக்கையிடல் — முறையிடல்

தெண்டநிட்டு வாய்புதைத்துச் செவ்வேங்கை அத்தனையும்
எங்களைநீர் அழைத்த எத்தபணி விடையேது
சொல்லுமென்று சொல்லி செவிதாழ்ந்து கேட்கையிலே
வாதுபெரி யண்ணன் வாயதிர்ந்து ஏதுரைப்பார்
வாரு மிருகேந்திரனே வாய்மொழியைக் கேட்டருளும்
இன்னுள் வரைக்கும் இந்தமலை நாட்டிலேதான்
மலையாளர் உங்களைத்தான் மந்திரித்து வாய்கட்டி
வாய்கடம் மந்திரித்து வழியொதிக்கி விட்டார்கள்
கொல்லிமலை நாட்டில்க் கொம்பையிட மலையில்
பசியார விட்டாமல் பறக்கத் துரத்தி விட்டார்
நிலக்காடு பொயலவோ ஆகாரங் கொண்டியளே
இப்பவும் ஆனுல்கால் இந்தச் சினத்திலேதான்
தடைக்சுட்டு மந்திரத்தைத் தடையே முறித்துவிட்டேன்
விடிந்து கதிரோன் வெளிப்படும் முன்பாக
கொல்லிமலை நாடு கொள்ளையிட்டு வாருமென்ருர்
பட்டிக்கொரு மாடொளிய மட்டுமிஞ்சி நில்லாதே
என்றுசொல்லி உத்தாரவ கைகொடுத்தார் ஆண்டவனுர்
கருப்பணன் அப்போது கரிக்குருவி வேஷமிட்டார்
கறவைப்பசுங் கொம்பிலேதான் கரிக்குருவி போயேற
கண்டு மிரண்டதுங்காண் கறவை பசுக்கலெல்லாம்
காலா லுதைத்துங் கலையமது தானுடைத்து
காளை எருதுகளும் கால்மாறிக் கொண்டிடுமாம்
சீறி எதிர்த்துச் சினத்தகண்ணுல் பார்த்திடுமாம்
பால்கறக்க வந்தவனைப் பாய்ந்து துரத்திடுமாம்
ஒருநாலு மில்லாத உபத்திரவ மென்றுசொல்லி
பால்க்கலையந் தானுடைத்து பதறி வழிநடந்தான்
ஊருக்கு நான்போய் உரைக்கவேனும் இச்செய்தி
வருகும் பொழுது மலைநாட்டு பெருவேங்கை
வழியை மறித்து விலகிவிட்டுத் தானதம்பும்
கண்டு மலையாளன் காட்டில் முறிஞ்சோடி
காட்டில் நுழைந்து கடுகளவே ஓடிவந்து
கவுண்டனுடன் வந்து கனக்க முறையிட்டார்கள்
தினைப்புனங்க ளானுல் சேர அழிந்ததிப்போ
பட்டி பால்மாட்டை படுவேங்கை பாய்ந்ததிப்போ
கரக்கும் பசுக்களெல்லாம் கலையமுடைத்த திப்போ
சீறி எதிர்க்குதுகாண் சினத்தகண்ணுல் பார்க்குதுகாண்
பால்கறக்க வந்தபேரை பாய்ந்து துரத்ததுகாண்
பட்டியில் மாடு பழிக்காரன் ஆச்சுதிப்போ
கண்டு பயந்து காட்டுவழி வருகையிலே

காட்டுத் தடத்திலேதான் கருவேங்கை தானுமிப்போ
வாய்விட்டு தானதம்பி மலைநாடு தத்தளிக்க
கண்டு பயத்துவந்தேன் காரணமே வென்றுசொல்லி
அப்படியுந் தானுந் அருக்கையிட வருகையிலே
கங்குல் விடிந்து கதிரோன் எதிராக
ஆழிநெடுஞ் தேரேறி அலைகதிரோன் வருகையிலே
மலைநாட்டி லுள்ள மலையாளர் அத்தனையும்
காரணந்தா னென்றுசொல்லி கண்டறிய வேணுமென்று
நாட்டுக்கு நாடு நலமாக ஆள்விட்டு
சீட்டுயெழுதி அச்செணமே போகவிட்டார்
ஓலைகண்ட நாளிகையிலே ஒருநொடியில் வந்தார்கள்
கொங்குலாயி சோலையிது கருங்குளத்துப் பாறையிது
திட்டாத்து பாறைவழி தெக்கடியில் கூட்டமிட்டார்.
வந்துமிகத் தெண்டநிட்டார் மட்டங்கா சேனைதளம்
வந்துமிகக் கூட்டமிட்டார் மட்டங்கா கோடிதளம்
பாணிச்சுப் பார்த்தார்கள் பாரிலுள்ள தேவரெல்லாம்
மலையாளர் கூட்டமென்றால் மட்டிடவுங் கூடாது.
இத்தனையும் வந்து இந்நாட்டில்க் கூட்டமிட்டார்
புகைச்சுருட்டும் எச்சிக்கும் போருட்ட மெத்தவுண்டு
உபத்திரவ மாகாது உலகமெச்சுங் கொங்குலாயி
இந்நாடு விட்டு மறுநாடு போவோமென்று
ஊருமுடி நன்னாடு உசந்தகுண்ணுச் செயலூரு
செயலூரு நன்னாடு சிறந்தகொலுச் சாவடியில்
சித்திரச் சாவடியும் சிறந்தகொலு மேடையின்மேல்
வந்துமிகக் கூட்டமிட்டார் மலையாளர் எல்லோரும்
பட்டத்துக் கவுண்டன் பாங்கான நல்லதம்பி
தலையை அசைத்து தடுமாற்றங் கொள்ளுறதை
மலைநாட்டில் இப்போது வந்த கலக்கமெல்லாம்
எண்ணமென்று சொல்லி பார்க்கவே வேணுமென்றார்
மேலைநாட்டுக் கோணங்கி மனசறிந்து தானிருப்பான்
மனசறியாக் கோணங்கி வரவழைக்க வேணுமென்றார்
நாட்டுவழி கோணங்கி நலமுடனே கூட்டிவந்தால்
காரியங்க ளெல்லாங் கண்டறிந்து சொல்வான்காண்
என்றுசொல்லி மலையாளர் எல்லோருந் தான்பேசி
கோட்டாளு ரெண்டுபேர் துருசாய் அனுப்பிவிட்டார்
செயலூரு நன்னாடு சினத்திலே விட்டிறங்கி
ஊருமுடி நன்னாடு ஒருசினத்தில் விட்டிறங்கி
சேருடி மூலையது சினத்திலே விட்டிறங்கி
தெற்கலுந் தான்கடந்து தென்பாறை ஓட்டும்விட்டு

கருங்கல்லுப் பட்டிவழிக் கதுமையுடன் விட்டிறங்கி
வாதையடிக் கொம்பை வகையுடனே தான்கடந்து
சந்தைப் புழிகடந்து சதுரகிரி விட்டிறங்கி
செங்குளத்துக் கொம்பைவழி சினத்திலே வருகையிலே
அப்போதுந் தானும் ஆதிபெரி அண்ணனுந்தான்

## பெரிய அண்ணன் கருப்பன்சாமி வேடம் பூணுதல்

என்ன வடிவமது எடுத்தா னொருசினத்தில்
நெற்றித் திலகமது நீரணிந்த பாவனைபோல்
பட்டு உருமாலே கட்டியே சித்திரம்போல்
முன்கை முதாரிமுன்ன முழுக்கடையஞ் சோதிமின்ன
தங்கக் கடையமின்ன தாயத்துஞ் சோதிதின்ன
கணையாழி மோதிரமும் கதுமையுடன் தானணிந்து
திண்டும் யிரம்புத் திருநீற்றுக் காப்பணிந்து
சித்துடுக்குங் கைப்பிடித்து ரத்தினக்கம்பளியுந் தோள்போட்டு
சொட்டாளு முன்பாகத் துரைமகனு மப்போது
ஒய்யாரக் காரன் ஒயிலழகன் தானுமப்போ
உல்லாச நடைநடந்து ஒயிலழகன் முன்னேவந்தான்

## கருப்பன்சாமி மலையாள நாட்டிற்கு வருதல்

கண்டு மலையாளர் கனபிரிய முண்டாகி
எந்த ஊரய்யா இங்குவந்தீர் இப்போது
காவிரிக் கரையோரங் கதித்ததொரு காட்டுவழி
கோணங்கிக் காரனென்று குறித்தான் துரைமகனும்
வாருமய்யா இப்போது வந்த அலுவலென்ன
கொல்லிமலை நாடு கொம்பை அடங்கலும்
சொல்லுந் சுதந்திரமும் செயக்குறுணி மெத்தவுண்டு
அதற்காக நானும் அன்புடனே வந்தேன்காண்
என்றுசொல்லி அண்ணன் எடுத்துமிக உரைத்தான்
வந்த மலையாளர் வாய்மொழியைக் கேட்டுநின்று
வாருமையா கோணங்கி வாய்மொழியைக் கேட்டருளும்
மேலே மலையிலுள்ள விதமான கவுண்டர்களும்
செயலூரு நன்னாட்டில் சிறக்கவே கூட்டமிட்டார்
கோணங்கிக் காரர்களைக் கூட்டிவா வென்றுசொல்லி
எங்களையுந் தானும் இங்கே அனுப்பிவிட்டார்

வந்தமையா இப்போ மலைநாட்டை விட்டிறங்கி
கும்பிடப் போனதெய்வம் குறுக்கேமிக வந்தாப்போல்
வந்தீர்களோ இப்போது வாருமையா வென்றுசொல்லி
மேலை மலையிலுள்ள எல்லை யடங்கலுமே
சொல்லுஞ் சுதந்திரமும் செயக்குறுணி உண்டுபண்ணி
கட்டளையு மிட்டுக் கவுண்டர்களுந் தானுரைப்பார்
வாருமய்யா வென்று வரிசையுடன் தானழைக்க
அப்போது கோணங்கி அன்புடனே ஏதுரைப்பான்
நாட்டுவழிக் கோணங்கி நலமுடனே பார்த்துரைப்பேன்
மலைநாட்டில் நானுங் கோணங்கி சொன்னதில்லை
மலையாளர் தன்னுடைய மந்திரங்கள் மெத்தவுண்டாம்
பில்லியுடன் மந்திரமும் புகைமருந்து சூனியமும்
மருந்துவித்தைக் காரரே எனக்குக்கேள்வி நடவாது
என்றுசொல்லி அன்னேரம் எடுத்துமிக உரைத்தார்
நல்லதய்யா கோணங்கி நலமாக நீயுரைத்தாய்
மந்திரங்கள் உண்டானால் இந்தமலை நாட்டில்தானே
வாளினால் சங்கரித்து வரையாலே தள்ளிடுவோம்
அப்படியும் தங்குதடை வருகாது மலைநாட்டில்
வாருமையா யென்று வரிசையுடன் தானழைக்க
மலைமேலே ஏறி வந்ததில்லை ஒருநாளும்
கல்லுவழிக் நெடுகக் கருமலையுங் குண்டுகளும்
ஏறிவர மாட்டானென்று இதமுடனேத் தானுரைத்தார்
அப்போதுந் தானும் அந்தமலை யாளருந்தான்
நல்லதடம் பார்த்து நானழைத்துப் போரேனய்யா
என்று மலையாளன் இதமுடனே தான்பேசி
வாருமைய்யா வென்று வரிசையுடன் தானழைக்க
நல்லதென்று சொல்லி நடந்தான் தனிக்கருப்பன்
கொல்லிமலை நாட்டில் குதித்துமிக ஏறிவந்து
செயலூரு நன்னாட்டில்ச் சிறந்தகொலுச் சாவடிக்கி
வந்தார்கள் மூவருமாய் வகையுடனே அன்னேரம்
கண்டு மலையாளர் கடுகவே எழுந்திருந்து
கவுண்டர்கள் எல்லோருங் கைகுவித்தா ரன்னேரம்
வாருமையா வென்று விரிசையுடன் தானழைத்து
இருந்ததொரு ஆசனத்தை விட்டுயிடங் கொடுத்தார்
சதிரிலே வந்தான் தார்வேந்தன் அப்போது
வாருமையா கோணங்கி வார்த்தைசொல்லக் கேட்டருளீ
ஒருகோணங்கி கேள்வி பார்க்கவேணு மென்றுரைத்தார்
என்று மலையாளர் எல்லோருந் தானுரைக்க

**மலைநாட்டில் நடந்த அழிவுக்கு தீர்வு கேட்டல் :**

இந்த நாட்டில் நடந்தததொரு நியாயமெல்லாம்
கண்டதொரு நியாயமெல்லாங் கதுமையுட நீயுரைத்தால்
சீரெடுத்துப் பார்த்துச் சிந்தை தெளிய வைத்தால்
இந்தமலைநாட்டில் உங்களுக்கு மானியங்கள் உண்டுபண்ணி
சொல்லுந் சுதந்திரமுஞ் செயக்குறுணி உண்டுபண்ணி
வரிசையாய் உந்தனுக்கு வகையாய் அமர்த்திவிப்போம்
என்றுசொல்லி மலையாளர் எல்லோருந் தானுரைக்க

**கருப்பன்சாமி உடுக்கை அடித்து, மறுமொழி கூறல்**

வாதுபெரி யண்ணன் வகையுடனே தான்பார்த்து
திக்கெங்கும் பார்த்து திசையெங்கும் உச்சரித்து
நாலுதிசை பார்த்து நாடியே அன்னேரம்
இரத்தினக்கம்பளி ஆசனத்தை கடுகளவே தான்விரித்து
ஆசனத்தின் மேலே அடவாகத் தானிருந்து
சிவசிவா வென்றுசொல்லி சிந்தையிலே தானினைந்து
மகாதேவா வென்று மனதிலே உச்சரித்து
அப்போதும் அந்த மலையாளர் நல்லதம்பி
நாலு திசையினிலும் நலமுடனே தெண்டநிட்டு
அரிபிளவு வெற்றிலையும் அன்புடனே முன்னேவைத்து
கவுண்டர்க ளெல்லோரும் கதுமையுடன் தெண்டநிட்டு
அப்போதுந் தானும் ஆதிபெரிய அண்ணருந்தான்
சித்துடுக்கைத் தானெடுதது்ச் சீரெடுத்தா ரன்னேரம்
உடுக்கை மிகத்தட்டி உச்சரித்தா ரன்னேரம்
முந்தி விநாயகனே முக்கணனே போற்றியென்று
சந்தி விநாயகனே சற்குருவே போற்றியென்று
குருவே நினைந்தேன் குஞ்சரமே முன்னடவாய்
அம்மனுட சீர்பாதம் அடிவணங்கித் தொண்டநிட்டேன்
அங்கயற்கண் அம்மனையுட அன்புடனே உச்சசித்து
மீனாட்சி அம்மனையும் விதமுடனே உச்சரித்து
கேட்ட வரத்துக்குங் கேள்விக்கு முன்னடவாய்
மனைத் துலங்கு மய்யா மகாகணபதியே
உடுக்கை மிகத்தட்டி உச்சரித்தா ரன்னேரம்
அதட்டியே அண்ணனுந்தான் ஆனமனு வேதுரைப்பான்
குல்லலை யிட்டு குலவையிட்டா ரன்னேரம்
கேளுமடா தம்பி கிருபையுடன் நீங்களுந்தான்
சொல்லுமய்யா வென்று செவிதாழ்ந்து கேட்டார்கள்

காமாட்சி தேவிக்கு பூசை போடச் சொல்லுதல் :

வடக்கே வடகாஞ்சி வைகுந்தப் பதவியைப்போல
காஞ்சி வனமென்று கம்பைநதி தோணுதுகாண்
கொடியதவம் பெற்ற கோபாலன் தங்கையவள்
சத்திக்கம்பை காமாட்சி தாயாள் பரமேஸ்வரியாள்
தவசுநெடு நாளிருந்து சங்கரருங் கண்டுமெச்சி.
மகாதேவர் வந்து மாலையிட்டு அன்னேரம்
காஞ்சிபுரம் பட்டணத்தைக் கதுமையுடன் பூசைகொண்டு
தென்காஞ்சி நாடு தேசமெல்லாம் பூசைகொள்ள
ஈசுபரருந் தேவியரும் இணைசோடாய் காணுதுகாண்
முப்பத்து முக்கோடி தேவர்களுந் தான்கூடி
செட்டிச் சடாமுனியுஞ் செங்கம லாடமுனியும்
அகத்திய மாமுனியும் அங்கண் முரங்கப்பன்
லாடப்பன் சன்னாசி நாரத மகாமுனியும்
கனக சபைக்கெல்லாங் கதுமையுடன் தளகர்த்தன்
புதுக்கருப்ப ணண்ணனென்றும் தளம்பெரிய கோடையிடி
இந்தமலை நாட்டில் இன்பமுடன் பூசைகொள்ள
மாதுகம்பை காமாட்சி மாசிமலை வந்திறங்கி
மகாதேவர் எல்லோரும் வகையுடனே வந்திறங்கி
தேவிகம்பை காமாட்சி திருவுளமு மேதுரைப்பாள்
வாதுக்கருப் பண்ணரையும் வருகவென்று தானழைத்து
அப்போது அண்ணரும் அன்புடனே ஓடிவந்து
மாதாவின் பாத மலர்த்தூவித் தெண்டநிட்டார்
என்தாயே மாதாவே எனக்களித்த பணிவிடையென்ன
ஏதென்று சொல்லி இன்பமுடன் தான்கேட்க
வாருமடா தம்பி மட்டடங்கா கோடையிடி
மாசிமலை நன்னாட்டில் நாமாளவந்த தொருகதிதன்னை
ஆரு மறிந்ததில்லை அன்புடனே பூசைகொள்ள
மலையாளர் எல்லோரும் மனதறியக் கலக்கமிட்டு
குடிகுடியே கலக்கங் கூக்குரல்கள் உண்டுபண்ணி
வருக வென்றுசொல்லி வகையுடனே தானனுப்ப
மலைநாட்டி லுள்ள வரிசையுள்ள சென்னலெல்லாம்
வாதுப் புதுக்கருப்பன் வகையுடனே அன்னேரம்
பறமா றருட்சியெல்லாம் பாங்குடனே தானழைத்து
தினைப்புனங்க ளுள்ளதெல்லாம் சேரவே கொள்ளையிட்டு
மலைநாட்டி லுள்ள மட்டடங்கா வேங்கையிது
பட்டியில் மாட்டைப் பழுதுபடப் பாய்ந்தாற்போல்
கறக்குமொரு காலியெல்லாங் காலுதறிப் போனாற்போல்

போர வழியிலேதான் மலைநாட்டுப் பெருவேங்கை
படுத்து அதம்புதுகாண் பார்மலை எல்லையெங்கும்
மலைநாட்டி லுள்ள வரிசையுள்ள கவுண்டமக்கள்
தலைகத்தி ஆடுதுகாண் தப்பாமல் இப்போதும்
இந்தமலை நாட்டில் இக்கலக்க மாகுதுகாண்
ஏதென்று சொல்லி இதமுடனே கேட்கவந்தீர்
என்றுசொல்லி அண்ணன் இதமுடனே தானுரைக்க
அந்தமிகச் சேதி அன்புடனே தான்கேட்டு
மலைநாட்டி லுள்ள மலையாளர் எல்லோரும்
கோணங்கி சொன்ன வசனமது தான்கேட்டு
நல்லதய்யா பூசாரி நலமுடனே நீயுரைத்தீர்
கண்டதொரு நியாங் கதுமையுடன் சொல்லிவிட்டீர்
இனிமேலும் நாங்கள் நடக்குமொரு நியாயமென்ன
என்றுசொல்லி மலையாளர் எல்லோருந் தானுரைக்க
மாசிமலை நாட்டில் மகிமையுள்ள பூங்காவில்
அகடுகல்லுத் தகடுபாறை வெங்கலப் பாறையது
சுற்றிநிழல் சாய்ந்திருக்கும் பாங்கா னசோகுவனம்
சந்தனத் தடாகமது தாமரைப் பொய்கையது
தீர்த்தத் துரையது திருமஞ்சனநீர் பொய்கையது
ஆருமனதி லேயும் அமர்ந்திருக்கும் கொங்குவனம்
அப்பெரிய மேல்த்தளத்தில் ஆதிகம்பை காமாட்சி
வெம்புல்த் தோலாசனத்தை விதமுடனே தான்விரித்து
வந்து கொலுவிருந்தாள் மாதுகம்பைக் காமாட்சி
கண்டு கைமுகிஞ்சு கனகசபை உண்டுபண்ணி
திட்ட முடனே சிறப்பித்தா ராமாகில்

## கருப்பன்சாமிக்கும் பூசைபோடச் சொல்லுதல் :

எட்டுநாள் தான்கழித்து இயல்பெரிய அண்ணருக்கு
மாசிமலை அண்ணனென்று மண்டலத்தோர் கொண்டாட
ஆடுபன்றி கோழியுடன் அதிகமுள்ள அண்ணருக்கு
கொண்டுவந்து பூசை கொடுத்ததே மெய்யானல்
மலைநாட்டில் லிப்போது வந்த கலக்கமெல்லாம்
தீர்த்துக் கொடுப்பேன் தேவிகம்பை காமாட்சி
என்றுசொல்லிக் கோணங்கி இயல்பாகத் தானுரைக்க

## மலையாளர் பூசைபோட சம்மதம் கூறல்

அப்போது மலையாளர் அன்புடனே ஏதுரைப்பார்
வாருமையா சுவாமி வார்த்தைசொல்லக் கேட்டருளும்

ஈசுபரியுங் காமாட்சி இசகுபிசகு ஞாயமென்றாள்
வாதுபெரி யண்ணனுட மனக்கவுடு மெய்யானால்
எங்களுக்கு வந்த இசகுபிசகு தான்தீர்த்தாள்
அழிஞ்ச தினைப்புனங்கள் அதிகபலன் தான்கொடுத்தால்
காட்டுப் பெருவேங்கை கலக்கமிட்டு வந்ததெல்லாம்
கறக்கும் பசுக்களெல்லாங் காலுதறி நின்றதெல்லாம்
குடிகுடியே வந்த கலக்கமது தீர்ந்ததென்றால்
கண்டு கைமுகிஞ்சு கனத்ததொரு பூசையிட்டு
கொண்டாடிப் பூசையிட்டு குலதெய்வ மென்று சொல்லி
வைத்துமிகப் பூசிப்போம் மலையாளர் எல்லோரும்
என்றுசொல்லி மலையாளர் எல்லோருந் தானுரைக்க
அப்போது கோணங்கி ஆக்கரித்து ஏதுரைப்பான்

## நாடுசெழிக்க கருப்பன்சாமி உறுதி கூறல்

வெள்ளாண்மை செந்நெல் அழிஞ்சுதென்று சொல்லியடி
அழிஞ்சதொரு செந்நெல் அதிகபலன் தான்கொடுத்தோம்
ஒன்றுக்கு ஐந்தாக்கிச் செந்நெல் விளையுமிப்போ
என்றுசொல்லி கோணங்கி இதமுடனே தானுரைக்க
கங்குல் விடிந்து கதிரோன் எதிராக
ஆழிநெடுந் தேரேறி அலைகதிரோன் தோன்றியதே
அழிந்த புனத்தருகே அனைவரும் போய்ப்பாரும்
ஒன்றுக்கு அஞ்சி அதிகமுடன் தானிருந்தாள்
மெய்யென்று சொல்லி அறிந்துகொள் வென்றுரைத்தார்
நல்லதென்று சொல்லி நலமுடனே எல்லோரும்
அழிஞ்ச புனத்தருகே அனைவோரும் போய்ப்பார்த்தார்
எப்போதும் விளையாடி செந்நெல் விளைந்ததிப்போ
கண்டுமனம் கிடந்து கனபிரிய முண்டாகி
என்றுசொல்லி மலையாளர் எல்லோருங் கூடிவந்து

## தேவிக்குப் பூசையிட மலையாளர் ஆயத்தம் செய்யு நாள் குறித்தல்

தேவிகம்பை காமாட்சி தெய்வலோகப் பார்வதி
கண்டு கைமுகிஞ்சு கதுமையுடன் பூசைசெய்ய
வாருங்க ளென்றுசொல்லி வரிசையுடன் எல்லோரும்
மாசிமலை நன்னாட்டில் வந்துமிக்க கூட்டமிட்டார்
தேவிகம்பை காமாட்சி தேவிக ளெங்கேயென்று
பார்த்து மலையாளர் பாறைவந்து சேர்ந்தார்கள்

பாறையைச் சுற்றி பாங்கான கொங்குவனம்
அத்திக் கவிந்ததொரு சூழ்ந்ததொரு பூஞ்சோலை
சந்தனத் தடாகமது தாமரைப் பொய்கையது
பூங்கா வனமும் புளியவனச் சோலையது
செண்பகப்பூ மலரும் பூத்துச் சிதறிநிற்கும்
முல்லை யிருவாட்சி முகமலராச் செண்பகப்பூ
கொத்தரளி முத்துருள கொடிமல்லிப் பூச்சொரிய
ஈழத்தரளி இதழ்பிரிஞ்சு பூத்து நிற்கும்
எலுமிச்சை நாரத்தை இனிய பிலாவுமது
தேக்க மரமும் தேக்கடியே கண்டுமெச்சும்
மாசிமலை அய்வனம்போல் மகிமையிலுங் கண்டதில்லை
என்றுசொல்லி மலையாளர் எல்லோரும் மனமகிழ்ந்து
வளரும் பிறையழகி மாதுகம்பை காமாட்சி
சொல்பெரிய ஈசுவரிக்குத் தேவதலங்க ளாகுமென்று
மாசிமலை யென்றுமரு மண்டலத்தோர் கொண்டாட
கர்த்தன் கைலாசர் கனகசபைக் காகுமென்று
ஆகுமென்று அனைவோரும் சம்மதித்தார்
ஆட்சிக்கம்பை காமாட்சி அதிகமுடன் பூசையிட
எட்டு நாளென்று இதமாய்க் குறித்தார்கள்

## அம்மனுக்கு பூசை மண்டபம் அலங்கரித்தல் :

ஆட்சா மரம்பிளந்து அடிபிளந்து வந்துவிட்டு
தேக்க மரத்தடியே தெகுலடியே செப்பனிட்டு
நிறைக்கொரு கொடிதூண் நிழலாடத் தூணிருத்தி
பவளக்கால் போலே பருவயிரத் தூணிருத்தி
போதிகையும் உத்திரமும் போதிநிழ லாட
வாச மிகுந்த வயிரமுள்ள தேக்குவெட்டி
திட்ட முடனே சேதிக்குமிகச் செப்பனிட்டு
சட்டம் பரப்பிச் சதிராகப் பந்தலிட்டு
பச்சைநவ ரத்தினம்போல் பாங்கான மூங்கிகொண்டு
நாத்தி பரப்பி நாட்சதிரம் பந்தலிட்டு
கரும்பாலே கால்நிறுத்தி பூவாலே பந்தலிட்டு
தெக்கோலை கொண்டுவந்து திறமாக மேஞ்செறங்கி
சுற்றி நிரைத்தார்கள் சுழிக்காற்று வீசாமல்
பொன்தூணும் போதிகையும் போதநிழ லாட
தூணுக்கு தூனது சோதிவிடுஞ் சித்திரங்கள்
காலுக்கு காலு கால்விளக் கெரிய
தூணுக்கு தூணு தூண்டா விளக்கெரிய

சித்திரமும் பூச்சரமும் சிறக்கவே உண்டுபண்ணி
வாழைக் கரும்பு வான்கமுகுந் தானாட்டி
பூவால் அலங்கரித்துப் பூச்சரமாய் மேஞ்சாப்போல்
நெட்டி மலர்சரங்கள் நீதியுடன் தொங்கவிட்டு
நாரத்தங் கனிச்சரங்கள் இதமுடனே தொங்கவிட்டு
பாக்குச் சரங்கள் பக்கமெல்லாந் தொங்கவிட்டு
கொத்திளநீர் கொண்டுவந்து கோர்வையிடத் தான்தூக்கி
கருவாழைப் பழத்தைக் கதுமையுடன் கொண்டுவந்து
சீப்புப் பழமாகச் சிறக்கவே கோர்வையிட்டு
பந்தலிட்டுங் கொள்ளாமல் பாங்குடனே தான்தூக்கி
மல்லிகை முல்லை மருவோ டிருவாட்சி
முல்லை யிருவாட்சி முகமலராச் செண்பகப்பூ
கொண்டுவந்து மலையாளர் கொத்துச் சரமளிக்க
பூச்சரங்கள் விட்டு பூவால் அலங்கரிக்க
பூப்பந்தல் இட்டு பொருந்தி யலங்கரித்து
போட்டதொரு திண்ணயது பொன்னுருவி விட்டாப்போல்
பந்தம் பளபளென பந்தக்கால் சோதிமின்ன
கைலாசக் கிரியதுபோல் கதுமையுடன் சோடித்தார்

## மலையாளர் பூசைக்கேற்ற பொருட்கள் சேகரித்தல்

பூசைக்கி ஏத்த புதுமையுள்ள தானுலுப்பை
கொண்டுவர வேணுமென்று எல்லோருந் தானடந்தார்
கோடான கோடி கோடிலட்சம் செங்கரும்பாம்
பத்துலட்சங் கோடி பஞ்சவர்ண ரஸ்தாளி
எட்டுலட்சங் கோடி இளநீரோ கண்திறந்தார்
குதிரைத் தாம்போல கோடிலட்சங் செவ்விளநீர்
கொத்தோடே மாங்கனியும் குலைநெரியத் தேங்காயும்
வேரில்ப் பழுத்ததொரு வெடிக்கும் பலாச்சுளையும்
கொம்பில்ப் பழுத்ததொரு கோதுபடா மாங்கனியும்
கருவாழைப் பழமும் கணக்கிடவுங் கூடாது
லாடங்கனிப் பழமும் நல்லவெல்லஞ் சர்க்கரையும்
மொந்தம் பழமும் மூவாயிரங் கோடி
படைக்கநல்ல தேங்காய் பத்துநூ றுயிரமாம்
உடைக்கநல்ல தேங்காய் ஒன்பதுநூ றுயிரமாம்
கனிவகைகள் தானும் கணக்கிடவும் போகாது
உயர்ந்த குமுடேறிப்பாத்து தேக்கிலையை கல்லையென்றார்
கருவாழைத் தோட்டமது கதுமையுடன் போய்நுழைந்து
ஐநூறு சனத்தில் ஐநூறு சுமையிலையை

கொண்டுவந்து அச்செணத்தில் குமித்தார் மலைபோல்
கட்டோட வெற்றிலையுங் கமுகோ டிளம்பாக்கு
ஈழத்துப் பாக்கும் இளங்கொடிக்கால் வெற்றிலையும்
அரிபிளவு வெள்ளிலையும் அன்புடனே கொண்டுவந்தார்
காலமே எழுந்திருந்து காலுமுகஞ் சுத்திபண்ணி
தோட்டந் திறந்து தொன்னைத்தச்சு பூவெடுத்தார்
மல்லிகை முல்லை மருவோ டிருவாட்சி
நந்தியா வட்டம் நாருங் கொளுந்தொடும்
அடுக்கரளி செண்பகப்பூ ஆனமரிக்கொழுந்து
கொத்தரளி முத்துருள் கொடிமல்லிகைப் பூவெடுத்து
மந்தாரை பிட்சி மருவோ டிருவாட்சி
வெட்டிவேர் மருக்கொழுந்தும் விதமான மல்லிகையும்
செந்தாமரைப் பூவும் சிவந்திமலர் தானெடுத்து
வில்லைமலர் துளசி விலைமதியாத் தும்பைமலர்
ஆயிரம் இதழ்பிரியும் அல்லிமலர்த் தானெடுத்து
வர்ணமாயிரம் கோடி வாசமுள்ள புஷ்பமெல்லாம்
எடுத்தா ஞெரு சினத்தில் ஏழுலட்சம் பூக்குடலை
மலையாள நல்லதம்பி மலரெடுத்துக் கொண்டுவந்து
புஷ்ப மெடுத்துப் பூப்பந்தலிலே வந்துநின்று
கொல்லிமலை நாடு எல்லை அடங்கலுமே

## அம்மனுக்குப் பொங்கலிடுதல்

இருக்குமந்த மலையாளர் எல்லோருந் தான்கூடி
குடிக்கொரு பானைபொங்கல் கொண்டுவந்து வையுமென்றார்
அந்தச் செணமே அனைவோருந் தான்கூடி
புதுப்பாண்டந் தானெடுத்து புதுமையுடன் பொங்கலிட்டு
அந்தநல்ல வேளையிலே ஆனதொரு நல்லதம்பி
அலங்காரப் பந்தலிலே அன்புடனே வந்துநின்று
புதுசாய் அலங்கரித்து பூட்சரங்கள் தான்தூக்கி
செண்பகப்பூ சரங்கள் சிறக்கவே உண்டுபண்ணி
காலுக்குக் கால்லு கால்விளக் கெரிய
குத்து விளக்குங் கொழுந்துபட ஏற்றிவைத்து
பத்துமுகத் தீவெட்டி பாங்குடனே தானெரிய
தோரண விளக்குகளுந் துருசுடனே ஏற்றிவைத்து
பந்தம் பிளந்தெரிய பகவத்தி தான்துலங்க
விளக்காயிரங் கோடி வியரிதமாய்த் தானெரிய
கைலாச கிரியதுபோல கதுமையுடன் தானுமப்போ
பூவால் அலங்கரித்துப் பூஷணமாய் மேய்ந்தாற்போல
சிங்கா சனத்தை சிறப்பாய் அலங்கரித்து

வாழை கரும்புகளும் வரங்கரும்பு தானட்டி
பூப்பந்த லிட்டுப் பொருந்தி யமைத்தபின்பு

**அம்மனுக்குப் பள்ளையம் போட்டுப் பூசை இடுதல்:**

அந்தச் சிணமே ஆனதொரு நல்லதம்பி
மகாதீர்த்த மாடி மயிர்முடித்துப் பின்போட்டு
சிவசிவா வென்றுசொல்லி திருநீற்றுக் காப்புமிட்டு
அலங்காரப் பந்தலிலே அன்புடனே வந்துநின்று
கருவாழை யெலையைக் கதுமையுடன் தானெடுத்து
அஞ்சு வகுத்தெடுத்தான் ஆயிரஞ்சுமை யெலையை
பிரிய முடனேதான் பூக்குடலை தானெடுத்து
பூப்பள்ளையம் போட அப்பனையே வென்றுசொல்லி
நாட்டிலே உள்ள நல்லார் பெரியோரை
கேட்டானே நல்லதம்பி கிருபையுடன் அன்னேரம்
கேட்ட உடனே கிருபையுடன் எல்லோரும்
அப்பனை தானென்று அனைவோருந் தானுரைத்தார்
பொன்னீருஞ் செம்பிலைதான் புதுநீருங் கொண்டுவந்து
தீர்த்தஞ் சொரிந்தான் திறமுடனே நல்லதம்பி
ஏழுலட்சம் பூக்குடலை எடுத்தா னுருசினத்தில்
மகாதேவா வென்று மனதிலே உச்சரித்து
சத்திக்கம்பை காமாட்சி தாயேபர மேஸ்வரியே
என்று மனதிலெண்ணி இன்பமுடன் நல்லதம்பி
பூமலருந் தானெடுத்துப் பிரியமுடன் தான்போட்டான்
சிவசிவா வென்று சொல்லி சிந்தையிலே தானினைந்து
மாசிமலை அன்னரென்று மனதில்மிக நினைந்து
வாதுப் புதுக்கருப்பை மனதிலே உச்சரித்து
மனதிலே தானினைந்தான் மலையாள் நல்லதம்பி
மட்டடங்கா அண்ணனென்று மனதில் நினைத்தவுடன்
மருளாக உச்சரித்து மலையாள நல்லதம்பி
எடுத்தா னுருசினத்தில் ஏழுலட்சம் பூக்குடலை
வர்ணமாயிரம் புஷ்பம் வகையுடனே தானெடுத்து
புஷ்ப மெடுத்துப் பூமலரை தான்சொரிந்தான்
எட்டுலட்சம் பானை இதமாகத் தான்எடுத்தான்
பூம்பானை கொண்டு பிரியமுடன் தான்படைத்து
அரிபிளவு வெள்ளிலையும் அன்புடனே தானெடுத்து
ஈழத்துப் பாக்கும் இளங்கொடிக்கால் வெற்றிலையும்
கட்டோடு வெற்றிலையும் கமுகோ டிளம்பாக்கும்
அரிபிளவு வெள்ளிலையும் அன்புடனே தானெடுத்து

எட்டுலட்சங் கோடி இளநீர் கண்திறந்து
உடைக்கநல்ல தேங்காய் ஒன்பதுநூ ராயிரமாம்
படைக்கநல்ல தேங்காய் பத்துநூ ருயிரமாம்
தேங்காய் உடைத்து திட்டமுடனே படைத்து
சாம்பிராணி தூபதீபம் சம்பிரமுடனே கொடுத்து
கருவாழை யிலையறுத்து கதுமையுடன் கொண்டுவந்து
அஞ்சா வகுந்தெடுத்து அஞ்சுலட்சங் கோடியிலே
இலைக்கிப் பன்னீரு இதமுடனே தான்தெளித்து
பொங்கலிட்ட சாதம் பிரியமுடனே தானெடுத்து
படைத்தா னெருசினத்தில் பாங்குடனே அன்னேரம்
கோடிலட்சங் செங்கரும்பு கொய்து கருணையிட்டு
பத்துலட்சங் கோடிகும்பம் பானகந் தான்படைத்து
வேரில்ப் பழுத்ததொரு வெடிக்கும் பிலாச்சுளையும்
கொம்பில்ப் பழுத்ததொரு கோதுபடா மாங்கனியும்
முந்திரி நற்கனியும் முதிர்ந்த பிலாச்சுளையும்
லாடம் பழமாம் நல்லவெல்லஞ் சர்க்கரையும்
முக்கனியுஞ் சர்க்கரையும் மூவாயிரங் கோடி
கருவாழைப் பழமும் கணக்கிடவுங் கூடாது
பச்சைநாடாம் பழமும் பத்துநூ ருயிரமாம்
அமரங்கனி பழமும் அன்பதுநூ ருயிரமாம்
தேனுந் தினைமாவும் தித்திக்கு மாங்கனியும்
வேணுமென்ற பதார்த்தம் விருப்புடனே படைத்து
சாம்பிருணி தூபதீபம் சம்பிரமுடனே படைத்து
கற்பூர ஆரத்திக் கதுமையுடன் தானெடுத்து
மலையாள நல்லதம்பி வகையுடனே தான்பார்த்து
மலைநாட்டி லுள்ள மலையாளர் எல்லோரும்
குடிகுடியே எல்லோருங் கூட்டமிட்டு வாருமென்றுர்
நல்லதென்று சொல்லி நாட்டாருங் கூட்டமிட்டு
வந்துமிக நின்றுர்கள் மலையாளர் எல்லோரும்
எல்லோருங் கூடி இதமுடனே ஏதுரைப்பார்
ஏகாம்பர நாதர் ஈசுவரனே என்றுசொல்லி
கச்சி உமையவளே கம்பைநதி காமாட்சி
காஞ்சிபுரம் வாழும் கைலாச வீரசத்தி
தில்லைப் பசுங்கிளியே தேரேறும் பார்பதியே
அன்னப் பசுங்கிளியே அருங்கிளியே காமாட்சி
வாதுப் புதுக்கருப்பே மகாவரம் பெற்றதுரை
அம்மனுட வாசலுக்கு வாசல்பிரதாணி அண்ணன்
அண்ணன் தனிக்கருப்பன் அரவதடி வேலைக்காரன்
தெக்கமலை அண்ணனுட சீர்பாதந் தானினைந்து

செட்டி சடாமுனியே செங்கமல லாடமுனியே
அகத்திய மாமுனியே அங்கண் முரங்கப்பண்
லாடப்பன் சன்னசி நல்லமகா முனியே
நாரதமகா முனியே நலமுடனே தானிணைந்து
அல்லித்தண்டு பூண்நூலும் அரசுமக்கள் ராசாவே
சுருளமுப்பத்து முக்கோடி தேவர்கள் சீர்பதம்
தேவர்கள் சீர்பாதஞ் சிந்தையிலே தானிணைந்து
அனைவோரும் வந்து அன்பாய் அமுதுசெய்யும்
அறிந்துமிகச் செய்தோமோ தெரியாமல் செய்தோமோ
கொண்டு பொறுத்து குடிகாக்க வேணுமையா
உபசரித்தான் நல்லதம்பி ஒருசாம வேளைமட்டும்
சரணஞ் சரணமென்று சாமந்தான் திருமுடியை
காணுகிறேன் காணுகிறேன் கனகமுடி பொற்பாதம்
என்றுசொல்லி மலையாளர் எல்லோருந் தான்பணிந்தான்

## அம்மன் அருள்வந்து, வரம் அளித்தல்

அப்போது நல்லதம்பி மருளாக உச்சரித்து
திருவாய் மலர்ந்தருளி திருவாக்கு எதுரைப்பான்
கொல்லிமலை நாடு குடியிருக்கும் பாலகரே
நீங்கள் அன்பாய்கொடுத்தமுது அனைவோர்க்குஞ் சம்மதித்தான்
கேட்ட வரத்துக்குங் கேள்விக்கு முன்னடந்து
பக்கத் துணையாக பக்கதேவி தானிருப்போம்
மாசிமலை நாடு மகாபூசை செய்தீர்களே
எண்ணும் பதினாறு யீடேறி வாழ்ந்திருப்பீர்
என்றுசொல்லி அம்மன் இதமுடனே தானுரைக்க
அம்மனுட பூசை அன்பாய் முடிந்தபின்பு

## கருப்பன்சாமிக்கு நாட்குறித்து பூசை இடல் :

வாதுபெரி யண்ணனுக்கு வகையாய்த் தனிப்பூசை
செய்வோ மென்றுசொல்லி தேதிவைத்தா ரெல்லாரும்
தனிப்பூசை செய்யத் தரவநிலை யெங்கையென்று
மலைநாட்டி லுள்ள மலையாள ரெல்லோரும்
கூட்டமிட்டு நல்லதம்பி குண்ணருகே வருகையிலே
மாசிமலைக் குண்ணருகே மாவிருண்ட சோலையது
குண்ணருகே தானுமங்கே குடைகவிழ்ந்த ஆலுமது

படர்ந்ததொரு பாறையும் பதிசேர்ந்த பூங்காவும்
வற்று தருஞ்சுனையும் எட்டா தரும்பாளி
ஆட்சா மரமும் அடர்ந்ததொரு மாஞ்சோலை
பச்சைப் புளியும் பருத்த பிலாமரமும்
அல்லி மலர்ந்ததொரு அருஞ்சுனையைக் கண்டுமெச்சி
தேக்கமலை அண்ணனென்று தேசத்தார் கொண்டாட
ஆணைவ மாகுமென்று அனைவோருங் கண்டுமெச்சி
மாசிமலை அண்ணருக்கு மகாபூசை செய்யவென்று
எட்டு நாளென்று இதமாய்க் குறித்தார்கள்
ஆடுபண்ணி கோழியுடன் அதிகமுள்ள பூசையென
தட்டி முரசெறிந்தார் சதுரகிரி எல்லையெங்கும்
ஆட்சா மரம்பிளந்து அடியளந்து பந்தலிட்டு
தேக்க மரம்பிளந்து சிங்காரப் பந்தலிட்டு
மூங்கில் மரம்பிளந்து முழுவயிரத் தூணிருத்தி
நிரைக்காயிரந் தூணு நிழலாடத் தானிருத்தி
காலுக்குக் காலு கால்விளக் கெரிய
தூணுக்கு தூணு சோதிவிடுஞ் சித்திரங்கள்
பத்தம் பிளந்தெரிய பசுவத்தி தான்துலங்க
பச்சைநல்ல பந்தலிட்டு பாங்காய் அலங்கரித்து
பூப்பந்த லிட்டு பூங்கமுகு வாழைகட்டி
வாளைக் கரும்பும் வாங்கமுகுந் தானட்டி
பூப்பந்த லிட்டுப் பொங்கமுடன் காலிருத்தி
தேக்க மரத்தடியே தெகுலடியே செப்பனிட்டு
ஆட்சா மரத்தடியே அரவதடி வேலூணி
மாசிமலை அண்ணருக்கு வகையாய் நிலைநிறுத்தி
அம்மனுட சமுக்கமது அன்பாய் நிலைநிறுத்தி
கொன்னை மரமும் கொடைக்கவிந்த ஆலருகே
அழகுதேவ ருயருக்கு அன்பாய் நிலைநிறுத்தி
மாவடியில் பூசைகொண்டு மகிழ்ந்து கொலுவிருக்கும்
பூசைக் கருத்தன் புதுக்கருப்பன் சன்னதியும்
சூலாயுதம் நிறுத்தி துருசாய் நிலைநிறுத்தி
தேவர்கள் பந்தியெங்கே சிறப்பாய் மத்தியங்கே
மலையாள நல்லதம்பி வகையுடனே அப்போது
காலமே எழுந்திருந்து காலுமுகஞ் சுத்திபண்ணி
தோட்டம் திறந்து தொன்னைதைத்துப் பூவெடுத்து
அடுக்கரளி செண்பகப்பூ ஆனமருக் கொழுந்தும்
மந்தாரைப் பிட்சி மருவோ டிருவாட்சி
முல்லை யிருவாட்சி முகமலராச் செண்பகப்பூ
நந்தியா வட்டம் நாருங் கொழுந்தொடும்

ஏழத் தரளி இதழ்பிரியாச் செண்பகப்பூ
தும்பைமலர் துளசிமலர் சுகந்தம் பனிநீரும்
செவந்தி மலரும் செகத்திலுள்ளப் பத்திரமும்
வர்ணலட்சம் பந்திரமும் வகையுடன் தானெடுத்து
மலையாள நல்லதம்பி மலரெடுத்துக் கொண்டுவந்து
சதுர கிரியிலுள்ள மலையாள ரெல்லோரும்
குடிக்கொரு பானைகிடாய் கொண்டுவந்து வையுமென்றார்
அந்தப் படியே அன்புடன் கொண்டுவந்து
மலையாளர் எல்லோரும் வகையுடனே பொங்கலிட்டார்
அந்தநல்ல வேளையிலே ஆனதொரு நல்லதம்பி
பச்சைநல்ல பந்தலிலே பாங்காய் மணல்பரப்பி
பொன்னீருஞ் செம்பிலேதான் புதுநீருங் கொண்டுவந்து
தீர்த்தஞ் சொரிந்தான் திறமுடனே நல்லதம்பி
பெரியண்ணன் சன்னதிக்குப் பூப்பள்ளையம் போடவென்று
நாட்டா ருடனே நலமுடனே தானுரைக்க
அப்பனே தானென்று அனைவோருந் தானுரைக்க
நல்லதென்று சொல்லி நலமுடனே அன்னரேம்
எடுத்தா னுருசினத்தில் ஏழுலட்சம் பூக்குடலை
மகாதேவி ஈசுபரியே மனதிலே உச்சரித்து
ஆதிபெரி யண்ணன் அரவதடி வேலைக்காரன்
வாதுப் புதுர்கருப்பன் வரங்கள் பெற்றதுவும்
என்று மனதிலெண்ணி இதமுடனே நல்லதம்பி
வாரி எடுத்தான் வர்ணலட்சம் பூக்குடலை
பூமியிடங் கொள்ளமால் பூவைமிகச் சொரிந்தான்
பத்துலட்சம் பூம்பாலை பாங்குடனே தானெடுத்து
பூம்பாலை கொண்டுவந்து பூவால் அலங்கரித்து
கமுகு யிளம்பாக்கும் காம்பரிந்த வெற்றிலையும்
கட்டோட வெற்றிலையும் கமுகோ டிளம்பாக்கும்
பச்சைநல்ல கற்பூரம் பாங்குடனே காம்பரிந்து
கற்பூரம் வெற்றிலையை காம்பரிந்து முன்னேவைத்து
அரிபிளவு வெற்றிலையும் அன்புடனே தான்படைத்து
பத்துலட்சஞ் செவ்விளநீர் பாங்குடனே கண்திறந்து
செவ்விளநீர் கொண்டு சிறப்பாய் அலங்கரித்து
ஒடைக்கநல்ல தேங்காய் ஒன்பதுநூ றுயிரம்
படைக்கநல்ல தேங்காய் பத்துநூ றுயிரம்
கொத்தோடு மாங்கனியும் குலையோ டிளம்பாக்கும்
கனியாயிரங் கோடி கதுமையுடன் தான்படைத்து
விந்தை யுடனே விதமான செங்கரும்பை
கொண்டுவந்து அட்செனத்தில் கொய்து கருணையிட்டு

பத்துலட்சம் ரஸ்தாளி பாங்குடனே கருணையிட்டு
கருப்பங் கருணைகொண்டு கதுமையுடன் தான்படைத்து
கருவாழை யிலையறுத்து கதுமையுடன் கொண்டுவந்து
அஞ்சாய் வகுத்தெடுத்துதான் ஐநூறு சிமையிலையை
இலைக்குப் பன்னீரும் இதமுடன் தான்தெளித்து
பொங்கலிட்ட சாதம் பிரியமுடன் தானெடுத்து
படைத்தா ஞெருசினத்தில் பந்தயிடங் கொள்ளாமல்
மொந்தங்கனி பழமும் முதிர்ந்த பிலாச்சுளையும்
லாடங்கனி பழமும் நல்லவெல்லஞ் சர்க்கரையும்
கொம்பில் பழுத்ததொரு கோதுபடா மாங்கனியும்
தேனுந் தினைமாவும் தித்திக்கும் மாங்கனியும்
பஞ்சா மிர்தமுடன் பாங்குடனே தான்படைத்து
வேணுமென்ற பதார்த்தம் விதமுடனே தான்படைத்து
சாம்பிராணி தூபதீபம் சம்பிரமுடனே படைத்து
கற்பூர ஆலாத்திக் கதுமையுடன் தானெடுத்து
தீபம் அரங்கேற்றி திறமுடனே கைமுகிஞ்சு
அம்மனுட பந்திமட்டும் அன்பாய்த் திறைவளைத்து

## ஆடு, பன்றி பலியிடல் :

மலையாள நல்லதம்பி வாய்திறந்து ஏதுரைப்பாள்
ஆதிபெரி யண்ணன் அன்புடனே காவுகொள்ள
ஆடுபன்றி கோழியுடன் அதிகமாய் வந்ததெல்லாம்
கொண்டு வருகவென்று கூறினுர் நல்லதம்பி
ஆடுபன்றி கோழியுடனே அஞ்சுலட்சங் கோடிகிடாய்
சன்னதிக்கு முன்பாகக் கொண்டுவந்து தானிருத்தி
மலையாள நல்லதம்பி வகையுடனே அன்னேரம்
பெரியண்ணன் சன்னதியில்ப் பூமலரைத் தானெடுத்து
பெரியதொரு நாட்டான் பிரபலமாய் கொண்டுவந்து
ஆடுபண்ணி கோழியுடன் அதிகமுடன் அத்தனைக்கும்
பூவைமிகப் போட்டுப் புதுநீரைத் தான்சொரிந்தார்
தீர்த்தஞ் சொரிந்தவுடன் திரமுடனே தானுலுக்க
வெட்டருவாள்த் தானெடுத்து விதமுடைய நல்லதம்பி
வெட்டு மென்றுசொல்லி விடைகொடுத்தா ரன்னேரம்
அஞ்சுலட்சங் கோடிகிடாயி அதிகமுடன் காவுமிட்டார்
பன்றி அறுத்து பாங்குடனே காவுமிட்டார்
கோழி அறுத்து குலவையிட்டு அன்னேரம்
சுடுவான கரியும் துருக்கமுடன் தான்படைத்து
சாம்பிராணி தூபதீபம் சம்பிரமுடனே கொடுத்து

சந்தனத் தூபம் சம்பறமுடனே கொடுத்து
திக்கும் வாசம்வீசுந் திசைக ளெட்டும்
இடதுகையில்ப் பூசைமணி வலதுகையில்த் தூபதீபம்
தீபம் பறிமாறித் தீர்க்கமுடன் நல்லதம்பி
நாட்டிலுள்ள மலையாளர் நல்லோர் பெரியோர்கள்
எல்லோருங் கூடி இதமுடனே வாருமென்று
வாருமென்று சொல்லி வகையுடனே தானுரைப்பார்
அனைவோருங் கூடி அன்டனே வந்துநின்றார்
வாதுபெரி யண்ணனையும் அடிவணங்கித் தெண்டநிட்டு
தெண்டநிட்டு வாய்புதைத்து எல்லோரும் நிற்கையிலே
மலையாள நல்லதம்பி மருளெரி யுட்சரித்து

**கருப்பன் அருள்வந்து, வரமணித்தல் :**

சன்னதம் வந்துதப்போ ஏதுரைப்பான் தான்வாக்கு
வாய்திறந்து அன்னேரம் மலைநாடு தானதிர
அதிகமிக ஏதுரைப்பான் ஆனதெரு நல்லதம்பி
மாசிமலை நாட்டில் வைய்யகத்தார் தானரிய
முப்பூசை தான்கொடுத்துக் கைமுகிஞ்சு ..................
எண்ணும் பதிறு ஈடேறி வாழ்ந்திருப்பீர்
கொல்லிமலை சதுரகிரி எல்லைத் தழைத்திருக்க
மாரி பொழிந்து சென்னல் விளையுமிப்போ
மலையாள ரெல்லோரும் வாய்திறந்து ஏதுரைப்பார்

—:0:—

அகிலாண்டவளுடைய கிருபையுண்டாகவும்.
விசாலட்சியுடைய பாதாரவிந்தமேகெதியாக வேணும்.
விசுவாவிசு வருடம் புரட்டாசிமாதம் வேருயம்
பாளையத்திலிருக்கும் பள்ளிக் குடத்தான் காமாட்சியம்மன்
தவசு எழுதினது முற்றும்.




தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
சரசுவதி மகால் நூலக அச்சகம்